நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

# சரிநிகர்

සරිනිහර්

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


இதழ் 182 ஒக். 14 – ஒக். 27 1999 விலை ரூபா 10. 00.



## மலையகக் கல்வியின் எதிர்காலம்



## பாசிசத்தை நோக்கி பேரினவாதம்!



## சமாதானத்தை எதிர்த்து இராணுவம்!

நன்றி - நூலகத்திட்டம்



## இரணவில:
## வொய்ஸ் ஒவ் அமெரிக்கா மீண்டும் பிரச்சினை

இரணவிலவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வொய்ஸ் ஒவ்ஃ அமெரிக்காவின் தொலைத் (VOA-Voice Of America) தொடர்பு நிலையம் மீண்டும் பலவித எதிர்ப்புகளுக்குள்ளாகி உள்ளது.

மாதம்பையிலுள்ள தினிப்பிற்றி விகாரையின் காணியில் இந்நிலையத்தின் கழிவுப் பொருட்கள் புதைக்கப்பட்டது தொடர்பாக அக்கிராமத்து மக்கள் கொதித்தெழுந்துள்ளனர். இந்நிலையத்திலிருந்து கொண்டு வந்து இங்கு புதைக்கப்படும் ரசாயன கழிவுப்பொருட்களால் பல்வகையான நோய்கள் மலிந்துள்ளதாக அப்பிரதேசமக்கள் கூறுகின்றனர்.

இந்நிலையத்திலிருந்து கொண்டு வரப்படும் கழிவுப்பொருட்களை விகாரை உள்ள காணியில் புதைப்பதற்கான அனுமதியை விகாரைக்குப் பொறுப்பாக உள்ள விமலவன்ச தேரர் வழங்கியிருப்பதாக வொய்ஸ் ஒவ் அமெரிக்காவின் நிலையத்தோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறியுள்ளனர்.

உண்மையில் இந்நிலையத்திலிருந்து வெளிவரும் கழிவுப் பொருட்களை அமெரிக்காவுக்குக் கப்பலில் அனுப்பி வைப்பதென்றே ஆரம்பத்தில் கூறப்பட்ட போதும் பின்னர் கழிவுகளின் பாதகமான விளைவுகளை மட்டுப்படுத்திய பின்னர் அவை இங்கேயே புதைக்கப்படுவதற்கு ஏற்பாடாயிற்று.

வழமையாக இங்கு கொண்டு வந்து அப்புறப்படுத்தப்படும் கழிவுப்பொருட்களில் இருந்து மக்கள் ஆணி தகரப்பொருட்கள் போன்றவற்றை சேகரிப்பதற்குக் கூடுவதுண்டு. இதுகாலவரை இத்தகைய கழிவுகள் அப்புறப்படுத்தும் நடவடிக்கை மிக வெளிப்படையாகவே நடைபெற்று வந்தன.

ஆனால் கடந்த செப்ரெம்பர் மாதம் 9ம் திகதி நடைபெற்ற சம்பவம் வேறாய் இருந்தது. அன்று விகாரை காணியில் பெரியளவில் குழிபறிப்பதற்கான யந்திரம் காணப்பட்டது. பாரிய குழிபறித்த பின்னர் அடுத்த நாள் பத்து பெருங் கொள்கலன்களில் கொண்டு வரப்பட்ட கழிவுகள் அங்கே புதைக்கப்பட்டன.

முக்கிய விஷயம் என்னவெனில் இந்த ஆபத்தான கழிவுகளை இங்கே புதைப்பதற்கு அனுமதி வழங்கியவர் இவ்விகாரையின் பிரதான புத்த பிக்குவான விமலவன்ஸ தேரராவர். இக்கழிவுகள் இங்கே புதைக்கப்பட்ட பின்னர் அப்பகுதியிலுள்ள 12 நாய்கள், நான்கு பசுமாடுகள் இறந்து போயினவென்றால் மக்களை இது எவ்வாறு பாதிக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

கொல்லாமைக்கு புது வியாக்கியானம் கொடுக்கும் சோமே தேரர் இவ்விகாரையின் விமலவன்ச தேரரின் நடத்தையை எவ்வாறு விளக்குவார்? அப்பிரதேச மக்கள் ஆவலாய் உள்ளனர்.

"அமெரிக்காவின் குரல்" ஒலிபரப்பு நிலையம் வெறும் ஒலிபரப்பு நிலையமல்ல அதற்குப்பின்னால் பல மர்மங்கள் இருக்கிறதென்று சரிநிகர் 1993இலிருந்து பல விபரங்கள் அடங்கிய கட்டுரைகளை வெளியிட்டிரு வந்திருக்கிறது.

இவ் ஒலிபரப்பு நிலையத்துக்கு எதிராக நடத்தப்பட்ட இயக்கத்துக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் ஆட்சிக்கு வருமுன் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா தலைமை தாங்கினார் என்பதும் அதன் பின்னர் இதே அமெரிக்காவின் குரலை தொடர்ந்து நடத்த மட்டுமல்லாது மேலும் பல காணிகளை ஒதுக்கினார் என்பதும் தெரிந்ததே.

## திருமலை:
## சமாதான நகரா? பதற்ற நகரா?

அக்டோபர் முதலாம் திகதி திருகோணமலையிலுள்ள அனுராதபுரச் சந்தியில் காவல் நிலையம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதைத் தொடர்ந்து, திருக்கோணமலை நகரின் காவல் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அன்புவழிபுரத்தைச் சேர்ந்த நபர் ஒருவரது வாகனத்தைக் கடத்திய விடுதலைப் புலிகள், கச்சிதமாகத் தங்கள் காரியத்தை முடித்து விட்டு அன்புவழிபுரப் பாடசாலையொன்றினுள் அந்த வாகனத்தைக் கைவிட்டுச் சென்றதையடுத்து, வாகனம் அரச படைத் தரப்பாரால் மறுதினம் கைப்பற்றப்பட்டதோடு, உரிமையாளரும், சாரதி, கிளீனர் ஆகியோரும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, மட்கோ என்ற சிங்களக் குடியேற்றப் பகுதியைச் சேர்ந்த ஊர்காவல் படையினர், பாலையூற்று என்ற தமிழ்க் கிராமத்தில் நுழைந்து சண்டித்தனம் செய்திருக்கின்றார்கள். தாக்கப்பட்ட காவலரணுக்குப் பின்புறமாகப் பாலையூற்று அமைந்துள்ளது என்பதும், அதற்கடுத்து மட்கோ அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அம்பாறைக் குடியேற்றக் கிராமம் தாக்குதலுக்குள்ளானதையடுத்து, திருக்கோணமலைப் பகுதியிலும் ஊர்காவல் படையினருக்கு உற்சாகமூட்டப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. புதியவர்களும் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த ஊர்காவல் படையைச் சேர்ந்தோர், மாலையானதும் தெருச் சந்திகளுக்கு வந்து விடுகின்றார்கள். மட்கோச் சந்தி, ஜமாலியாச் சந்தி, மரத்தடிச் சந்தி போன்றவை இவர்கள் அதிகமாகக் காட்சியளிக்கும் இடங்களாகும். செயற்கையாகத் தோற்றுவிக்கப்பட்ட மிடுக்கோடு, வருவோர், போவோரும் தமிழர்களிடம் சண்டித்தனமான கேள்விகளைக் கேட்பது இவர்களுக்குப் பொழுது போக்காகி விட்டது. இவர்களின் கேள்விகளுக்கு உள்ளாகுபவர்கள் ஏற்கெனவே இவர்களுக்கு நன்கு அறிமுகமான முகங்களே என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஊர்காவல் படையினரின் மிடுக்கும், அட்டகாசமும் மக்கள் மத்தியில் அதிருப்தியையும், வெறுப்பையுமே ஏற்படுத்துகின்றது. நகரப் பகுதியில், எந்தப் பிரிவு மக்களின் பாதுகாப்புக்காக, ஊர்காவற்படை இயங்குகின்றது என்று கூறப்படுகின்றதோ, அந்தப் பிரிவு மக்கள் கூட இவர்கள் நடவடிக்கையையிட்டுக் கவலை கொண்டவர்களாகவே இருக்கின்றனர். இலகுவான வருமானம் என்பதால், கவரப்பட்டு, ஊர்ச்சனத்தின் வெறுப்பைச் சம்பாதிக்கின்றார்கள் இவர்கள் என்ற கருத்தே அந்தந்தச் சமூகம் சார்ந்த பெரியவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

சமாதான நகர் என்று பிரகடனப்படுத்தப்பட்டதன் அர்த்தம் கெட்டுப் போய்ப் பதற்ற நகராகவே, இன்று திருக்கோணமலை காட்சியளிக்கின்றது. ஊர்காவல் படை வீரர்களது ஆயுதங்களும், பயிற்சிகளும் சாதாரண தமிழ் மக்களுக்கு மாத்திரமின்றி வேறெதற்கும் பயன்படப் போவதில்லை என்பதே இன்றைய நிலவரம்.

## உள்ளாடையயையும் சரிபார்ப்பார்ப்பார்களோ ?

கல்முனை காரைதீவு அதிரடிப் படைமுகாம், வீதித்தடையில் ஒரு வயோதிபர் தன் சைக்கிளை உருட்டியபடி தள்ளாடி வருகிறார். பரிசோதனைச் சாவடியை அண்மித்ததும், ஒரு சிப்பாய் அவரை அக்குவேறு ஆணிவேராக பரிசோதிக்கின்றான். அவரின் "ஷெர்ட்" மேல் பொத்தான் கொளுவப்படாமல், கவனயீனமாக விடப்பட்டிருப்பதைப் பார்க்கிறான். ஒழுக்கத்தின் பாதுகாவலனான அந்த சிப்பாய்க்கு ரோஷம் வருகிறது. தன் தகப்பனையொத்த அவரை மிரட்டுகிறான். "ஓய் என்னடா ஷேர்ட் பொத்தான் கழண்டிருக்கு. இதெல்லாம் பூட்டிக் கொண்டு வரவேணும் சரியா?" என்று அதட்டுகிறான். அவனின் சகாக்கள் ஒரு அரை 'நிக்கருடன்' வீதியோரம் குளிப்பது பற்றியோ, பெண்களை காணும்போது அந்தரங்கத்தை அசிங்கமாகக் காட்டுவது பற்றியோ அவனுக்கு கவலையில்லை. அதுவெல்லாம் இராணுவ உயர் நல்லொழுக்கமாக போற்றப்படுகிறது. ஒரு தமிழ் வயோதிபனின் ஷேர்ட் பொத்தான் கழன்றிருந்தால் மட்டும் இவர்களின் ஒழுக்க மாண்பு விழித்துக் கொள்கிறது. போகிற போக்கில் மக்களின் உள்ளாடையும் சரியாக அணியப்பட்டிருக்கிறதா என இந்த அரசின் இராணுவம் பரிசீலித்து, அறிக்கை சமர்பிக்கும் போல தெரிகிறது. அதை கேட்டுக் கொண்டிருக்கத்தான் சுரணையற்ற தமிழ் முஸ்லிம் எம்.பி.மார் இருக்கினமே பிறகென்ன கவலை?

-ஷாமா

## டக்ளசுக்கு வாழ்த்துக்கள்!

திவயின பத்திரிகை செய்திகளைப் படித்து வருகிற தமிழ் முஸ்லிம் மக்களுக்கு அது எத்தகைய ஒரு நோக்கத்துடன் தனது செய்திகளை வெளியிட்டு வருகிறது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

சிங்கள இனவாதம், பயங்கரவாத ஒழிப்பு என்ற பேரில் யுத்தப் பிரச்சாரம், தமிழர்கள் அனைவருமே பயங்கரவாதப் போக்குள்ளவர்கள் அல்லது புலிகள் என்று எழுதும் வெறி போன்றன அதன் நோக்கங்கள்.

தமிழர்களை இந்த நாட்டில் 'வைக்கிற இடத்தில் வைக்க வேண்டும்' என்று கூறும் வீர விதான அமைப்பின் அரசியல் பிரச்சாரத்தை சுயாதீனமாக செய்துவரும் பத்திரிகை அது.

அதன் ஆங்கில சகோதர இதழான ஐலண்ட் பத்திரிகைக்கும் இதுதான் நோக்கம். ஆனாலும் சிங்கள வாசகர்களை விட ஆங்கில வாசகர்களை ஏமாற்றுவதற்கு கொஞ்சம் "புத்திஜீவித மெருகுடன்' பொய்களையும், புனை சுருட்டுகளையும் எழுத வேண்டும் என்று நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறது அது.

தனது வழமையான பொய்க்கதைகளை உண்மையானவை போல புனைகிற வேலையில் இம்முறை டக்ளசை இழுத்து விட்டிருக்கிறது அது. அவருக்கு புலிகளுடன் தொடர்பு இருப்பதாகவும், புலிகளுடன் அவர்களது கட்சி இரகசிய பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும் ஒரு செய்தியை வெளியிட்டது.

திவயின பத்திரிகையை படிப்பவர்களுக்கு இது ஒன்றும் ஆச்சரியப்படுகிற செய்தியல்ல. முழுத் தமிழர்களும் புலிகள் என்று கருதுகிற ஒரு பத்திரிகைக்கு டக்ளஸ் புலிகளுடன் தொடர்பு வைத்திருக்கிறார் என்று எழுதுவதற்கு என்ன தயக்கம் வேண்டி இருக்கிறது.

5 கோடி ரூபா மான நஷ்டம் கோரி அப்பத்திரிகைக்கு கடிதம் எழுதியிருக்கிறாராம் டக்ளஸ்.

தனது கட்சியின் 'நன்மதிப்பை களங்கப்படுத்தவும் செல்வாக்கை மாசுபடுத்தவும்' திட்டமிட்டு அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது என்பது அவரது வாதம்.

வாழ்த்துக்கள்! நஷ்ட ஈடு அவருக்கு கிடைக்கட்டும். ஆனால் ஒரு கேள்வி,

சிங்கள வாசகர்கள் மத்தியில் 'நன்மதிப்பும்' செல்வாக்கும் டக்ளசின் கட்சிக்கு எவ்வளவு காலமாக இருந்தது?

புலிகளுடன் பேசுவதால் 'மாசுற்றுப் போகும்' அளவிலான செல்வாக்கு அவரது கட்சிக்கு இருந்ததாக எந்த ஆதரங்களை வைத்து அவர் சொல்கிறார்?

திவயினவுக்கு எதிராக ஒரு வேளை டக்ளஸ் வழக்கு தொடர்ந்தால், நீதிமன்றத்தில் இவை கேட்கப்படுமோ என்னவோ, நிச்சயமாக தமிழ் மக்கள் கேட்பார்கள்.

புலிகளுடன் பேசுவதில் உண்மையில் 'களங்கம்', 'மாசு' எல்லாம் ஏற்படுவதல்ல, அவரது அன்புக்குப் பாத்திரமான எசமானர்களின் 'எரிச்சல்' ஏற்பட்டுவிடும் என்ற பயம்தான் அவரை இப்படிக் கோபம் கொள்ள வைத்திருக்கிறது இது ஒன்றும் ஊகிக்க முடியாத விடயம் அல்ல!

புலிகளுடன் பேசுவதை சிங்களத் தலைவர்களே - எதிர்க்கட்சித் தலைவரே வலியுறுத்துகிறபோது, இப்படி டக்ளசிற்கு 'மான நஷ்டம்' ஏற்பட அந்தச் செய்தியில் அப்படி என்னதான் இருக்கிறது என்று புரியவில்லை.

ஆயினும், அவரது மான நஷ்ட வழக்கு வெல்ல எமது வாழ்த்துக்கள். கிடைக்கும் 5 கோடியையும் தமிழ் மக்களது நலனுக்காக பயன்படுத்துவார் என்று எதிர்பார்க்கிறோம்!

## தினகரனின் நகைச்சுவை!

" பயங்கரவாதத்தை ஒழிக்க அமெரிக்காவும், இந்தியாவும் ஆலோசனை " என்ற தலைப்பில் தினகரன் பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

தினகரன் பத்திரிகைச் செய்திகளில் இப்போதெல்லாம் பல நகைச்சுவைத் துணுக்குகளைக் காணக் கூடியதாக இருப்பது பற்றி வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும். அரசாங்கம் பற்றி, அரசாங்க நடவடிக்கைகள் பற்றி அது எழுதும் செய்திகள் வாசகர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அந்த வகையில் இந்தச் செய்தியும் சேர்க்கப்பட வேண்டிய ஒரு செய்தியாக வந்து சேர்ந்திருக்கின்றது.

உலகப் பயங்கரவாதத்தின் ஊற்று மூலம் அமெரிக்கா என்றால், தென் ஆசியப் பிராந்தியத்தில் பயங்கரவாதத்திற்கான விளை நிலமாக இருப்பது இந்தியா.

இன்று இலங்கையில் " பயங்கரவாதிகள் " என்ற பெயரால் " வாழ்த்தப்படும் " தமிழ்ப் " பயங்கரவாதிகளை " உருவாக்குவதில் அது ஆற்றிய பங்கு சொல்லித் தெரிய வேண்டியதில்லை. விடுதலைப் போராளிகளின் போராட்ட வன்முறைக்குப் பயங்கரவாத வடிவம் கொடுத்த பெருமை இந்தியாவுக்கே சேரும்.

இந்தியாவில் இந்துப் பயங்கரவாதத்தை வளர்த்து வருவதில் அது காட்டும் அக்கறையும் சாதாரணமானதல்ல.

ஆக, அமெரிக்காவும், இந்தியாவும் சேர்ந்து பயங்கரவாதத்தைச் சமாளிக்க ஆலோசனை நடத்துவதாகக் கூறினால் யாருக்குத்தான் சிரிப்பு வராது ?

நன்றி - நூலகத்திட்டம்



# வவுனியா: குண்டுவெடிப்பும் குழப்பங்களும்!

வவுனியா பஸ் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கு யார் சூத்திரதாரி, அல்லது யார் அந்தக் குண்டுவெடிப்பை நடத்தியது என்பது புரியாத புதிராக இருக்கின்றது.


குண்டுத் தாக்குதல்களோ அல்லது துப்பாக்கிச் சூடுகளோ விடுதலைப் புலிகளினால் இராணுவத்தினருக்கு எதிராக அல்லது இராணுவத்தினரால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்தப்படுவதே வழக்கம். அதுதான் இன்று நம்நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற யுத்தச் செயற்பாட்டின் போக்காக இருக்க வேண்டும். ஆனால், கடந்த 9 ஆம் திகதி மழைபெய்து ஒய்ந்திருந்த வேளையில், படையினரோ பொலிசாரோ இல்லாத பஸ்நிலையப் பகுதியில் இந்தக் குண்டுவெடிப்பு நடைபெற்றுள்ளது.

பஸ் நிலையப்பகுதி ஆள் நடமாட்டமின்றி ஒய்ந்திருந்த நேரம் அது. பஸ்கள் எதுவும் கூட அங்கு இல்லாத நேரம். பஸ் நிலைய கடை உரிமையாளர்கள் தமது கடைகளைப் பூட்டிக்கொண்டு வீடுகளுக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். இருந்தாலும், ஒற்றை மாடியைக் கொண்ட இந்த பஸ் நிலையத்தின் உட்புறப்பகுதியில் மக்கள் ஒன்றிரண்டு பேர் காணப்பட்டார்கள். அப்போது, பொதுமகன் ஒருவருடைய வதிவிடப் பொலிஸ் பாசை, பஸ் நியைப்பகுதியில் இருந்து உண்கின்ற சிறுவன் ஒருவன் களவாக எடுத்து வைத்துக் கொண்டு, உரிமையாளர் தனது பாஸைப் பெறவேண்டுமானால், 300 ரூபா பணம் தரவேண்டும் என்று நிபந்தனை விதித்த சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில், சிவிலுடை பொலிசாரும் அங்கு கடமையில் இருந்துள்ளார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலேயே, குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மாலை 6.45 மணியளவில் இடம் பெற்ற இந்தக் குண்டு வெடிப்பை பலர் நேரில் கண்டுள்ளார்கள். பஸ் நிலையத்தின் மேல் மாடியில் இருந்து கைக்குண்டு ஒன்று வீசப்பட்டதன் காரணமாகவே, இந்தக்குண்டு வெடிப்பு நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குண்டு வெடிப்பு நடைபெற்ற உடனேயே, அங்கு கடமையில் இருந்த பொலிசார் அனைவரும் முதலில் தமது பாதுகாப்புக்காக நிலை எடுத்துள்ளார்கள். குண்டு வெடிப்பு நிகழ்ந்து, சுமார் 5 அல்லது 10 நிமிடங்கள் சென்ற பின்னரே, சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்து யார் குண்டை வெடிக்க வைத்தது என்று காயமடைந்தவர்களை விசாரணை செய்துள்ளார்கள்.

இந்தச் சம்பவத்தில் 11 பேர் காயமடைந்துள்ளார்கள். இவர்களில் கே.கந்தையா (49) என்ற அரசாங்க ஊழியரான எழுதுவினைஞர் படுகாயமடைந்த நிலையில், இப்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார். இவருடன் மோட்டார் சைக்கிளில் வந்து காயமடைந்து அனுராதபுரத்திற்கு மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த செல்லம்மா என்ற ஆசிரியை வவுனியா வைத்தியசாலைக்குக் கடந்த திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

"பாடசாலை அதிபருக்கான பரீட்சை எழுதி விட்டு, என்னைக் கூட்டிச் செல்வதற்காக வந்த எனது கணவருடன், பஸ் நிலையத்தில் உள்ள பலசரக்குக் கடையொன்றில் பயறு வாங்கிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் ஏறி, கே.பி.கே. சென்ரர் கடைக்கு முன்னால் சென்று கொண்டிருந்த போது, ஏதோ வெடித்த மாதிரிச் சத்தம் கேட்டது. மோட்டார் சைக்கிளில் இருந்த நானும் எனது கணவரும் கீழே விழுந்து போனோம். மோட்டார் சைக்கிளின் சைலன்சர் தான் வெடித்து விட்டது என்று முதலில் நான் நினைத்தேன், ஆனால் கீழே விழுந்த எனது கணவர் இரத்த வெள்ளத்தில் மிதந்ததைப் பார்த்ததும் தான் விபரீதமாக ஏதோ நடந்து விட்டது என்று நான் உணர்ந்தேன். எனது அசைவற்றுக் கிடந்த எனது கணவரைப் பார்த்ததும் எனக்குப் பயமேற்பட்டது. அவரைத் தூக்கி விடுமாறு சுற்றும் முற்றும் பார்த்து அவலக்குரல் எழுப்பினேன். ஆனால் உடனடியாக எவருமே வரவில்லை. குண்டுச் சத்தத்தோடு பொலிசாரும் மற்றவர்களும் அந்தப் பகுதியில் இருந்து பஸ் நிலையத்தின் வெளிப்பக்கமாக முதலில் ஓடிச் சென்றதையே கண்டேன். என்னுடைய அவலக் குரலைக் கேட்டு அருகில் வந்த பொலிசார், 'குண்டைவெடிக்கச் செய்த ஆள் எங்கே?' என்று என்னிடம் விசாரித்தார்கள். எனது கணவர் காயப்பட்டு கீழே விழுந்து கிடப்பதைக் காட்டி, அவர் வவுனியாவில் உள்ள ஆளுனருடைய இணைப்பு அலுவலகத்தில் பணியாற்றுகின்ற அரசாங்க ஊழியர். அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்ல உதவி செய்யுங்கள் என்று கேட்டதன் பின்னர் தான் பொலிசார் உடனடியாகச் செயற்பட்டு, அவரை வாகனம் ஒன்றில் ஏற்றி, வவுனியா ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். நானும் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்" என்று குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றி தெரிவித்த ஆசிரியையான செல்லம்மா தெரிவித்தார்.



இவர் வவுனியா பண்டாரிகுளம் விபுலானந்த வித்தியாலயத்தில் பணியாற்றுகின்றார்.

இந்தச் சம்பவத்தில் கே.பி.கே.சென்ரர் என்ற பத்திரிகை மற்றும் புத்தகங்கள் காகிதாதிகள் விற்பனை செய்யும் கடை உரிமையாளராகிய கே.பிரபாகரன் என்பவரும் காயமடைந்தார். இவர் தான் குடியிருப்பில் உள்ள தமது வீட்டிற்குச் சென்றுவிட்டு, கடையைப் பூட்டுவதற்காக வந்த போதே குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாகத் தெரிவித்தார்.

"கடைக்கு முன்னால் எனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, கடைக்குள் நுழைந்தது தான் தெரியும். ஏதோ வெடித்தது போல சத்தம் கேட்டது, நான் எனது கடையில் உள்ள கண்ணாடி அலுமாரி மீது தள்ளப்பட்டது போல உணர்ந்தேன். ஏதோ அதிர்வு ஏற்பட்ட மாதிரியும் தெரிந்தது. கடையில் வேலை செய்பவர்கள் கடையைப் பூட்டுவதற்காக முன்னால் உள்ள பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்கள். ஏதோ அசம்பாவிதம் என்பது மட்டும் தெரிந்தது. இனியும் தாமதிக்க வேண்டாம். உடனே கடையைப் பூட்டுங்கள் என்று கூறிவிட்டு கடையின் உள்ளே சென்று பின்பக்கத்தைப் பார்வையிட்டு விட்டு முன்னால் வந்தபோது முதுகில் ஏதோ பிசுபிசுப்பது போல உணர்ந்தேன். முதுகு பக்கத்தில் ஒரே இரத்தமாக இருக்கின்றதே என்று எனது கடைச் சிப்பந்தி ஒருவர் கூறிய பின்னர் தான் எனது முதுகில் எனக்கு காயமேற்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரிய வந்தது. அத்துடன், முழங்கைகள் இரண்டிலும், முழங்கால்கள் இரண்டிலும் காயங்கள் இருப்பதைக் கண்டேன். உடனே தாமதியாமல் வவுனியா ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்காக காற்றுப் போய் நின்றிருந்ததையும் கவனிக்காமல், எனது மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்றேன். கடையில் வேலை செய்பவர்களை உதவிக்குக் கூட்டிச் செல்ல வேண்டும் என்றுகூட எனக்கு அப்போது தோன்றவில்லை. பொலிஸ் நிலையத்திற்கு அருகில் சென்ற போது என்னால் சைக்கிளில் செல்ல முடியாமல் இருந்தது. அப்போது அவ்வழியாக வந்த இன்னுமொருவரிடம் கூறி, என்னை ஆஸ்பத்திரியில் கொண்டு விடும்படி கேட்டு, அவருடைய உதவியோடுதான் ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தேன். வவுனியா ஆஸ்பத்திரியில் என்னுடைய ஒன்றிரண்டு காயங்களைப் பார்த்தார்கள். உடனடியாக பண்டேஜ் போட்டு விரைவாக அனுராதபுரத்திற்கு அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி அனுப்பி விட்டார்கள். வவுனியாவில் சத்திர சிகிச்சை செய்வதற்கு வசதி இல்லாத காரணத்தினாலேயே அனுராதபுரத்திற்கு அனுப்புவதாக ஆஸ்பத்திரியில் எனக்குக் கூறினார்கள்" என்று அவர் தனக்கு நேர்ந்த அனுபவத்தை விளக்கினார்.

இந்தக் குண்டுவெடிப்பில் காயமடைந்தவர்கள் அனைவருமே சிவிலியன்கள். அரச எழுது வினைஞர் ஒருவர். ஆசிரியை ஒருவர். கடை ஊழியர்கள் இருவர். ஓட்டோ சாரதி ஒருவர். பாடசாலை மாணவர் ஒருவர். கடைக்குச் சாமான்கள் வாங்க வந்த ஏனையோர் என பதினொரு பேர் காயமடைந்தார்கள். இச்சம்பவத்தில் மூன்று கடைகளின் கண்ணாடிகள், கண்ணாடி அலுமாரிகள் என்பன உடைந்தன. சம்பவ இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேன் ஒன்றின் கண்ணாடிகள் உடைந்து நொறுங்கின.

முழுமையாக சிவில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ள இந்த குண்டுவெடிப்பிற்கான காரணம் என்ன என்பது குறித்தும், பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இருந்தாலும், இந்த குண்டுவெடிப்பு நடைபெற்ற பின்னர், அந்தப் பகுதியில் வழமையாக மேற்கொள்ளப்படுகின்ற பாதுகாப்பு நடவடிக்கைகளோ, அல்லது வெளிப்படையான விசாரணைகளே மேற்கொள்ளப்படாதது, பொதுமக்கள் மத்தியில் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பு நடைபெற்ற சனிக்கிழமைக்கு முந்திய திங்கட்கிழமை அதிகாலையில், பஸ் நிலையக் கட்டிடப்பகுதியில் விடுதலைப் புலிகளின் சுவரொட்டிகள் காணப்பட்டதாகக் கூறப்படுகின்ற சம்பவத்தை அடுத்து, பஸ் நிலைய கட்டிடத்தினுள் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், சிப்பந்திகள் அனைவரையும் பற்றிய விபரங்களைத் தர வேண்டும் என்று படையினர் நேரடியாக வர்த்தக நிலையங்களுக்குச் சென்று கேட்டதன் பின்னர் மறுநாள் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளன என்பதும் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

பஸ்நிலையத்தில் காணப்பட்டதாகக் கூறப்படுகின்ற சுவரொட்டிகள் பற்றி படையினரோ பொலிசாரோ முழுமையாக அறிந்துள்ளதாகத் தெரியவில்லை. ஏனெனில் அந்தச் சுவரொட்டிகள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வமான தகவல்கள் எதுவும் படைத்தரப்பினராலோ, பொலிசாரினாலோ வெளியிடப்படவும் இல்லை. இந்த நிலையில் வவுனியா பஸ்நிலையக் குண்டு வெடிப்பானது விஷமத்தனமான நோக்கத்துடன் அல்லது, இப்பகுதியின் இப்போதைய நிலைமைகளைக் குழப்பும் நோக்கத்திலேயே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்றும் பொதுவான கருத்து பொதுமக்கள் மத்தியில் நிலவுவதையே காண முடிகின்றது.

விடுதலைப் புலிகளின் பிடியில் தமிழ் மக்கள் சொல்லொணாத கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். அவர்கள் மக்களைத் தமது நோக்கங்களுக்குப் பலியாக்கியுள்ளார்கள். எனவே, அந்த மக்களைப் புலிகளிடமிருந்து மீட்பதற்காகவே, பிரதேசங்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்டெடுப்பதாக அரசாங்கம் கூறுகின்றது. அந்த வகையில் பல பிரதேசங்களைக் கைப்பற்றி தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துள்ளது.

இவ்வாறு கொண்டு வரப்பட்ட வவுனியா பகுதியின் உச்ச கட்ட பாதுகாப்பு மிக்க பஸ் நிலையத்தினுள் எவ்வாறு இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது? - இந்தக் கேள்விக்குத் திருப்திகரமான பதிலை பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது அரசாங்கத்தினதும், பாதுகாப்புப் பகுதியினதும் கட்டாயக் கடமையாகும்.

**- தீபன்**

## வெளியேறத் தடை?

கொழும்புத்துறையைச் சேர்ந்த இருபது இளைஞர், யுவதிகள் கடந்த மூன்று வருடங்களாகக் கொழும்புத்துறை இராணுவ முகாமில் கையொப்பமிட்டு வருகின்றனர். இவர்களில் 15 பேர் பெண்கள். இராணுவத்தினர் இவர்களது நடவடிக்கைகளை மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். இவர்களை வெளிநாடு செல்லவும் இராணுவம் அனுமதிப்பதில்லை. இதனால் இந்த யுவதிகளுக்குப் பேசப்பட்ட திருமணங்களும் குழம்பிப் போயுள்ளன. இவர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்கள். இவர்கள் இப்போது மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர் தங்களது நடவடிக்கைகள் காரணமின்றிக் கண்காணிக்கப்பட்டும் தடை செய்யப்பட்டும் வருகின்றது எனத் தெரிவித்து.

ஆணைக்குழு அவர்களை விடுவிக்குமா?

* * * *

## தோள் கொடுப்பான் தோழன்!

வேலணையைச் சேர்ந்த பூபாலப்பிள்ளை குலமணி என்ற யுவதியை இளைஞர் ஒருவர் காதலிப்பதாகக் கூறி உடலுறவு கொண்ட பின் கைவிட்டு விட்டார். இது குறித்து மேற்படி யுவதி வேலணை ஈ. பி. டி. பி. முகாமுக்கு முறையிடச் சென்றாராம். அப்போது அங்கிருந்த வேலணை ஈ. பி. டி. பி. பொறுப்பாளர் யுவதியின் தோளில் கை போட முயற்சித்தாராம். இதனை அடுத்து யுவதி பொலிஸ் நிலையம் சென்றுள்ளார்.

பொலிஸார் அந்த யுவதிக்குத் தோள் கொடுப்பாரா?

அல்லது அவர்களும் தோளில் கை போடுவார்களா?

* * * *

## களவாடப்பட்டவை காவலரணில்!

யாழ்ப்பாணம் பொம்மை வெளிக் கிராமம் முஸ்லீம் கிராமம் என்பது அனைவருக்கும் தெரியும். இங்குள்ள பள்ளி வாயல் மற்றும் வீடுகளிலுள்ள கூரைகள், கதவுகள், யன்னல்கள் என்பன களவாடப்பட்டுள்ளன. இவற்றில் சில படையினரின் பாதுகாப்பரண்களிலும் காணப்படுகின்றன. இவை 1996 ஆம் ஆண்டு இராணுவத்தினர் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றிய பின் தான் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புலிகள் யாழ்ப்பாணத்தை விட்டு முஸ்லீம்களை வெளியேற்றிய பின் பொம்மை வெளிப் பள்ளிவாயல் நூல் நிலையமாக இயங்கி வந்தது. அருகிலிருந்த வீடுகள் பாலர் பாடசாலையாகவும், அனாதைச் சிறுவர் இல்லமாகவும் புலிகளால் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் இருப்பிடங்களை பாடசாலைக்குப் பயன்படுத்தினார்கள் புலிகள். இருப்பிடங்களை உடைத்து பாதுகாப்பரணுக்குப் பயன்படுத்துகிறார்கள் படையினர்.

நன்றி - நூலகத்திட்டம்



# ரியூட்டரிகள் வேண்டாமோ?

வடபகுதி மாணவர்களில் 88 சதவீதத்தினர் மாதமொன்றுக்கு ரியூஷன் செலவாகச் சராசரியாக ரூபா இரண்டாயிரம் செலவழிக்கின்றனர் என்றும், அதே நேரம் சில மாணவர்கள் பட்டினியுடன் பாடசாலைக்கு வருகின்றனரென்றும் கவலைப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விச் செயலர் சுந்தரம் டிவகலாலா, மாணவர்கள் ரியூஷனுக்குச் செலவிடும் தொகையை ஏழை மாணவர்களுக்கு உணவு கிடைக்க உதவி செய்ய வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

ஒரு காலத்தில் மறைந்த ஜனாதிபதி பிரேமதாச ரியூட்டரி முதலாளிகள் என்றொரு பிரிவினர் சமூகத்துக்குத் தீங்காகி வருகின்றனர் எனக் காரசாரமாகக் குறிப்பிட்டதையும் இங்கு நினைவு கூர்ந்தால் வட பகுதி மாணவர்கள் ரியூட்டரி முதலாளிகளால் எந்தளவு சுரண்டப்படுகின்றார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

ரியூஷன் தேவையா இல்லையா என்று பட்டிமன்றம் நடத்தினால் முடிவு என்னவாக இருக்கும் என்று கடைசி வரை ஊகிக்க முடியாத அளவுக்கு இரு பக்கமும் நியாயங்கள் தாராளமாக இருக்கின்றன. ஆனால் இந்த நியாயங்கள் எல்லாம் பாடசாலைகளில் ஆசிரியர்கள் படிப்பிப்பது போதாது என்ற அடிப்படையை வைத்தே எழுப்பப்படுகின்றன என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

எந்தப் பெற்றோரும் தங்கள் பிள்ளையை அழகுக்காகவோ, கௌரவத்திற்காகவோ ரியூட்டரிக்கு அனுப்புவதில்லை. பாடசாலைகளில் படிப்பித்தல் போதாது என்பதினாலேயே அனுப்புகின்றனர். மாதச் சம்பளம் எடுக்கும் பெற்றோர் பல தேவைகளைத் தியாகம் செய்து தான் ரியூட்டரிகளுக்குப் பணத்தை இறைக்கின்றார்கள்.

ரியூட்டரிகளை வளர்த்தது யார்? ஆசிரியர்களும், கல்வித் திணைக்கள நிர்வாகங்களும் தானே? எந்த ஒரு ஆசிரியராவது பாடசாலையில் தங்கள் முழு ஆற்றலைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் போதித்தால் அவர்கள் ஏன் டியூட்டரிகளை நாட வேண்டும் என்பது நியாயமான கேள்வியல்லவா?

உண்மையில் நடப்பதெல்லாம் ஒரு சில நேர்மையான ஆசிரியர்களைத் தவிர, ஏனையோர் பாடசாலைகளில் சரியாகப் படிப்பிப்பதில்லை என்பது மட்டுமன்றி, தாங்கள் நடாத்தும் ரியூட்டரிகளுக்கு மாணவர்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ அழைப்பவர்களாகவே இருக்கின்றார்கள். மாணவர்களும் பரீட்சைப் புள்ளிகள் என்ற இலக்கை அடைய வேண்டிப் பெற்றோரை வருத்தி, தாங்களும் பொது நோக்குகளையும், உடல் ஆரோக்கியத்தையும் துறந்து ரியூட்டரிகளுக்குச் செல்ல வேண்டியவர்களாகின்றனர்.

வடக்கு கிழக்கின் எந்த மூலையை எடுத்துக் கொண்டாலும் ரியூட்டரி நடத்துபவர்கள் ஆசிரியர்களே. பாடசாலையில் ஆசிரியராகத் தொழில் பார்ப்பது, ரியூட்டரி நடாத்துவதற்கான ஒரு சமூகவியல் அங்கீகாரமாகவே கருதப்படுகின்றது. ஆசிரியர் தொழிலில் புதிதாக இணைபவர்கள் கூட ரியூட்டரிகள் நடத்திப் பணக்காரராகும் "பிரபல ஆசிரியர்களை" மானசீக நாயகராகக் கொண்டபடி தான் நுழைகின்றனர்.

இன்று வடக்கு கிழக்கு நகரச் சுவர்களில் சினிமா விளம்பரங்களைக் காட்டிலும், அதிகமாகக் காணப்படுபவை ரியூட்டரி விளம்பரங்களாகும். அனுபவம் பெற்ற ஆசிரியர் ஆறுமுகம், பிரபல ஆசிரியர் பீதாம்பரம் என்ற தோரணையில் சினிமா நட்சத்திரங்கள் போல் புதுப் புது உத்திகளுடன் ஆசிரியரின் பெயர்கள் வண்ண வண்ண எழுத்துக்களில் காட்சியளிப்பதைக் கல்விச் செயலாளர்களோ, கல்வி அதிகாரிகளோ அறிந்திராமல் இருக்க முடியாது. இந்தக் கவர்ச்சியிலிருந்து மாணவர்களை நியாயபூர்வமான மீட்பதற்குக் கல்வித் திணைக்களம் என்ன செய்திருக்கின்றது என்பதைச் செயலர் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ரியூட்டரிகள் தேவையற்றவை, பாடசாலைக் கல்வியே ஒரு மாணவனுக்குப் போதும் என்று சம்பிரதாயபூர்வமாகக் கல்வித்துறையைச் சார்ந்தோர் அடிக்கடி கூறுவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அவ்வாறு கூறுபவர்கள் எத்தனை பேர் தங்கள் பிள்ளைகளை ரியூட்டரிக்கு அனுப்பாதவர்கள் என்று நெஞ்சைத் தொட்டுப் பார்க்க வேண்டும்.

தனது பிள்ளையை ரியூஷனுக்கு ஒழுங்காக அனுப்பிப் படிப்பிக்கும் கல்விச் செயலர் வட கிழக்குப் பகுதிப் பிள்ளைகளுக்கு அறிவுரை சொல்வது தான் ஆச்சரியம்.

உண்மையில் வடக்கு கிழக்குக் கல்வி முன்னேற வேண்டும் என்பதில் ஆசையிருந்தால் பின்வரும் விடயங்களைக் கலந்து உடனடியாக அமுல் நடத்த முன்வர வேண்டும்.

1. வட கிழக்கு ஆசிரியர்கள் எவரும் ரியூட்டரிகளில் படிப்பிக்கவோ, வீட்டில் ரியூஷன் வகுப்பு எடுக்கவோ கூடாது என்று கண்டிப்பான உத்தரவு போட்டு உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.
2. காக்காய் பிடிப்பவர்களுக்குச் சேவைக் கால ஆலோசகர் பதவி வழங்கும் வேலையை நிறுத்தி, அனுபவமும், சமுதாய நோக்கும் கொண்ட நல்ல ஆசிரியர்களைச் சேவைக் கால ஆலோசகர்களாகக் கொண்டு நியமித்து, அவரின் ஆலோசனைப்படி ஆசிரியர்கள் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.
3. கிராமப்புற ஆசிரியர்களுக்கு, நகரப் பகுதிக்கான மாற்றல்களைக் கொடுத்து "நல்ல பிள்ளைப் பட்டம்" பெறும் முறையை நீக்க வேண்டும். அவசியம் என்று கருதினால் ஒழிய மாற்றல் வழங்கக் கூடாது. (இத்தகைய மாற்றங்கள் இலகுவாக வழங்கப்படுவதால் கிராமப்புறங்களில் தொடர்ந்தும் வெற்றிடங்கள் நிலவிக் கல்வி பாழ்படும், அதே நேரம் நகரங்களில் மேலதிகமாக ஆசிரியர்கள் தூங்கி வழிகிறார்கள்).
4. "டிஸ்பிளேஸ்" என்ற போர்வையில் "ரெம்பரி அட்டாச்மென்ற்" முறையை உடனடியாக நீக்க வேண்டும். வடக்குக் கிழக்கில், வேறு திணைக்களங்களில் மிக அரிதாகவே இந்த வசதி வழங்கப்படுகையில் ஆசிரியர்கள் தாராளமாகவும் இலகுவாகவும் இந்த வசதியைப் பெற்றுத் துஷ்பிரயோகம் செய்கின்றார்கள். நிரந்தர மாற்றம் பெறுவதற்கு இலகுவாக, உறுதியாக இந்த முறை ஆசிரியர்களால் கைக்கொள்ளப்படுகின்றது.
5. வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகளே அவர்கள் என்ற உண்மையைக் கருத்தாங்குகள் மூலம் ஆசிரியர்களுக்கு உணர்த்தித் தொழிற் புனிதத்தைப் பேணும் உளப்பாங்கைத் தோற்றுவிப்பதோடு, எந்தக் காரணம் கொண்டும் ஆசிரியர் தொழிற்சங்கப் போராட்டங்கள், மாணவர் கல்வியைப் பௌதீக ரீதியாக மாத்திரமல்ல, மனோ ரீதியாகக் கூடப் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும்.
6. இதற்கு அனுசரணையாக இடர்ப்படி, சம்பளம், சம்பள நிலுவை, கடன் பெறல், வேறு கொடுப்பனவுகள் போன்றவற்றில் ஆசிரியர் சமூகம், திணைக்கள உத்தியோகத்தர்களினால் பாதிப்புறா வகையில் திணைக்கள நடைமுறைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

உண்மையில் ரியூஷன் முறை, தேவையற்றதென்று டிவகலாலா உளமாரக் கருதுவராயின் மேற்கண்டவற்றையோ அல்லது இவற்றைக் காட்டிலும் இலகுவான வழி வகைகளையோ பயன்படுத்திப் பெற்றோரையும், பிள்ளைகளையும் ரியூஷன் முதலாளிகளிடமிருந்து காப்பது கஷ்டமான காரியமல்ல.

இதற்கு ஆரம்பக் கட்டமாகக் கல்வித் திணைக்களம் சார்ந்தோரை ஊக்கப்படுத்தி, அவர்களது பிள்ளைகள் ரியூஷனுக்குச் செல்வதிலிருந்து விலக்க நடவடிக்கை எடுக்கட்டும். அப்பொழுது ரியூஷன் கல்வி பயனற்றது என்று பெற்றோர்கள் நிதர்சனமாக உணர்ந்து கொள்வார்கள்.

-திரிபுரன்

# 'அவங்க கேட்டா குடுக்கிற நாங்க கேட்டா மறதி என்னா?'

பொலனறுவையிலிருந்து வாழைச்சேனை வரை சுமார் 17 இராணுவ முகாம்கள் உள்ளன. இவற்றில் மினி தடைமுகாம்களும் சோதனைச் சாவடிகளும் அடக்கம். அதிகாலை 5.30 மணிக்கு மன்னம்பிட்டி பொலிஸ் சாவடி திறக்கப்பட்டு, பயணிகள், வாகனங்கள், பரிசோதிக்கப்பட்டு பயணம் தொடர அனுமதிக்கப்படுகின்றனர். நூற்றுக்கணக்கான பயணிகளின் பொதிகளை பரிசோதிக்க ஒரே ஒரு பொலிஸ்காரர் மட்டும் நிறுத்தப்பட்டுள்ளார். இவரே சிலநேரம், வாகனங்களையும் பரிசோதிப்பதுண்டு. மைல்கணக்கில் நீண்டிருக்கும் பயணிகளில் நோயாளிகள், வயோதிபர்கள், பெண்கள் என சகலருக்குமாக ஒரு பொலிஸ்காரர் நியமிக்கப்பட்டதன் மூலம் அரசாங்கம் எத்துணை கொடுமையை இழைக்கின்றது என்பதை புரிந்து கொள்ளலாம். அதிகாலை நேரம் என்பதால் காலைக்கடன்களை கழிக்க முற்படும் ஒருவர், அவ்விடத்தில் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கின்ற அவலத்தையும் காணமுடிகின்றது. ஒரு கழிப்பிட வசதிகள் கூட இந்த இடத்தில் ஏற்படுத்தப்படவில்லை.

அத்துடன் தமிழ் - முஸ்லிம் மக்களிடம் கடினப்போக்குடனும், சிங்கள மக்களுடன் மலர்ந்த முகத்துடனும் இராணுவம் நடந்துகொள்வதை இத்தடை முகாம்களில் அவதானிக்கலாம். சிங்கள மக்கள் பயணம் செய்யும் பஸ் வண்டிகள் முன் வரிசைக்கு அழைக்கப்பட்டு, ஏதும் விசாரிக்கப்படாமலே பயணம் தொடர அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களின் லொறிகள் பரிசோதிக்கப்படாமலேயே விடப்படுகின்றன. சிங்களவர்கள் பயணம் செய்யும் பஸ்ஸில் குண்டும் கிடையாது. புலியும் கிடையாது. அவர்கள் கொண்டுபோகும் பொதிகளில் நாட்டை சிதைக்கும் ஏதும் கிடையாது. ஆனால், தமிழ் முஸ்லிம் அப்பாவி பிரயாணிகள் மட்டுமே வெடிகுண்டையும், நாசகாரப் பொருட்களையும் கொண்டு செல்வதாக இராணுவமும், பொலிசும் கருதுகின்றது. இது இராணுவத்தின் இனவாதத்தையும், அவநம்பிக்கையையும் உணர்த்தப்போதுமான நிகழ்வுகளாகும். தவிர, தமிழ் முஸ்லிம் பயணிகளில் வயோதிபர், நோயாளிகள் -கியூவில் நிற்க முடியாமல் - அமர்ந்திருந்தால் சோதனையிடும் பொலிசார், வேண்டுமென்றே அவர்களின் பொதிகளை கவிழ்த்துக் கொட்டி, உதறி வீசி, தூசிக்கின்றதும் சர்வசாதாரணமாகி விட்டது.

அத்துடன் தமிழ் முஸ்லிம் பஸ் நடத்துனர்கள் அல்லது சாரதிகள் வழியில் அகப்படும் சகல இராணுவ, பொலிஸ் தடைமுகாம்களில் காத்திருக்கும் வீரர்களுக்கு? சிங்களப் பத்திரிகை, சஞ்சிகை ஆகியவற்றை இலவசமாக வாங்கிவந்து கொடுக்கவும் வேண்டும். பத்திரிகை பெறுவதற்கென வீதித்தடையால் காத்திருக்கும் சிப்பாய்கள், சிலநேரம் பத்திரிகை வாங்கிவர மறந்தால் முகத்தைச் சுழித்துக் கொண்டு கடுமையாக நிற்பதுடன் தொடர்ந்து அப்படி மறந்து வந்தால் "நீங்கள் புலிகள் கேட்டா குடுக்குற, நாங்கள் கேட்டா மறதி என்னா?" என்று தமிழில் முறுகவும் செய்கின்றனர்.

இதிலிருந்து புலிகளும், நாங்களும் கப்பம் பெறுவதில் மக்களை வதைப்பதில் ஓர் இனம் என்பதை இந்த இராணுவத்தினர் உணர்த்துகின்றனர். மக்களை சமாதானத்துடன் வாழ வைக்க அனுப்பப்பட்ட இந்த அமைதிப்படையினரின் அடாகாசங்கள் கிழக்கு மாகாணத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. குறிப்பாக பயணிகளிடம் மிகவும் கடுமையான போக்கை கடைப்பிடிக்கும் அணுகுமுறையை அண்மைக்காலமாக இராணுவம் முனைப்புடன் செயற்படுத்தி வருகின்றது. இது வடகிழக்கு இராணுவ மயப்படுத்தப்பட்ட ஒரு நிர்வாகத்திற்கான எதிர்வு கூறலா என ஐயப்பட வைக்கின்றது.

- ஷாமா

# பி.ஜே.பி. அரசின் வெற்றியும் கொமிசன் யாவாரிகளும்!

இந்தியாவில் மீண்டும் பீ. ஜே. பீ. அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததையிட்டு எமது தமிழ்த் தலைவர்களுக்குத் தலை, கால் புரியாத புழுகம் ஏற்பட்டிருக்கின்றது.

அட்டல்பிஹாரி வாஜ்பாய் தலைமையில் உருவாகப் போகும் புதிய அரசாங்கம் இலங்கை இனப் பிரச்சினையில் தலையிட்டு, இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அதன் பங்களிப்பை நல்க வேண்டும் என்று அவை கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில், அரசாங்கத்தை அண்டிப் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கும் இந்தக் கட்சிகள், தம்மால் அரசாங்கத்தின் மீது செலுத்தக் கூடிய குறைந்த பட்ச நெருக்கடியைக் கூடக் கொடுக்கத் தயாரற்றே இருந்து வருகின்றன. குறைந்த பட்சம் அரசாங்கம் இனப் பிரச்சினை தொடர்பாகச் செய்து வரும் இழுத்தடிப்பு நடவடிக்கை, யுத்தத்தில் காட்டும் தீவிரம் என்பன குறித்துத் தமது எதிர்ப்பினைச் செயலில் காட்டக் கூட அவை ஒரு போதும் முனைந்ததில்லை. அரசாங்கத்திடம் தமது ஊழியர்களைப் போஷிக்க என்று வெட்கம் கெட்ட தனமாக மாதா மாதம் பணம் வாங்கிக் கொண்டு இயக்கம் நடத்தி வரும் இவை அந்தச் செஞ்சோற்றுக் கடனுக்காக அதற்குத் தேவைக்கு அதிகமாகவே முண்டு கொடுத்து வருகின்றன.

ஆனால் இப்போது பீ. ஜே. பீ. அரசாங்கம் பதவிக்கு வந்ததும், இந்தியாவைத் தலையிட வேண்டும் என்று கோரிக்கை எழுப்புகின்றன. ஏற்கெனவே இந்தியா இந்த விடயத்தில் தலையிட்ட போது, வடக்குக் கிழக்கில் தமதுஅதிகாரம் கொடி கட்டிப் பறந்ததையும், அந்தக் காலம் முழுவதும் தாம் அசைக்க முடியாத சக்திகளாக வடக்குக் கிழக்கு மக்களை ஆட்டிப் படைத்ததையும் நினைத்து இப்போதும் அவர்களுக்கு வாய் ஊறுகின்றது போலும் !

இந்தியா தலையிட வேண்டும் என்று கோருவதுதான் கோருகின்றார்கள், அட, அது என்ன செய்ய வேண்டும் என்றாவது கோருகின்றார்களா ? தலையிடு ! தலையிடு ! என்று சும்மா கத்துவதில் என்ன அர்த்தம் இருக்கின்றது ?

வடக்குக் கிழக்கில் தங்கள் அரசியல் அதிகாரத்தை நடத்த உரிய வழிகளைச் செய்து தரும்படி அத்துடன் கேட்காமல், கேட்கின்றார்கள் போலும் !

உண்டு ருசி கண்ட சீடருக்கு உத்தியோகத்தை விட மனம் வருமா பின்னே !

ஆனால் பாவம் இவர்கள். இந்தியா இந்தியாதான். யானை ஆண்டால் என்ன, பூனை சிம்மாசனம் ஏறினால் என்ன, இந்தியா அது நடந்தது போலத் தான் நடக்கும். அரசாங்க மாற்றங்கள் ஆட்சியியலில் பெரும் மாற்றத்தைத் தராது என்பதை அவர்கள் மறந்து விடுகின்றார்கள். தமிழ் மக்கள் தமது தலை விதியைத் தீர்மானிக்கத் தாம்தான் போராட வேண்டும் என்பது, அன்று அவர்களுக்காகத் தாம் போராடப் போவதாகப் போராட்டத்தைக் குத்தகைக்கு எடுத்த எமது முன்னாள் இயக்கங்களுக்கு எப்போதுதான் ஞாபகம் வரப் போகின்றதோ ? ஒரு வேளை இப்போது தமது மொத்தக் குத்தகையை இந்தியாவுக்குக் கொமிஷனுக்குக் கொடுக்கலாம் என்று யோசிக்கின்றார்கள் போலும்!

கொமிஷன் யாவாரத்தில் இப்போதெல்லாம் பழுத்த அனுபவசாலிகளாகிவிட்டார்கள் அல்லவா இவர்கள் !

நன்றி - நூலகத்திட்டம்



# சமாதானத்தை எதிர்த்து இராணுவம்!


இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டிப் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒரு இராணுவத் தளபாடக் கண்காட்சி நடைபெற்றது. அதன் ஆரம்ப நாட்களில் பாவிக்கப்பட்ட இராணுவத் தளபாடங்கள் முதல், இன்று வடக்குப் போர் முனையில் பாவிக்கப்படும் அதி நவீன தளபாடங்கள் வரை இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

ஒரு ஐம்பது ஆண்டுகால வரலாற்றில் வெறும் 2,500 பேரை மட்டும் கொண்டதாக இருந்த இந்த இராணுவம் இன்று 94 நிரந்தரப் படைப் பிரிவுகளும், 54 விஷேட படைப் பிரிவுகளையும் கொண்ட ஒரு பிரம்மாண்டமான இராணுவமாக வளர்ந்து நிற்கின்றது. 1949 இல் நாட்டின் மொத்தத் தேசிய வரவு - செலவுத் திட்டத்தில் 0.25% மட்டுமே இராணுவ செலவீனமாக இருந்தது. இன்றோ அது கிட்டத்தட்ட 7% ஆக அதிகரித்துள்ளது. 50 ஆண்டு காலத்திய இராணுவத்தின் சாதனைகளைப் பொது மக்களுக்கு அறியப்படுத்தும் விதமாகப் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட கண் காட்சி, ஒரு கொலை இயந்திரத்தின் பிரமிக்கத்தக்க வளர்ச்சியை மிகவும் தெளிவாகக் காட்டியது எனலாம். சிங்கள இனவாதிகளுக்கும், வடக்கில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக வெற்றிகரமான யுத்தத்தில் பயங்கரவாதிகளுடன் தாம் ஈடுபட்டிருப்பதாக அப்பாவிச் சிங்களப் பொது மக்களுக்கும் காட்டிப் பெருமிதம் கொள்ள வைக்கும் நோக்குடன் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கண்காட்சியின் மூலம் அவர்களுக்கு ஒரு தெளிவான செய்தியை அரசாங்கம் அறிவித்துள்ளது. அதுதான் நாம் பலமாக இருக்கின்றோம்; எம்மால் வெல்ல முடியாத ஒன்றும் இல்லை. நாம் இந்த யுத்தத்தில் நிச்சயம் வெற்றி பெறுவோம்.


1949 இல் இந்த இராணுவம் ஆரம்பிக்கப்பட்ட போது, அது இத்துணை துரிதமாக வளர்ந்து, இவ்வளவு பெரிய கொலை இயந்திரமாக மாறும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். உத்தியோகபூர்வ சடங்குகளில் பங்குபற்றுவதைத் தவிர பெருமளவு கடமைப்பாடுகள் அதற்கு இருந்ததில்லை. ஆயினும் அது விரைவிலேயே கொஞ்சம், கொஞ்சமாக வளரத் தொடங்கியது.

இலங்கையின் இராணுவம், இங்கு உருவாகி வளர்ந்து வந்த இனப் பிரச்சினையோடு ஒட்டி, அதற்குச் சமாந்தரமாக, சிங்கள இனவாதத்தின் ஒரு கருவியாக வளரத் தொடங்கியது. இலங்கை இராணுவம் என்பது விரைவிலேயே ஒரு சிங்கள பௌத்த இராணுவமாக, சிங்கள பௌத்தர்கள் அல்லாதவர்களை எதிர்க்கும் ஒரு இராணுவமாக முழுமையுற்றது. நாட்டின் தேசிய பாதுகாப்பு, நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டுவது போன்ற நோக்கங்களின் கீழ் இந்த இராணுவம், இலங்கையில் வளர்ந்து வந்த சிறுபான்மை இனங்களை நசுக்கும், பேரினவாத அரசியலின் செல்லப் பிள்ளையாக ஊட்டி வளர்க்கப்பட்டது. அதன் முதலாவது தளபதியாக அன்ரன் முத்துக்குமாரு என்ற ஒரு தமிழர் இருந்த போதும் விரைவிலேயே அது சிங்களவரை முழுக்க முழுக்க அல்லது விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்களைக் கொண்ட சிங்கள இராணுவமாக மாற்றம் பெற்றது.

நாட்டில் சமாதானத்தை இல்லாமல் ஆக்கிவிட்டுள்ள தமிழ்ப் பயங்கரவாதிகளை ஒழிக்க, " தேசிய பாதுகாப்பு " யுத்தக் கடமையில் ஈடுபட்டிருக்கும் இன்றைய இராணுவம் நிச்சயமாகச் சமாதானத்திற்கு ஒரு சவாலாக இருக்கப் போகின்றது என்பது ஒன்றும் ஆச்சரியம் தருகின்ற விடயம் அல்ல. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த புதிதில் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது, பேச்சுவார்த்தை வெற்றி பெற முடியாமல் முறிவடைந்ததில் அரச தரப்பின் போக்கும், அதிகாரத் திமிரும் மட்டுமல்ல, இராணுவத்தின் நலன்களும் முக்கிய பாத்திரம் வகித்தன. சமாதானம் அரசாங்கம் - தமிழ்த் தரப்பு என்ற இரு தரப்புக்கிடையிலான இரு தரப்பினரதும் பேச்சுவார்த்தை, பரஸ்பர புரிதல், விட்டுக் கொடுப்பு என்ற அடிப்படையிலான ஒரு உடன்பாட்டின் அடிப்படையில் மட்டும் சாத்தியப்படப் போவதில்லை; இராணுவத்தில் இருப்பும், அதன் நலன்களும் கூட இந்த விடயத்தில் தாக்கம் செலுத்தப் போகின்றன என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு நல்ல உதாரணமாக அமைந்தது.



உண்மையில், சிங்கள - பௌத்த சித்தாந்தத்தின் கட்டிறுக்கமான வளர்ச்சியைத் தனது இருப்புக்கான அடிப்படையாகக் கொண்டுள்ள இலங்கை அரசின் பிரதான தூண்களில் ஒன்றாக இன்றைய இராணுவம் விளங்குகின்றது. அது வெறும் படை மட்டுமல்ல, ஆயுதங்களை எதிரி மீது பிரயோகித்து, அரசாங்கம் உத்தரவு இடுகின்ற போது தாக்குகின்ற ஒரு வெறும் கருவி அல்ல. அரசாங்கத்தையே வழி நடத்துகின்ற சக்திமிக்க ஒரு சமூகமாக அது இன்று உருவாகியுள்ளது.



இராணுவம் ஒரு சமூகமாக உருவாக்கப்படுவது ஒன்றும் புதிய விடயம் அல்ல. இந்தியா, பாகிஸ்தான் போன்ற தெற்கு ஆசிய நாடுகளில் கூட இது ஏற்கெனவே உருவாகி விட்டுள்ளது. நாடு குறித்தும், நாட்டின் மேலாதிக்க ஆளும் வர்க்கங்கள் குறித்தும், அந்த வர்க்கங்களின் நலனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தத்துவார்த்தக் கோட்பாடுப் புனைவுகளால் உருவாக்கப்பட்டும், போஷிக்கப்பட்டும் வரும் இந்தச் சமூகம் ஒரு வாய்ப்பு வசதிகளைக் கொண்ட (privileged) சமூகமாக உருவாகி வளர்ந்துள்ளது. அரசின் ஏனைய கருவிகளான பாராளுமன்றம், நீதித்துறை போன்றவற்றாலோ, சிவில் நிர்வாக அதிகார அடுக்கமைப்புக்களாலோ கேள்வி கேட்கப்படாத செல்லப் பிள்ளைகளாகத் தட்டிக் கொடுத்து வளர்க்கப்பட்டு வரும் இந்தச் சமூகம் விரைவிலேயே இவை எல்லாவற்றின் மீதும் செல்வாக்குச் செலுத்தும் ஒன்றாக மாறி வருகின்றது. பாராளுமன்றத்தின் சட்டம் இயற்றும் அதிகாரத்தை, நீதித் துறையின் நீதி வழங்கும் அதிகாரத்தை, நிர்வாகக் கட்டமைப்பின் நிர்வாக ஒழுங்கமைப்பை எல்லாம் அது தனது இருப்புக்குத் தேவையான அளவுக்குக் கையில் எடுத்துக் கொள்கின்றது. முழு மக்கள் மத்தியிலும் கௌரவம், அனுதாபம், ஆதரவு போன்றவற்றுக்குரிய ஒரு சமூகமாக இதை மாற்றுவதில் இந்த அனைத்து நிறுவனங்களும் வேண்டியளவு முயற்சியில் ஈடுபட்டு அதைச் சாதிக்கின்றன.

வடக்குக் கிழக்கில் நடைபெறும் யுத்தம் முழு நாட்டின் பாதுகாப்புக்காக, அதன் இறைமைக்காக, மக்களின் நல்வாழ்வுக்காக நடத்தப்படுகின்றது என்ற பிரசாரத்தினை அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களும் செய்து வருகின்றன. யுத்தத்தில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு இராணுவ உறுப்பினரும் தியாகிகளாகக் கொள்ளப்படுகின்றார்கள். யுத்தத்தில் மரணமடைபவர்கள் வீரத் தியாகிகளாகப் பாராட்டப்படுகின்றார்கள். அரச இயந்திரத்தின் வேறு எந்த உறுப்பினைச் சேர்ந்த தனி நபர்களுக்கும் கிடைக்காத அந்தஸ்தும், அங்கீகாரமும் இவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இவர்கள் தாம் ஒரு தனித்த, தனிச் சிறப்புக்குரிய சமூகமாகத் தம்மை உணரத் தலைப்படுகின்றனர்.

இந்தத் தனியான சமூகம், சிவில் சமூகத்தின் வாழ்வியல் நடைமுறையில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கின்றது. அது நிரந்தரமான, உறுதியான வருவாய், சமூக அங்கீகாரம், பிற வசதிகள் அனைத்தும் கொண்ட, யுத்தத்தை நடத்துவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு சமூகமாக உள்ளது. அந்தச் சமூகத்தின் இருப்பும், சமூக அங்கீகாரமும், கௌரவமும் யுத்தத்தில் அது தொடர்ந்து ஈடுபடுவதுடன் சம்பந்தப்பட்டதாக உள்ளது. யுத்தம் முடிவுக்கு வருவதும், சமாதான நிலை ஒன்று உருவாவதும் இந்த இருப்பை ஆட்டங் காணச் செய்து விடுமோ என்ற அச்சம் அதற்கு எப்போதும் இருந்து வரும் ஒன்றாக உள்ளதைத் தவிர்க்க முடியாது. எனவே இந்தச் சமூகம் இயல்பாகவே சமாதானத்துக்கு எதிரான ஒரு சமூகமாகவும் இருப்பதும் தவிர்க்க முடியாததாகி உள்ளது.

இன்று, "இராணுவ நலன்கள்", வெறுமனே ஒரு அரசின் பாதுகாப்புக் குறித்த இராணுவ நலன்கள் என்ற மட்டத்தையும் தாண்டிய, இராணுவத் துறையுடன் சம்பந்தப்பட்ட ஆயுதக் கொள்வனவு செய்வோர் உட்பட்ட சகலரையும் உள்ளிட்ட இராணுவச் சமூகத்தின் நபர்களாக மாறியுள்ளன. சமாதானப் பேச்சில் இராணுவ நலன்கள் வகிக்கும் பாத்திரத்தை இந்த அடிப்படையில் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

ஒரு கால் சமாதானம் வந்து, நிலைமை சுமூகமாகுமானால், இவ்வளவு பிரமாண்டமான ஒரு அணியாகக் கட்டி எழுப்பப்பட்டுள்ள இராணுவத்தின் அடுத்த கட்டம் என்ன? அது கலைக்கப்பட்டுப் பழையபடி சிவில் வாழ்வுக்குத் திரும்பும்படி அதன் உறுப்பினர்களுக்கு அறிவிப்பதா? அப்படியானால், பெருமளவு சம்பளம் பெற்று வந்த அவர்களுக்கு அதே அளவு சம்பளத்துடன் வேறு வேலைகளை அரசாங்கத்தில் வழங்க முடியுமா? எப்படிப்பட்ட ஒரு வேலையை அதனால் வழங்க முடியும்? போன்ற கேள்விகளுக்கும் பதில் தேடுவது சமாதான முயற்சியின் ஒரு அங்கமாக இருக்க வேண்டும்.

எவ்வாறாயினும், அந்தச் சமூகம் இன்று அனுபவித்து வரும் வசதி, வாய்ப்பை இழந்து புதிய வாழ்வுக்குத் தயார் படுத்துவது சாத்தியமாவதற்கு நாட்டின் அரசியல் சிந்தனையில் நீண்ட காலத்துக்கு ஒரு போராட்டம் நடந்தாக வேண்டிய தேவை உள்ளது. கடந்த வாரம் நடந்த 50ஆண்டு விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள இலங்கை வந்த இலங்கையின் முதலாவது இராணுவத் தளபதி அன்ரன் முத்துக்குமாரு இப்படிச் சொல்கின்றார்: " இது ஒரு பெரிய விடயம். இன்றுள்ள இராணுவத்தின் பருமனுடன் பார்க்கையில் இது மிகவும் பிரம்மாண்டமான ஒரு விடயம். இன்று களத்தில் யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இவர்கள், நல்ல சம்பளம் பெறும் இவர்களை என்ன செய்வது ? அவர்களை எந்த வேலையும் இல்லாமல் சும்மா வேலையிலிருந்து நிறுத்திவிட முடியாது. அவர்கள் தாம் நாட்டுக்காகப் போராடி உயிர் துறக்கப் பயிற்றப்பட்டவர்கள் என்று வாதாடக் கூடும். "

ஆம், சமாதானம் வருமானால் அது இராணுவத்தின் இருப்புக்கு ஒரு சவாலாக அமையும் என்பதைத் தான் அவரது இந்தக் கூற்று வெளிப்படுத்துகின்றது.

ஆக, " சமாதானத்துக்காக " யுத்தத்தில் ஈடுபடுகின்ற இராணுவத்தை இப்போது சமாதானத்திற்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட வைக்க வேண்டிய தவிர்க்க முடியாத ஒரு பொறிக்குள் விழுந்து விட்டிருக்கின்றது அரசு.

இந்த இராணுவத்தின் ஐம்பதாண்டு நிறைவு விழா காலி முகத் திடலில் நடைபெற்ற போது ஆற்றிய உரையில் ஜனாதிபதி " நாட்டின் ஒருமைப்பாட்டினை நிலை நாட்டப் போராடுகின்றனர் " என்று பாராட்டு வழங்கினார். ஆம், நாட்டை ஒரு இன, ஒரு மத ஆதிக்கம் கொண்ட நாடாக நிறுவிடும் நோக்குடன் இயங்கும் இராணுவம் என்ற அர்த்தத்தில் அது ஒருமைப்பாட்டுக்காகப் போரிடுகின்றது என்பது உண்மைதான்.

1949களில் ஒரு துப்பாக்கி வேட்டைக் கூடத் தீர்க்காது இராணுவத்தில் அங்கம் வகித்த பலர் இருந்தனர். இன்றோ, எத்தனை பேரைக் கொன்றார்கள் என்பதில் சாதனை நிலை நாட்டுகின்ற தீவிரத்துடன் செயற்படுபவர்கள் பலரைக் கொண்டதாக அது மாறியுள்ளது.

50 ஆண்டு காலச் சாதனை அது. அதை விழாக் கொண்டாடி மகிழ்வது சாலவும் தகும் !

**நாசமறுப்பான்**

நன்றி - நூலகத்திட்டம்



# சமவாய்ப்புச் சட்டமும் பேரினவாதமும்! பாசிசத்தின் கூறுகள் தெரிகின்றன?

இன்றைய அரசியல் மற்றும் பேரினவாதச் சூழலில் முக்கிய சூடுபறக்கும் பேசுபொருளாக சமவாய்ப்புச் சட்டம் ஆகிவிட்டிருக்கிறது.

- சமவாய்ப்புச் சட்டத்துக்கு எதிராக ஆனந்தா, நாலந்தா, தர்மராஜா, விசாகா போன்ற நாட்டின் முன்னணி சிங்கள பௌத்த பாடசாலைகளின் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்.
- அஷ்ரஃப் தான் இதற்கு காரணமென்று கூறி அஸ்ரஃப்புக்கு எதிராகப் பல கண்டன அறிக்கைகள்.
- இச்சட்டத்துக்கு அரசாங்கத்துக்குள்ளேயே ஆதரவு இல்லை.
- சமவாய்ப்புச் சட்டம் பற்றிய இனவாத பீதியைக் கிளப்புகின்ற கட்டுரைகள், செய்திகள், விவாதங்கள்.
- ஒக்டோபர் 14ஆம் திகதி 23 அமைப்புகள் ஒன்றிணைந்து இச்சட்டத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்.
- சமவாய்ப்புச் சட்டத்தினை 'லங்காதீப' ஒக்டோபர் 8ம் திகதியிலிருந்து தினசரி, பகுதிபகுதியாக மொழிபெயர்த்து வெளியிட்டு வருகிறது.
- இச்சட்டத்துக்கு எதிராக ஒக்டோபர் 8ஆம் திகதி பௌத்த இளைஞர் காங்கிரஸ் மாநாடு நடத்தியது.

பொ.ஐ.மு. அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னரிலிருந்து இப்போது வரை பஞ்சமில்லாத-வகையில் ஆணைக் குழுக்களை அமைத்து வருவதும் எந்தவொரு ஆணைக்குழுவும் இந்த ஐந்து வருட ஆட்சிக் காலத்தில் தனது விசாரணைகளை முடித்து அவற்றிற்கான தீர்வு கண்டதாக இல்லை.

## முன்னைய வாக்குறுதிகளுக்கு என்ன பதில்?

இந்த நிலையில் பொ.ஐ.மு அரசு தனது ஆயுளை முடிக்கப் போகும் தறுவாயில் முன்வைத்திருக்கும் புதிய திட்டம் இந்த சமவாய்ப்புச் சட்டம் ஆகும். அரசாங்கம் சமவாய்ப்புச் சட்டம் என்று புதிதாக எதனையும் கொண்டு வருவதற்கு முன்னர் அது தனது முன்னைய வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதா எனப் பார்த்ததாகத் தெரியவில்லை. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாதது மட்டுமன்றி நேரெதிரான நடவடிக்கைகளை செய்து முடித்திருப்பது குறித்தும் புதிதாக சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஏற்கெனவே அரசு தான் வழங்கியிருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத நிலையில் புதிது புதிதாக மேலும் வாக்குறுதிகளை வழங்கிக்-கொண்டே காலம் தள்ளுவது அதன் போக்காகப் போய் விட்டது. இந்த ஐந்து வருட காலத்தில் இப்படிப்பட்ட வாக்குறுதிகளைக் கண்டு புளித்துப் போய்விட்ட நிலையிலேயே இந்த சமவாய்ப்புச் சட்டம் பற்றிய போலி நம்பிக்கையை ஏற்படுத்த முயற்சித்திருக்கிறது.

அரசின் இந்தச் சட்டம் அரச நிர்வாகத்தில் செல்லுபடியற்றதென்பதும், வெறுமனே தனியார் துறையினர் மீது மட்டுமே செல்லுபடியாகின்ற வகையிலேயே இது தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதனை முதலாளிமார் சம்மேளனம் எதிர்த்-திருக்கிறது. ஏற்கெனவே தொழிலாளர் சாசனம், பெண்கள் சாசனம் என எந்தவொரு சாசனத்தைக் கூடக் கொள்கையளவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற இயலாத இந்த அரசாங்கம் எப்படி ஒரு சட்டத்தை இயற்றிவிட முடியும். தொழிலாளர் சாசனத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற இயலாத வகையில், முதலாளிமார் சம்மேளனம் அதனை எதிர்த்து, அரசை எச்சரித்ததோடு அதனை கிடப்பில் போட்டு விட்டது. இந்த அரசு ஆட்சியலமர்ந்ததும் பெரும் பிரச்சாரத்தோடு தொடக்கிய "ஓம்புட்ஸ்மன்" பதவியும் ஒன்றுக்கும் பிரயோசனமற்ற ஒன்றாக ஆனமை பற்றியும் தெரிந்ததே.

## முதலில் பௌத்திற்கு முன்னுரிமை கைவிடத்தயரா?

எனவே அரசு உண்மையில் இதயசுத்தியோடு-தான் இவ்வகைச் சட்டங்களை இயற்றினாலும் கூட அதனை கருவிலேயே அழிக்கக்கூடிய சக்திகள் அரசைவிட வலுவானதாக உருவாகியிருக்கிறது என்பது தெரிந்ததே. பெண்கள் சாசனத்துக்கு சட்ட அந்தஸ்து கொடுக்கத் தயாரில்லாமல் ஆணாதிக்க அரச யந்திரம் என்ற ஒன்று எப்படி இருக்கிறதோ, அது போல தொழிலாளர் சாசனத்துக்கும் சட்ட அந்தஸ்து கொடுக்க முடியாதபடி அரசு முதலாளிமாரின் நலனில் தங்கியிருக்கிறது.

அது மட்டுமன்றி குறைந்தபட்சம் உத்தேச அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை-யளிப்பதை மீளவும் உறுதிப்படுத்தியிருக்கிற அரசு இந்த சமவாய்ப்புப் பற்றிப் பேசுவது நகைப்புக்-குரியது. 1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கையின் முதலாவது குடியரசு அரசியல-மைப்பில் இதே ஸ்ரீலங்கா அரசு தலைமையிலான அரசு தான் வரலாற்றில் பௌத்தத்துக்கு முன்னு-ரிமை அளிக்கின்ற ஏற்பாட்டை நடைமுறைக்குக் கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் ஐ.தே.க. அரசில் 1978 இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு கொண்டு வரப்பட்ட போது ஐ.தே.க விரும்பினாலும் அதனை நீக்க முடியாதிருந்தது. அப்படி நீக்கியிருந்தால் சிங்கள பௌத்தர்களின் கடும் எதிர்ப்பை ஐ.தே.க. அரசு எதிர்நோக்கியிருக்க வேண்டி இருந்திருக்கும். எனவே ஐ.தே.க.வும் தனது ஆட்சிக்காலத்தில் தொடர்ந்த அவ் ஏற்பாட்டை சமாதானம், ஐக்கியம், சௌஜன்யம் என்ற போர்வையில் ஆட்சிக்கமர்ந்த பொ.ஐ.மு. அரசு "சமாதானத்துக்-கான யுத்தம்" என்று இன அழிப்பை தொடர்ந்த-தைப் போலவே "தீர்வு யோசனை" என்கிற போர்வையில் மதசார்பு அரசொன்றை உறுதி செய்யத் துணிந்திருக்கிறது. ஐ.தே.க. அரசாங்-கத்தில் ஏனைய சிறுபான்மை மதங்களுக்கு இருந்த அரை அமைச்சுக்களைக் கூட (இந்து, முஸ்லிம் ராஜாங்க அமைச்சுக்கள்) பொ.ஐ.மு அரசாங்கம் பதவிக்கு அமர்ந்ததும் அவற்றை இல்லாமல் செய்ததுடன் அவற்றை திணைக்க-ளங்களாகச் சுருக்கியது. ஆனால் பௌத்த சாசன



அமைச்சினை முழு அமைச்சாக தொடர்ந்து வைத்திருப்பதுடன் புத்த சாசன அமைச்சை நேரடியாக ஜனாதிபதியே பொறுப்பேற்றார். இரண்டாயிரமாம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 14 கோடி ரூபா பௌத்த சாசன அமைச்சுக்கு ஒதுக்கியுள்ளதும் இங்கு குறிப்பிடத்-தக்கது. இன்றைய ஜனாதிபதி நாட்டின் பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சர் மட்டுமல்ல அவர் புத்த சாசன அமைச்சரும் கூட. இந்தப் பின்னணியில் பார்க்கின்ற போது இன்றைய சமவாய்ப்புச் சட்டத்தை கொண்டுவர முன்னர் இலங்கையை மதசார்பற்ற அரசாக முதலில் பிரகடனப்படுத்-தியிருக்க வேண்டும். இந்த அரசால் அதனைச் செய்ய முடியாமல் போனது ஏன்?

## எச்சரிக்கை

இது வரை எந்த அரசாங்கமும் வழங்காத அளவுக்கு வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய அரசாங்கமும் இது தான். அது போல கொடுத்த வாக்குறுதிகளை அளவுக்கதிகமாக மீறிய அரசாங்கமும் இது தான். அரசாங்கத்தின் காலத்தை கடத்தவும், உள்ளூரிலும் சர்வதேச அரங்கிலும் பிரச்சாரம் செய்யவும் நாளுக்கொரு நாள் புதிய புதிய காகிதச் சட்டங்களை அறிமுகப்படுத்துவதில் பீரிசுக்கு நிகர் பீரிசே தான்.

ஒரு போதும் நடைமுறைக்கு வராத இந்தச் சட்டம் குறித்து நுணுக்கமாக ஆராய்வது காலவிரயச் செயல். ஏனெனில் தீர்வுப் பொதி குறித்து நடக்காத விவாதமா? ஆராயாத வல்லுனர்களா? அது போல இதுவும் எதனையும் சாதிக்கப் போவதில்லை.

உண்மையில் அரசின் இந்தப் போலி முனைப்புகள் ஒரு புறம் இருக்க இன்னொரு புறம் சிங்கள பௌத்த பேரினவாத தரப்பில் இதனைப் பார்க்கும் விதத்தை அறிந்தால் ஆச்சரியப்-படுவீர்கள். சமீப காலமாக சிங்களப் பத்திரி-கைகளில் நடக்கும் விவாதம் இந்தச் சட்டம் சிங்களவர்களுக்கு இல்லாத உரிமைகளை தமிழர்-களுக்கும், முஸ்லிம்களுக்கும் வழங்கப்-போவதாகவும், ஏற்கெனவே சிங்கள பௌத்தர்-களுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்ற இவ்வினங்கள் இதனால் விசேட சலுகைகளை அனுபவிக்கப் போவதாகவும் இதனை தடுத்து நிறுத்தாவிடில் சிங்கள இனம் அழிந்து விடும் என்றும் எச்சரிக்கின்றன.

கடந்த 3ஆம் திகதி "திவயின" ஞாயிறு இதழில் தலைப்புச் செய்தியாக "சமவாய்ப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டால் நீதிமன்றம் செல்ல ஒரு கூட்டம் தயாராகிறது" என்கிற செய்தி வெளியானது. இதன் உள்ளடக்கத்தில், இச்சட்டம் கொண்டு வரப்படுமானால் அது அரசியலமைப்-பின் பல பிரிவுகளுக்கு முரணாகும் என்றும் ஏதேனும் ஒரு அடிப்படை உரிமை அல்லது மொழி சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்த சிக்கலைத் தீர்க்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கே உரியது என்றும் அவ்வாறான அடிப்படை உரிமைகள் குறித்த விடயங்களைப் பற்றிய தீர்மானிக்கும் அதிகாரத்தை வேறு நிறுவனங்களுக்கு வழங்கு-வதன் மூலம் 126வது பிரிவு மீறப்படுவதாகவும் இதனை எதிர்த்து நீதிமன்றம் செல்லத் தயாராகி வருவதாகவும், கூறப்பட்டிருந்தது.

தற்செயலாக சமவாய்ப்பு பற்றிய ஆணைக்-குழுவுக்கு நியமிக்கப்படும் ஆணையாளராக அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் நியமிக்-கப்பட்டால் சிங்கள பௌத்தர்களுக்கு நியாயம் கிடைக்காது போகுமென்றும் தெரிவிக்கின்ற அவர்கள் இச்சட்டம் அரசியலமைப்பின் 12வது பிரிவுக்கு முரணானது என்றும் தெரிவிக்கின்றனர்.

இது நடைமுறைக்கு வந்தால் பௌத்த பாடசாலைகளில் 20 வீதம் அல்லது அதற்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் மாணவர்கள் சேர்க்கப்-பட்டால் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிக்-கின்ற அரசியலமைப்பின் 9வது பிரிவுக்கும் அது முரணானதாக அமையுமெனவும் தெரிவித்துள்-ளனர்.

கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட பிரதே-சத்திற்குள் தமிழ் முஸ்லிம்களின் சனத்தொகை 70வீதமாக இருப்பதாகவும் இச்சட்டம் அமுலுக்கு வந்தால் சிங்கள-பௌத்த பாடசாலைகளின் தனித்துவத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக ஆக வாய்ப்புண்டெனவும் தெரிவிக்கின்றனர்.

இது தவிர இச்சட்டம் கொண்டுவரப்பட்டால் இந்நாட்டிலுள்ள "சாதி" எனும் சமூகக் கட்டமைப்-புக்கு சில தனித்துவங்கள் காக்கப்படுமெனவும் அவ்வாறு செய்யப்பட்டால் சிங்களவர்கள் சாதி ரீதியாக பிளவுபட்டு அழிந்து விடுவார்கள் என்றும் தொழில் வாய்ப்புகளிலும் விகிதாசாரம் பின்பற்-றப்படுமானால் சிங்களவர்களுக்கு அது பாதகமாக அமையுமெனவும் இதனைக் கருத்திற் கொண்டு தாமதிக்காது இதற்கெதிராக சட்ட நடவடிக்கை-களை மேற்கொள்ள தயாராகி வருவதாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொண்டா ரெஸ்ட் அஷ்ரப் பிஸி

இதே நாளைய "திவயின" பத்திரிகையில் "சமவாய்ப்புச் சட்டத்தின் ஆபத்து!" என்ற தலைப்பில் சானக்க லியனாராச்சி என்பவர் எழுதி-யுள்ள கட்டுரை முழுக்க முழுக்க முஸ்லிம்க-ளுக்கும் அமைச்சர் அஷ்ரஃப்புக்கும் எதிராக எழுதப்பட்டிருக்கிறது. சமீப காலமாக பேரினவா-தத்தின் தாக்குதலுக்கு அதிகளவு அகப்பட்டிருப்-பவர் அஷ்ரஃப் என்பது கவனிக்கத்தக்கது. அச்செய்தியில்,

"...சிறுபான்மை இனங்களுக்கு நாட்டின் உயர்ந்த இடத்திலிருக்கும் சிங்கள பௌத்த பாடசாலைகளில் உயர்ந்தபட்ச கோட்டாவை கேட்கிறார். சாஹிரா கல்லூரி போன்ற பாடசா-லைகளில் இடப்பற்றாக்குறை காரணமாக அவர் இப்படிக் கேட்கிறார் என்றால் அதனை சிங்கள பௌத்த மாணவர்களின் வாய்ப்புகளை பறிப்பதற்-கூடாகவா செய்ய வேண்டும்... இன விகிதாசாரத்-தின்படி தான் இந்தக் கோரிக்கை விடுக்கப்படுகிற-தென்றால் இந்த நாட்டில் 70 வீத சிங்கள பௌத்தர்களுக்கு சாஹிராவில் கோட்டா வழங்க அஷ்ரஃப்பால் முடியுமா...?


எனவே நாங்கள் தெளிவாகக் கூற விரும்பு-வது, பௌத்த பாடசாலைகளுக்குள் முஸ்லிம்கள் நுழைந்து முஸ்லிம்களின் கலாசார தனித்துவ-ங்களை பௌத்த பாடசாலைகளுக்குள் நுழைக்க அஷ்ரஃப் திட்டமிட்டு வருகிறார் என்பதே. அவருக்குத் தேவைப்படுவதெல்லாம் தற்போதைய நெருக்கடிகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தனது அரசியல் இலக்கை அடைவதே.

...எனவே இந்த நிலைமையை விளங்கிக் கொண்டு சரியான சிங்களத் தலைமை உருவாக்-கப்பட வேண்டும்." எனக் கோருகிறது அந்தக் கட்டுரை.

## பேரினவாதமயப்படுத்தப்படும் மக்கள்

20வீத இட ஒதுக்கீட்டை அஷ்ரஃப் கோரிய-தாக முதலில் செப்டம்பர் 19ஆம் திகதி ஞாயிறு "திவயின" பத்திரிகையின் தலைப்புச் செய்தியி-லேயே வெளியானது. பின்னர் 21ஆம் திகதி வெளியான "திவயின"வில் ஆசிரியர் தலையங்-கத்திலும் இதே விடயத்துக்காக அஷ்ரஃப்பைத் தாக்கி எழுதப்பட்டிருந்தது. இல்லாத ஒன்றை சோடித்து இனவாதத்தைத் பரப்புவதற்காக வெளியான இச்செய்தியையே ஆதாரமாகக் கொண்டு தான் பல பேரினவாதக் கட்டுரைகள் வெளியாகத் தொடங்கின. புனையப்படும் ஒரு செய்தி நிறுவனமயப்பட்ட பேரினவாதத்தால் எப்படி வேகமாக நம்பவைக்கப்படும் என்பதற்கும். இலகுவாக அதற்குள் விழுமளவுக்கு பேரினவாதம் எந்தளவு மக்கள்மயப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கும் நல்ல உதாரணம்.

ஒக்டோபர் 7ஆம் திகதி பாராளுமன்றம் கூடிய போது அமைச்சர் அஷ்ரஃப் தான் கூறாத ஒன்றைப் பற்றி பிரச்சாரம் செய்யப்பட்டு வருவதாகக் கூறவேண்டியதாயிற்று. டீ.என்.எல். தொலைக்-காட்சி சேவையில் அஷ்ரஃப்பிடம் எடுக்கப்பட்ட பேட்டியிலும் இது பற்றிய கேள்விகள் எழுப்பப்பட்டன.




**திவய்ன —8—10—99 இல் வெளியான முழுப்பக்க விளம்பரமொன்று**

ஸ்ரீ லங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நீதி மற்றும் அரசியலமைப்பு விவகார, இன விவகார மற்றும் தேசிய ஒன்றிணைப்பு அமைச்சரின் ஆணையின்படி 1999 செப்டம்பர் 24ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள

சமவாய்ப்புச் சட்டத்தை உடனடியாக வாபஸ்பெறுமாறு அரசை நிர்ப்பந்தித்தல்

இல்லாத பிரச்சினையை உருவாக்குகின்ற, சகல இன மற்றும் மதங்களுக்கிடையிலான ஐக்கியத்தை சிதைக்கின்ற, சாதி பேதத்தை சட்டமாக்குகின்ற, ஒட்டுமொத்தத்தில் தேசத்துக்கே மோசமிழைக்கின்ற

சமவாய்ப்புச் சட்டத்தை

உடனடியாக மீளப்பெறுமாறு அரசை வலியுறுத்துகிறோம்.

அதற்காக அணிதிரள்வோம்!

எதிர்ப்புக்கூட்டம் 14 வியாழன் மாலை. 4.30க்கு பௌத்தாலோக்க மாவத்தையிலுள்ள பௌத்த சம்மேளன மண்டபத்தில்.

1. தேசிய மகா சங்கம்.
2. ஸ்ரீ லங்கா பௌத்த மகா சம்மேளனம்
3. சாசன சேவை சங்கம்
4. ஆனந்தா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் உள்ளூர் வெளிநாட்டுக் கிளைகளும் அனுசரணை அமைப்புகளும்.
5. நாலந்தா வித்தியாலய பழைய மாணவர் சங்க கூட்டுக்கமிட்டி
6. அகில இலங்கை பௌத்த வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க சம்மேளனம்
7. சிங்கள வீர விதான இயக்கம்
8. தேசிய வளங்களை பாதுகாக்கும் நிறுவனம் (தெச ரெச)
9. மியுசியஸ் வித்தியாலய நம்பிக்கைச் சபை
10. அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம்
11. அகில இலங்கை பௌத்த மாணவர். சங்க சம்மேளனம்
12. பௌத்த இளைஞர் சங்கம்—கொழும்பு
13. பௌத்த இளைஞர் சங்கம்—பன்னிபிட்டிய
14. பௌத்த இளைஞர் சங்கம்—நாவல
15. தர்மராஜ வித்தியாலய பழைய மாணவர் சங்கம்
16. தேசிய வீர மன்றம்
17. பௌத்த கல்வியை கட்டியெழுப்பும் செயற்குழு
18. தர்மராஜய மன்றம்
19. வெற்றி—கொழும்பு
20. சிங்கள அதிகார சபை
21. தாய்நாட்டை காக்கும் நிறுவனம்
22. அகில இலங்கை பௌத்த பெண்கள் சம்மேளனம்
23. தர்மாச்சாரினி இயக்கம்.

நன்றி - நூலகத்திட்டம்



இப்படித்தான் கடந்த 1998 ஜனவரி 18ஆம் திகதியன்று வெளியான திவயின பத்திரிகையின் ஆசிரியர் தலையங்க்த்தில், அஷ்ரஃப் ஆயுதம் தாங்கிய நபர்களுக்கு ஆதரவளித்து வருகிறார் என்றும், பயங்கரவாதத்தில் ஈடுபட்டுள்ள பிரிவினைவாத சக்திகளுக்கும், திவயினவுக்கு எதிராக இருப்போருக்கும் ஆதரவளிப்பதாக எழுதப்பட்டிருந்ததை எதிர்த்து 25 கோடி ரூபா நஷ்டஈடு கோரி வழக்கு தொடர்ந்திருக்கிறார்.

இவ்வாறு ஒரு பக்கம் பேரினவாதம், இன்னொருபுறம் முதலாளிமார் இவ்விரு சாராரும் இன்றைய இனப்பிரச்சினை மாத்திரமல்ல நாட்டில் எந்த அடக்கப்படும் பிரிவினரதும் உரிமைகளை வழங்கவிடப் போவதில்லை என்பதற்கு தீர்வுப் பொதி தொடங்கி, தொழிலாளர் மற்றும் பெண்கள் சாசனங்கள் ஈறாக இன்றைய சமவாய்ப்புச் சட்டம் வரை சிறந்த உதாரணங்கள்.

### வீரவிதானவின் அறிக்கை

இந்த சமவாய்ப்புச் சட்டத்துக்கு எதிராக சிங்கள வீரவிதான இயக்கம் வெளியிட்ட அறிக்கை பின்வருமாறு. (திவயின ஒக்டோபர் 8)

"...சர்ச்சைகள் தோன்ற வழியில்லாத சந்தர்ப்பங்களிலும், தேர்தல் போன்ற தீர்மானகரமான நிலைமைகளிலும் சிறுபான்மையோர் செய்தது அரசின் பதவிகளை கைப்பற்றும் எத்தனிப்பையே. அல்லது அரசை விரல்நீட்டி தோப்புக்கரணம் போட வைப்பதே.

...குறைந்த வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு குறைந்த எண்ணிக்கையே இருக்கின்ற இருவர்கள் அரசை அமைப்பதில் கலந்து கொண்டு பின் அரசையே பிணைக்கைதிகளாக ஆக்கி நாட்டிலுள்ள சிங்களவர்களின் உரிமைகளையும், இறைமையையும் வரலாறு முழுக்கச் சுரண்டி வந்துள்ளனர். அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிவடைகையில் தமக்கு சலுகைகள் தந்து வாழவழிவிட்ட அரசாங்கத்தோடு மோதி எதிர்க்கட்சிக்கு தாவும் வரலாற்றையும் அவர்கள் கொண்டிருக்கிறார்கள்...

1. எனவே சிறுபான்மையினங்கள் மக்களின் அரசாங்கத்தை மிரட்டுவதை, நிர்ப்பதிப்பதை கண்டிப்போம்!

2. நாட்டின் அரச யந்திரத்தை முடக்க முயற்சி செய்யும் சிறுபான்மை இனவாதிகளை-பொம்மைத் தலைவர்களுக்கு இடம்கொடவேண்டாம்.

3. நாட்டின் அனைத்து தேசபக்தி கொண்டவர்கள்-கட்சிகள் ஆகியன, இது இனத்துக்கும், இனஐக்கியத்துக்கும் ஏற்பட்டுள்ள ஆபத்து என்பதை கருத்திற்கொண்டு மிகவும் கவனமாகவும், முன்யோசனையுடனும் செயற்படுமாறும் கட்சி பேதமற்று இனத்துக்காக ஐக்கியப்படுமாறும் கேட்டுக்கொள்கிறோம்...!"

### 77 படுகொலைகளுக்கு காரணம் தமிழர்கள்?

சமவாய்ப்புச் சட்டத்துக்கு எதிராக பௌத்த இளைஞர் காங்கிரஸ் ஒக்டோபர் 8ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் மகா சங்கத்தின் தலைவர் மடிகே பஞ்ஞானசீல உட்பட பல பிக்குமாரும், இன்னும் பல பேரினவாதிகளும் உரையாற்றியதோடு மண்டபம் வழிய பலர் கலந்து கொண்டிருந்தனர். மடிகே பஞ்ஞானசீலர் பேசும்போது, "...1977 ஓகஸ்ட் 23இல் யாழ்ப்பாணத்தில் சிங்களக் கடைகளை உடைத்து, அழித்து மகா கலவரத்தை உண்டுபண்ணி 23,ஆயிரம் சிங்களவர்கள் அனாதைகளாக்கப்பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் புராதன பெரிய விகாரைகள் மட்டும் 21 இருந்தது. இன்று அவை என்ன ஆனது? ஈழ வரைபடத்தில் உள்ளடக்கப்படுகிற கடற்பகுதியில் மூன்றில் இரண்டு பகுதி சிங்களமல்லாதவர்களின் கைகளுக்காம். அப்படி நடந்தால் மீன்பிடித் தொழிலிலுள்ள 74 வீத சிங்கள மீனவர்களின் கதி என்ன? ...இப்படி சிங்களவர்களின் உரிமைகளை பறித்து விட்டிருக்கிற நிலையில் இப்போது இந்த சமவாய்ப்புச் சட்டம்..." என்றிருக்கிறார்.

### அரசு எப்படி சரணடைந்தது?

எப்படியோ 7ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவிருந்த இந்த சமவாய்ப்புச் சட்டமூலம் அன்று நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருக்கக்கூட இல்லை. எனவே பேரினவாதத்தின் திட்டமிட்ட எதிர்ப்புகள் அரசை எப்படி சரணடையச் செய்தது என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

இதெல்லாவற்றையும் விட இம்முறை இது சிங்கள மாணவர்களுக்கு பாதகமான ஒன்று என்ற பிரச்சாரத்தை கட்டவிழ்த்து ஆனந்தா, நாலந்தா, தர்மராஜ ஆகிய பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் சிங்கள அமைப்புகள் எல்லாவற்றையும் சேர்த்து பெரும் ஆர்ப்பாட்டமொன்றை 7ஆம் திகதியன்று மருதானையில் நடத்தியிருந்தனர். 9ஆம் திகதி விசாகா மகளிர் வித்தியாலயத்தின் பழைய மாணவிகள் சங்கத்தினரைக் கொண்டு பம்பலப்பிட்டியில் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

**மேலோட்டமாகப் பார்த்தால். இவை வெறும் சம்பவங்கள், செய்திகள் தான். உன்னிப்பாகவும், எச்சரிக்கை கண்காணிப்புடனும், தூரநோக்குடனும் இதனைப் பார்க்கத் துணிபவர்களுக்கு எதிர்காலம் பற்றிய அச்சத்தையும், அதன் ஆபத்தையுமே உணர்த்தும். இங்கு கூறப்படும் அமைப்புகள் வெவ்வேறான அமைப்புகளாகத் தோன்றினாலும், இன்று அதற்கு ஒரே நிகழ்ச்சி நிரலின் கீழ் அணிதிரளக்கூடிய பேரினவாதச் சித்தாந்தமும், அதற்கான நிறுவனமயப்பட்ட அமைப்பு வடிமும் உண்டு. அரசு அதற்குக் கட்டுப்பட்டு இருக்கிறது. தீர்மானிக்கும் ஆற்றல் படிப்படியாக பாசிச சக்திகளிடம் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கிறது. பாசிசம் மக்கள் மயப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தற்போதைக்குக் கூறலாம்.**

### நிறுவனமயப்படும் பாசிசம்

பாசிசம் நிறுவனமயப்படும் போது அது அரசதிகாரம், அரச நிர்வாகம், படை, வெகுஜன இயக்கங்கள், மத நிறுவனங்கள், நீதித்துறை என சகல இடங்களிலும் இரகசியமாக காலூன்றும். இன்று அந்த காலூன்றல் பாடசாலை உள்ளிட்ட கல்வித்துறையிலும் விதைக்கப்படத் (planting) தொடங்கி விட்டன. அதன் முக்கிய ஆரம்பம் தான் இந்த நிலைமையைப் பயன்படுத்தி சிங்கள பௌத்த மாணவர் மத்தியில் சென்று அவர்களை வீதிக்கு இறக்கி ஆர்ப்பாட்டத்துக்கு தயார் படுத்தியமை.

மேலோட்டமாகப் பார்த்தால். இவை வெறும் சம்பவங்கள், செய்திகள் தான். உன்னிப்பாகவும், எச்சரிக்கை கண்காணிப்புடனும், தூரநோக்குடனும் இதனைப் பார்க்கத் துணிபவர்களுக்கு எதிர்காலம் பற்றிய அச்சத்தையும், அதன் ஆபத்தையுமே உணர்த்தும். இங்கு கூறப்படும் அமைப்புகள் வெவ்வேறான அமைப்புகளாகத் தோன்றினாலும், இன்று அதற்கு ஒரே நிகழ்ச்சி நிரலின் கீழ் அணிதிரளக்கூடிய பேரினவாதச் சித்தாந்தமும், அதற்கான நிறுவனமயப்பட்ட அமைப்பு வடிமும் உண்டு. அரசு அதற்குக் கட்டுப்பட்டு இருக்கிறது. தீர்மானிக்கும் ஆற்றல் படிப்படியாக பாசிச சக்திகளிடம் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கிறது. பாசிசம் மக்கள் மயப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தற்போதைக்குக் கூறலாம்.

-ஜென்னி

## ஜனாதிபதித் தேர்தலில் பொது இடதுசாரி வேட்பாளர்:

# சாத்தியமாகுமா?

வாசுதேவ நாணயக்கார பிரேமதாச காலத்தில் மிகவும் கிளர்ச்சிகரமான ஒரு அரசியல் தலைவராக இருந்தவர். லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த இவர் 60களில் கட்சியில் ஏற்பட்ட அரசியல் சர்ச்சையொன்றின் இறுதியில் அவரும் விக்கிரமபாகு உள்ளிட்ட இன்னும் பலரும் வெளியேறி நவசமாஜக் கட்சியை அமைத்துக்கொண்டனர்.

அதன் பின்னர் நவசமசமாஜக் கட்சியை கட்டியெழுப்பி 1982ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டார். 1989ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 225 பேரைக் கொண்ட பாராளுமன்றத்தில் ஒரே ஒரு இடதுசாரி வேட்பாளர் தான் வென்றார். அது வாசுதேவ நாணயக்கார.

1993இல் பொது ஜன ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டபோது அதனுடன் ஏனைய இடதுசாரிக் கட்சிகள் போய் இணைந்த போது பொ.ஐ.மு. வை ஒரு முற்போக்கு அணியென்று கூறி தமது நவ சமசமாஜக் கட்சியும் இணைய வேண்டும் என கூறினார். கட்சிக்குள் விவாதம் நடந்தது. சேரக்கூடாது என்ற கருத்துடைய விக்கிரமபாகு அணி பலமானதாக இருந்தது. இறுதியில் வாசு கட்சிக்குள் இருந்த தனது ஆதரவாளர்களையும் சேர்த்துக்கொண்டு லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்தார். தனது முன்னாள் கட்சியான லங்கா சமசமாஜக்கட்சியோடு சேர்ந்து பொ.ஐ.மு. வில் இணைந்தார். 1994 தேர்தலில் ரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிக விருப்பு வாக்குகளை பொ.ஐ.மு.வுக்கு பெற்றக்கொடுத்தார். இறுதியில் பொ.ஐ.மு. இறுதி மூச்சு விட்டுக்கொண்டிருக்கையில் அதிலிருந்து தற்போது விலகியிருக்கிறார்.

வாசுதேவ நாணயக்கார அரசாங்கம் தனது மூன்றாவது ஆண்டைத் தாண்டும் போது தான் இது மக்கள்



விரோத அரசாங்கம் என்பதைப் புரிந்து கொண்டார். படிப்படியாக அதனை அம்பலப்படுத்தத் தொடங்கினார் விமர்சிக்கத் தொடங்கினார். ஆனால் இந்த அரசாங்கம் கவிழும் அளவுக்கு தான் நடந்து கொள்ளமாட்டேன் என்றும். அது ஐ.தே.க.வுக்கு சாதகமாக அமையுமென்றும் தொடர்ந்தும் கூறிவந்தார். இடையில் அவசரகால சட்டத்தை இந்த அரசாங்கமும் தொழிலாளர்களின் உரிமைகளை நசுக்கவும், ஜனநாயக விரோதமாகவும் பாவித்துவருவதாகக் கூறி லங்கா சமசமாஜ கட்சியை அவசரகால சட்டத்துக்கு எதிராக பாராளுமன்றத்தில் வாக்களிக்கும்படி வற்புறுத்தினார்.

ஆனால் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் தான் தனித்தேனும் எதிர்த்து வாக்களிப்பதாகக் கூறினார். அதன்பின் கட்சியும் எதிர்த்து வாக்களிப்பதாகத் தீர்மானித்தது. ஆனால் கட்சியில் அத்தாவுட செனவிரத்ன தொடர்ந்து அரசாங்கத்துக்கு ஆதரவாகத்தான் வாக்களிப்பதாகக் கூறி அப்படியே செய்து வந்தார்.



இதற்கிடையில் அரசாங்கத்தின் போக்குகள் மேலும் மோசமடைய ல.ச.ச.க.வை அரசாங்கத்தை விட்டு விலகும்படி வற்புறுத்தினார். ல.ச.ச.க.வினரில் பலர் இன்று அரசாங்கத்தின் முக்கிய பதவிகளில் சொகுசு வாழ்க்கையை அனுபவித்து வரும் நிலையிலும், மரபு இடதுசாரிகளின் கடைசிகாலத்தை போக்கிவரும் நிலையிலும் வாசுதேச நாணயக்கார எதிர்க் கட்சி அங்கத்தவராக தான் செயற்படப்போவதாக அறிவித்தார். ல.ச.ச.க. தலைமையோ, வாசு அப்படி செய்தால் கட்சியை விட்டு நீக்க வேண்டிவரும் என்று மிரட்டிப் பார்த்தது. ஆனால் வாசு இறுதியில் தான் தீர்மானித்தபடி எதிர்க்கட்சி வரிசையில் போய் அமர்ந்தார். இன்றும் எதிர்க்கட்சி உறுப்பினராகவே செயற்பட்டு வருகிறார்.

வாசு பொ.ஐ.மு.வில் இருக்கும் போதே ஒரு மாற்று இடதுசாரிக்கட்சியொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அவர் மீண்டும் நவ சமசமாஜக்கட்சியில் வந்து இணையப் போவதாகவும் கதைகள் அடிபட்டன. என்ற போதும் அவர் ஜனாதிபதித் தேர்தலில் இறங்கப்போவதாகவும் புதிய கட்சியொன்றை தொடக்கியிருப்பதாகவும் தற்போது தெரிய வருகின்றன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறையை 1995 யூன் 15க்குள் நீக்குவதாக சென்ற 1994 ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி.க்கும் இந்நாட்டு மக்களுக்கும் வாக்குறுதி அளித்து, அதன் நிமித்தம் ஜே.வி.பி.யை போட்டியிலிருந்து விலகச் செய்திருந்தார் சந்திரிகா அமமையார். இன்று ஐந்து வருடங்கள் ஆகியும் ஜனாதிபதி முறையை தொடர்ந்து வைத்துக் கொண்டு வருகிறார் அம்மையார். இந்த நிலையில் மீண்டும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான தயாரிப்புகளை பொ.ஐ.மு செய்து வருகிறது. எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது இடதுசாரி வேட்பாளரை நிறுத்தி அவரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறையை நீக்குவதற்கான குறியீடாக பாவிக்குமாறு கோரி ஜே.வி.பி. களத்தில் குதிக்க தயாராகி வருகிறது. ஏனைய இடதுசாரி சக்திகளுடனும் இது குறித்து பேசி வருகிறது.

நவ சமசமாஜக்கட்சியும் இது விடயத்தில் ஜே.வி.பி.யின் வேட்பாளரை ஆதரிக்க முடிவு செய்திருப்பதாக கூறி வருகின்றனர்.

ஆனால் வாசவோ இன்னொரு முனையில் வேறொரு வேட்பாளரை நிறுத்துகின்ற முயற்சியில் இறங்கியிருக்கிறார். இவருடன் சேர்ந்து முன்னால் வட கிழக்கு மாகாண சபையின் அமைச்சராக இருந்த அபு யூசுப்பும் ஓடுப்பட்டுத் திரிவதாக தெரிகிறது. ஆரம்பத்தில் சர்வோதய இயக்கத்தின் தலைவர் ஆரியரத்னவை தேர்தலில் நிறுத்த முயற்சித்து பின்னர் இப்போது அவர் பொ.ஐ.மு.வில் இருக்கும் அமைச்சர் மகிந்த ராஜபக்சவை அதிகளவில் நம்புகிறார். அவரை வெளியே எடுத்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த முயற்சிக்கிறார் வாசு. கெனிமண்டல எனும் சஞ்சிகையின் ஒக்டோபர் இதழுக்கு அவர் அளித்திருக்கும் பேட்டியில் மகிந்த போட்டியிடாவிட்டால் தான் போட்டியிடுவதாக கூறியிருக்கிறார். வாசுவின் இப்போக்கை எதிர்த்து கடந்த லக்பிம பத்திரிகையில் எழுதிய விக்கிரமபாகு, வாசு செய்வது துரோகமென்றும், ஜனாதிபதி முறையை ஒழிக்கின்ற நோக்கத்திற்காக ஜே.வி.பி. நிறுத்தும் பொது இடதுசாரி வேட்பாளரை ஆதரித்து நிற்பதே செய்ய வேண்டியது என்றும், அப்படி ஜே.வி.பி. சிலவேளை நிறுத்தாமல் போனால் கூட அடுத்ததாக புதிய இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த ஒரு தமிழ் தோழரை நிறுத்தி ஐ.தே.க. மற்றும் பொ.ஐ.மு. ஆகியவற்றுக்கு போகக்கூடிய தமிழ் மற்றும் இடதுசாரி வாக்குகளை போகச் செய்யாமல் பண்ணி நெருக்கடி கொடுக்கலாம் என்றும். அதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த விவாதத்துக்கான அரசியல் மேடையாக அதனைப் பயன்படுத்தலாம் என்றும். அப்போது இந்த முதலாளித்துவ கட்சிகளால் ஒன்றும் செய்ய இயலாது போகுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

1982ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் ஜே.வி.பி. சார்பில் ரோகண விஜேவீர போட்டியிட்ட போது அத்தேர்தலில் வாசுவும் போட்டியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று நிலைமை வேறு.

எப்படியிருப்பினும் வாசுவின் இன்றைய போக்கானது இடதுசாரி வாக்குகளை பிளவடையவே செய்கிற நிலையில், இதனை விட அவர் பொ.ஐ.முவிலேயே இருந்து தொலைத்திருக்கலாம் என்று பேசும் அளவுக்கு ஆக்கியிருக்கிறது.

—கோமதி

நன்றி - நூலகத்திட்டம்



# சமாதானம் வேண்டுமென்போர் பிச்சைக்காரர்களா போர்வெறியர்களின் புதுவியாக்கியானம்

அண்மைக்காலத்தில் நாட்டில் போரை ஒழித்து சமாதானம் கொண்டு வரப்படவேண்டும் என்று பல்வகையான மட்டங்களிலிருந்தும் குரல் எழுப்பப்பட்டுக் கொண்டு வருவதை நாம் அன்றாடம் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்றவை மூலம் அறிந்து வருகிறோம். இன்னும் கொழும்பு நகரின் பல முக்கிய கேந்திர நிலையங்களிலும் சமாதானத்துக்கான ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தப்பட்டு வருவதையும் நாம் கண்டுள்ளோம்.

ஆனால் இவர்களின் ஆர்ப்பாட்டமும் போருக்கெதிரான குரலும் போரைத் தொடர்ந்து இறுதி வெற்றி காணும் வரை தொடர வேண்டும் என்று வைராக்கியம் கொண்டுள்ள யுத்த வெறிகொண்ட மேலாதிக்கக்காரர்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தியிருப்பதால் அவர்கள் ஆத்திரங் கொண்டுள்ளனர். அவர்களின் இந்த ஆத்திரத்தின் வெளிப்பாடு, யுத்தத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கும் அத்தனை பேரையும் சமாதானப் பிச்சைக்காரர்கள் என்று நையாண்டி செய்ய வைத்துள்ளது.

இந்தப் பிச்சைக்காரர்கள் என்ற பதம் ஏன் பாவிக்கப்பட்டது. சமாதானத்துக்காக குரல் கொடுப்போர் பிச்சைக்காரர்களா?

இதற்கான காரணமாக அவர்கள் காட்டுவது இதைத்தான்.

அனேகமாக யுத்தத்துக்கெதிரான ஆர்ப்பாட்டங்களை பல அரச சார்பற்ற அமைப்புகளில் (NGO) இருந்தோர்களே, கொழும்பின் கேந்திர நிலையங்களின் பலவற்றின் மத்தியில் செய்து காட்டினர். இங்குள்ள என்.ஜி. ஓக்கள் என்பவை பிறநாட்டு என்.ஜி.ஓக்கள் அளிக்கும் பணத்தில் தம்தேவைகளைப் பூர்த்தி செய்பவை. அதற்காகப் பிறநாட்டிலிருந்து இவர்களுக்கு ஊதியம் வழங்குபவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இவர்கள் ஆடுபவர்கள். இவர்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் பணந் தான். அதனால் இவர்கள் போலியாக சமாதானம் சமாதானம் என்று உச்சரிக்கும் பிச்சைக்காரர்கள் என்பதே போரை இறுதிவரை நடத்த விரும்பும் வெறியர்களின் வியாக்கியானம்.

இப்படிப் போர் விரும்பிகள் சமாதானத்துக்காகக் குரல் கொடுப்போரை பிச்சைக்காரர்கள் என்று கூறி ஒதுக்குவதால் உண்மை மறைக்கப்பட்டு விடுமா?




இன்று யார் சமாதானத்தை விரும்பவில்லை? பிச்சைக்காரர்கள் சமாதானத்தை பேசப்படாதா? பணத்தின் மேல் குந்தியிருந்து கொண்டு யுத்தத்தால் பணத்தையும் சேர்த்துக் கொள்வோருக்கு இது அசௌகரியத்திற்குரிய ஒன்று தான்.

ஆனால், அதற்காக சமாதானத்தின் குரலைப் பிச்சைக்காரர்களின் குரல் என ஒதுக்க முடியுமா?

சமாதானம் விரைவில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பல சிங்கள பௌத்த, கிறிஸ்தவ குருமார் குரல் கொடுத்திருக்கின்றனர். சிறிது காலத்திற்கு முன்னர் இரண்டு பௌத்த பிக்குமார் வடக்கிற்கு பயணம் செய்து சமாதானமே தேவை என்ற செய்தியுடனேயே வந்தனர். ஏன் அஸ்கிரிய பீடத்தைச் சேர்ந்த மஹாநாயக்க தேரர் கூட பலதடவை விரைவில் யுத்தத்தை ஒழித்து சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். லலித்கொத்தலாவலை தலைமை தாங்கிய வர்த்தக சமூகத்தவர் சமாதானத்தை விரும்பவில்லையா? இன்றும் சர்வோதய அமைப்பின் தலைவர் ஆரியரத்தின சமாதானத்துக்காக யாத்திரை செய்ய அடுக்குப் பண்ணுவதாகக் கூறவில்லையா? ஏன் இன்றைய அனேகமான அரசியல் கட்சிகள் யாவும், பொதுஜன ஐக்கிய முன்னணி உட்பட சமாதானத்தைக் கொண்டு வர வேண்டும் என்று தானே குரல் கொடுக்கின்றன. இன்றும் வாய் ஓயாது அடிக்கடி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தியே தீருவேன் என்று ஜனாதிபதி கூறவில்லையா? இவர்கள் எல்லாம் சமாதானப் பிச்சைக்காரர்களா?


ஆனால் நமது போர் வெறியர்களுக்கு இவை புரியப் போவதில்லை. அவர்கள் வேற்றுலகத்தவர் மாதிரி நடந்து கொள்வதற்குக் காரணம் அவர்கள் செவிகளில் போருக்கெதிரான குரல்கள் இறங்குவதில்லை. அண்மையில் அபே ஹண்ட (எங்கள் குரல்) என்ற அமைப்பினால், மாத்தறையில் தமது கணவன்மார், பிள்ளைகள் உறவினரை ராணுவ நடவடிக்கையின் போது இழந்த சிங்கள மக்கள் பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்களே அவர்கள் எந்தவகையான பிச்சைக்காரர்கள்? இவர்களின் குரலை போர் வெறியர்கள் எவ்வாறு எடுத்துக் கொள்கின்றனர்? மேலும் இந்த ஆர்ப்பாட்டம் வீரவிதான இயக்கம் மையங்கொண்டுள்ள தென்பகுதியில் தான் நடைபெற்றது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

போர் வெறியர்களுக்குத் தெரிந்ததெல்லாம் அவர்களின் சுயலாபமே. மக்கள் எக்கேடு கெட்டாலும் அவர்களுக்கு கவலை இல்லை. சிங்கள மக்களின் நலனைப் பேணுவதற்காக யுத்தம் தொடரப்படுவதாகக் கூறிக் கொண்டு ஈற்றில் அவர்களின் உரிமையையும் ஏறி மிதித்துக் கொண்டு போகும் பாரிய போக்கே இன்றைய போர்வெறியர்களின் கொள்கையாக மாறி வருகின்றது.

---

# அடுத்த தேர்தலில் அரச தந்திரோபாயங்கள்!

**- ராவய ஆசிரியர் விக்டர் ஐவன்**




அரசியல் சித்தாந்தம் பற்றி விளக்கிய் மாக்கியவல்லி (Machiavelli) தனது 'இளவரசன்' என்ற நூலில் ஆட்சியில் ஒருவர் நீண்டநாள் இருக்கவிரும்பினால், ஒன்று அவர் மக்கள் ஆதரவைப்பெற்றிருக்க வேண்டும். அல்லது மக்களை தமக்கு கீழ்படிய வைக்கும் அச்சுறுத்தலைக் கையாள வேண்டும் என்கிறார்.

நமது அரசாங்கமும் இன்னும் ஒரு ஐந்து ஆண்டுகளுக்குத் தனது ஆட்சியை நீடிக்கவே விரும்புகிறது. ஐ.தே.கவினர் 17 வருடங்கள் நாட்டைத் தம் பிடிக்குள் வைத்திருந்தார்கள் என்றால் இவர்களும் தம் ஆட்சியை நீடிக்க ஆசைப்படுவதில் வியப்பில்லை. ஆனால், அந்த நீடிப்பை இவர்கள் எவ்வாறு பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள்?

மாக்கியவல்லி குறிப்பிட்ட 'மக்கள் ஆதரவு' அல்லது 'மக்களை பயமுறுத்தி ஆதரவைத் தரவைக்கும்' ஆகிய இரண்டு முறைகளில் அரசு தற்போது எதைச் செய்யக்கூடியதாக உள்ளது?

நிச்சயமாக அரசினால் தற்போது [illegible] இருப்பதாகத் தெரியவில்லை. 'பாண் விலை குறைப்பு', 'அரிசி விலை குறைப்பு' போன்ற உத்திகள் மக்களைத் திரும்பவும் கவரவைக்க உதவும் என்று நம்புவதற்கில்லை. இந்தநிலையில் அரசுக்கு எஞ்சியுள்ள ஒரேவழி மக்களை பயமுறுத்திப் பணியவைக்கும் உபாயமே. அதை வெறும் அப்பட்டமான முறையில் செய்யமுடியாது என்பதால் அதைத் திட்டமிட்ட முறையில் அரசு செய்யவே முனைந்துள்ளது. அத்தகைய நிலையை நோக்கித்தான் இன்று அரசு திரும்பியுள்ளது.

இன்றைய அரசு பதவிக்கு வந்ததன் காரணம் அதற்குரிய முறையில் அது நாட்டில் செயற்பட்டதால் அல்ல. ஏற்கெனவே இருந்த அராஜக அடக்கு முறைப் போக்குகளுக்கு எதிராக இயங்கிய ஜனநாயகத்தை விரும்பிய மக்களே இன்றைய அரசுக்கு ஆதரவு தந்தனர். கூடவே வெகுஜன முன்னணியும் சில வாக்குறுதிகளை மக்கள் முன் வைத்தது. இவற்றில் பிரதானமானவை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது நாட்டில் பேச்சு எழுத்து சுதந்திரம் நிலைபெறச் செய்வது ஆகியவையாகும்.

ஆனால், நடந்து என்ன?

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை ஒழிப்பது ஒருபுறமிருக்க அதைச் சீர்செய்வதற்கான எந்த எத்தனமும் கூட [illegible] சுதந்திரத்திற்கு அடிப்படையாகவுள்ள மக்கள் கருத்துக்களை வெளிக்கொணரும் ஊடகவியலாளர் பெரும் அடக்குமுறைக்கு உள்ளாகியிருக்கின்றனர். இது அரசு தான் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டு எங்கோ திசைமாறிக் கொண்டு போவதாகவேபடுகிறது. அது பேசிய ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம் என்பவை எல்லாம் மிகுந்த அந்நியப்பட்ட விஷயங்களாக மாறிவிட்டன. நடைபெற்ற தேர்தல்களில் மிகவும் கீழ்த்தர நடவடிக்கைகளில் அதன் ஆதரவாளர்களை அரசு ஈடுபடச் செய்தது. இதுமட்டுமல்ல ஆகச் சிறியதான கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் கூட அது வன்முறை காடைத்தனம் போன்றவற்றைப் பிரயோகிக்காது, நேர்மையாக நடந்து கொள்ள விரும்பவில்லை என்பதை நாம் அண்மையில் கண்டுள்ளோம்.

ஆகவே இந்நிலையில் அரசு மீளவும் தனது அதிகாரத்தை நேர்மையானமுறையில் வென்றெடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. போர் மூலம் தனது பிரச்சாரத்தைச் செய்யலாம் என்று பார்த்தால் அதற்கான வழியும் ரணகோஷ -5 உடன் மூடப்பட்டு விட்டது.

ஆகவே அரசு தனது பதவியைத்தக்க வைக்க மூன்று முக்கிய துறைகளைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டியுள்ளது. இவற்றைச் செய்வதன் மூலமே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் சரி, பொதுத்தேர்தலிலும் சரி அரசு வெற்றி பெற முனைந்துள்ளது.

[illegible] மக்கள் ஊடகத்துறையை அது [illegible] இரண்டாவது உயர்நீதிமன்றம் அதன் விருப்புகளுக்கேற்ற வகையில் நடந்து கொள்ள வேண்டும். மூன்றாவது தேர்தல் ஆணையாளரும் அவர்கள் விருப்புகளுக்கேற்ற விதத்தில் வளைந்து கொடுப்பவராக இருக்க வேண்டும். வயம்ப தேர்தலின் போது நடைபெற்ற முறைகேடுகளை எதிர்த்து அச்சமில்லாது குரல் கொடுத்த தேர்தல் ஆணையாளரின் போக்கை அரசு மறக்கவில்லை.

இன்று ஊடகவியலாளருக்கு எதிராக அரசு கட்டவிழ்த்துவிட்டிருக்கும் அடக்குமுறைகளில் இருந்து இனி தேர்தல் காலம் நெருங்கி வர வர அது எவ்வாறு நடந்து கொள்ளும் என்பது பற்றி மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். அரசியல் கட்சிகள் இவைபற்றித் தற்போதிருந்தே உரிய முறையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மனித உரிமை இயக்கங்கள் யாவும் தமது தூக்கத்தில் இருந்து விழித்துக்கொள்ள வேண்டும்.

நீதித்துறை முன்னர் பல விடயங்களில் அரசுக்கு ஏற்ற வகையில் வளைந்து கொடுக்கவில்லை என்பதை மக்கள் அறிவர். ஆகவே அது தொடர்ந்தும் அவ்வாறே நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான செயற்பாடுகள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அரசு நகர்த்தப் போகும் தந்திரோபாயங்களில் மக்களை விழவைக்காமல் பார்த்துக் கொள்வது அரசியல் கட்சிகள், ஊடகத் துறையினர் ஏனைய பொது மக்கள் இயக்கங்களின் கடமையாகும். இதில் இவை [illegible] இவர்களை மன்னிக்காது.

நன்றி: Sunday Times

நன்றி - நூலகத்திட்டம்



# மொழி-கல்வியினூடாக அதிகாரத்துவம் நிலைநிறுத்தப்பட்ட அனுபவங்கள்!

-தீஸ்தா தேசல்வாத்-

## பாகிஸ்தானில் அல்லாஹ்வின் இராணுவம்! இந்தியாவில் இந்துத்துவப் படை! இலங்கையில் பௌத்த சிங்கங்கள்!

iv

இந்தியாவில் மதச்சார்பற்ற கட்சிகளாகத் தம்மைக் காட்டிக்கொள்கின்ற கட்சிகள் ஆட்சியில் இருந்த காலங்களில் வெளிவந்த பாடப்புத்தகங்களில் கூட இஸ்லாமையும் முஸ்லிம்களையும் சிறுமைப்படுத்துகிற விதமான கருத்துக்கள் நாசூக்காகப் புகுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இந்தப் புத்தகங்கள் பிரிவினைக்குப் பிந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட அரசமானியம் பெறுகிற எழுத்தாளர்களால் எழுத்தப்பட்ட புத்தகங்களாகும். பிரிவினையும், பிரிவினைக்குக் காரணமான பிரிந்து செல்வதற்கான செயல்முறையும் தொழிற்பட்ட இந்தக் காலகட்டம் பற்றி இந்த 'உத்தியோகபூர்வ' புத்தகங்களில் எந்த விடங்களும் ஆராயப்படவில்லை. 'முஸ்லிம் லீக்கின் தோற்றம்', 'லாஹுர் பிரகடனம்', முகமத் அலி ஜின்னா', 'நேரடி நடவடிக்கை நாள்' ஆகிய நான்கு தலைப்புகளின் கீழ் முழுக்கிளர்ச்சியும் ஒரு நான்கைந்து பந்திகளில் மட்டும் எழுதப்பட்டிருக்கும். இந்து மத வெறி அமைப்புக்களான ராஸ்திரிய சுயம்சேவா சங்கம் (ஆர்.எஸ்.எஸ்.) அல்லது இந்து மகாசபை போன்றவை தோன்றியது பற்றியோ, அவை அந்தக் காலத்தில் பிரிவினைக்கான கருத்துருவாக்கத்தில் குறிப்பிடத்தகளவு பங்காற்றியதையோ, இறுதியில் பிளவு நிலைக்குப் போனதைப் பற்றியோ ஒரு மெல்லிய தடயம் கூட இவற்றில் காணக் கிடைக்காது. காந்தியைக் கொலை செய்த நதுராம் கோட்சே - இவன் இந்த இரு அமைப்புக்களதும் உறுப்பினன் என்பது பற்றிக் கூட மிகவும் சொற்ப அளவான விடயங்களே எழுதப்பட்டுள்ளன.

இதைவிட மோசமானது ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் ஒரு பிரிவான வித்தியாபாரதியால் மாற்றியமைக்கப்பட்டு எழுதப்பட்ட புத்தகங்களாகும். அரச பாடசாலைகட்கு சமாந்தரமாக இவர்கள் பாடசாலைகளை நிறுவி நடாத்தி வந்தார்கள். இவர்களது பாடப்புத்தகங்கள் இந்தியாவை ஒரு ஒற்றைக் கலாசார ஒற்றை மத நாடாக்குவதனை வலியுறுத்தின. பாகிஸ்தானை 'பாபிஸ்தான்' (பாவிகளின் நாடு) என்று இழித்துரைத்ததுடன் இவை இந்திய முஸ்லிம்களின் தேசியவாத இயல்பை தொடர்ந்து கேள்விக்குட்படுத்தி வந்தன. பின்நாளில் பாரதிய ஜனதாக் கட்சியின் அதிகாரத்தில் இருந்த மாநிலங்களில் இந்து மதவெறித் தலைவர்களைத் தேசிய வீரர்களாக உயர்த்திப் பிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை சில சந்தர்ப்பங்களில் வெற்றியும் பெற்றுள்ளன.

மறுபுறத்தில் கவிஞரும் தத்துவவாதியும், சமூக சீர்திருத்தவாதியுமான காபிர் மிகவும் வசதியாக மதச்சார்பற்ற இந்தியாவின் பாடப்புத்தகங்களில் இந்து முஸ்லிம் ஐக்கியத்திற்கான தூதுவராகக் காட்டுவதுடன் ஒதுக்கப்பட்டு விடுகிறார். ஆனால், வரலாற்று ரீதியான ஆய்வுகள் அவர் இரு மத நம்பிக்கைகளினதும் விளக்கமாக அமைந்த சடங்குகளையும் குறுகிய கோட்பாடுகளையும் பற்றிய உறுதியான விமர்சனங்களை முன்வைத்த மூர்க்கமான ஒருவர் என்று காட்டுகின்றன.

பாகிஸ்தானின் ஐம்பதாண்டு கால வரலாற்றுக் கற்பித்தல், அரச கருத்தமைவு எப்படி இந்த விடயத்தில் தாக்கம் செலுத்த முடியும் என்பதற்கு ஒரு நல்ல உதாரணமாகும். வரலாறு ஒரு கருத்தமைவு என்ற மட்டத்தில் பாகிஸ்தானின் இஸ்லாமியக் குடியரசினால் அதன் உருவாக்கத்திற்கு காரணமாக இருந்த இரு நாட்டுக்-கோட்பாட்டை வலியுறுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்தப் போக்குக்கு குறுக்காக எந்த விடயம் வந்தாலும் அது ஒன்றில் புறக்கணிக்கப்பட்டது. அல்லது புறந்தள்ளப்பட்டது. வரலாற்று மாணவர்களுக்கு இது என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது குறித்த எந்த அக்கறையும் காட்டப்படவில்லை.

பிரிவினை முடிந்து இரண்டு தசாப்தங்களாக வரலாற்றைக் கற்பிப்பதற்காக பாகிஸ்தானில் வெளியிடப்பட்ட பாடப்புத்தகங்கள் எவையும் அவற்றின் கால ஒழுங்கிலோ அல்லது உள்ளடக்கத்திலோ இந்தியப் புத்தகங்களைவிட எந்தவிதத்திலும் குறிப்பிடக் கூடிய மாற்றங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. ஆனால், 1965இல் நடந்த இந்திய - பாகிஸ்தானிய யுத்தத்தில் பாகிஸ்தானிற்கு ஏற்பட்ட தோல்வி இந்த நிலைமை முழுமையாக மாற்றியமைத்தது. அதுவரை அரசியல் தலைவர்கள் மட்டுமே பாடப்புத்தகங்களில் இடம்பெற்றிருந்தார்கள். ஆனால், இந்தத் தோல்விக்கு பின் இராணுவத் தலைவர்களைப் பற்றியும் வகுப்பறைகளில் கற்பிப்பதற்கு அரசு ஒழுங்கு செய்தது.

இதைவிட மோசமானது என்னவென்றால், அப்போதிலிருந்து பண்டை வரலாற்றை பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் கற்பது முழுமையாக அருகிப் போகத் தொடங்கியது. இப்போது அது வெறுமனே பட்டமேற்படிப்படிப்பு மாணவர்களின் விருப்பத் தெரிவுக்குரிய ஒரு விடயமாகவே இருந்து வருகிறது.

இந்தோ ஆரிய மொழியைப் பேசிய மக்கள் தனித்துவமான உயர் குலத்தைச் சார்ந்த மக்கள் என்ற புனைவினை ஏற்படுத்துவதில் காலனித்துவ வரலாற்றாசிரியர்களே பெருமளவில் பொறுப்பாக இருந்துள்ளார். இது பின்நாளில் இந்து இந்திய, பௌத்த சிங்கள, இலங்கைத் தமிழ் இனவாதிகளால் தம்மை ஒரு உயர் குழாத்தவராக நிரூபிக்கவும் தமது 'பாரம்பரிய பூமியை சட்டபூர்வமாகக் கோரவும் பயன்படுத்தப்பட்டது. இது, இந்து 'தேசியவாதிகளால்' வசதியாக இஸ்லாமையும் கிறிஸ்தவத்தையும் 'அந்நிய' நம்பிக்கைகளாகவும், அந்த நம்பிக்கைகளின் வழி நடப்போரை 'விதேசியவாதிகள்' என முத்திரைகுத்தி வெளியொதுக்கும் போக்குக்கும் வாய்ப்பாக அமைந்தது.



ஆரிய ஆக்கிரமிப்புப் தொடர்பான விவாதத்துக்குரிய கோட்பாடு மிகவும் நெருக்கமாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். ஆரிய ஆக்கிரமிப்பின் வழியை பாரம்பரிய திராவிட இன அடக்குமுறையாளரும் தொடர்ந்தனர் என்ற கருத்தின் அடிப்படையில் அரசியல் ரீதியாக செயற்படும் தலித் - பகுஜன கோட்பாடு தொடர்பாகக் கூட இந்த விடயம் நெருக்கமாக ஆக்கப்பட வேண்டும்.

பாகிஸ்தானிலும் இலங்கையிலும் உள்ள முஸ்லிம் இனவாதிகள் தாம் அராபியாவிலிருந்து வந்த இனத்தவர் என்று கருதுகின்றனர். ஔரங்க சீப்பை புகழின் உச்சத்தில் வைக்கும் அதேநேரம் அக்பர் தொடர்பான எந்த விதமான இயல்பான விமர்சனங்களும் பாகிஸ்தானில் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், இத்தகைய தெரிவு செய்யப்பட்ட வரலாற்று எழுத்தாளர்களினால் இடைக்கால இந்திய வரலாற்றை முழுமையாக ஒதுக்க முடிவில்லை. ஏனெனில், இது செங்கோட்டையையும் தாஜ்மகாலையும் கூட ஒதுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளிவிடுமே!

V

வரலாறு ஒரு ஞாபகம் என்ற வகையில் அது வரலாற்றாசிரியர்களை வெவ்வேறு வளங்களில் இருந்து தேடல்களை மேற்கொள்ளப் பயிற்றுவிக்கும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட துறையாக இருப்பதால், வாய்ப்புக்களை கொண்ட ஞாபகம் என்றாலும் அதன் நூற்றாண்டு காலப் போக்குகளும் வியாக்கியானங்களும் கூட மிகவும் நெருக்கமாக இந்தப் பட்டறையில் ஆராயப்பட்டது.

றோமிலா தாப்பர், சொம்நாத் கோவிலில் நடந்த சுற்றிவளைப்பு தொடர்பாக நூற்றாண்டுகளாக திரும்பத் திரும்ப சொல்லப்பட்டு வந்த வரலாற்று வாய்மொழிகள் தொடர்பான தனது ஆய்வின் அடிப்படையில் அவர் வந்தடைந்த சில உள்ளகத் தகவல்களைப் பரிமாறிக் கொண்டார். பல்வேறு வகைப்பட்ட வியாக்கியானங்கள் தொடர்பான தெரிவு செய்யப்பட்ட ஆய்வுகள், இவ்விடயம் தொடர்பான புரிதலில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது பற்றியும் அவர் தெரிவித்துள்ளார். கி.மு. 1026ல் நடந்த மஃக்மூத் காஷ்னியினரால் நடாத்தப்பட்ட கோவில் சுற்றிவளைப்பு, அக்காலகட்டம் குறித்த தகவல் வழங்கக்கூடிய பிரதான வளங்களிலிருந்து

கிடைக்கும் தகவல்களின்படி பல்வேறு விதமான வியாக்கியானங்களைக் கொண்டதாக உள்ளது. ரேக்கோ - பேர்சியன் குறோணிக்கல் (Turko-Percian Cronicale) ஜெயின் நூல்கள், அக்காலத்து சமஸ்கிருத சுவடிகள், இது தொடர்பாக பொதுச்சபையில் நடந்த விவாதங்கள், இவை தொடர்பான 'தேசியவாத' எழுத்துக்கள் என்பன இவ்விடயம் தொடர்பான பிரதான தகவல் தரும் வளங்கள் ஆகும்.

ரோக்கோ - பேர்சியன் குறோணிக்கலில், முகமதின் ஆக்கிரமிப்பும் கோவில் மீதான சுற்றிவளைப்பும் இஸ்லாமியப் பேரரசின் மாபெரும் வெற்றியாகக் காட்டப்படுகிறது. அதன்பின் சில நூற்றாண்டுகளுக்கு இந்தச் சுற்றிவளைப்புத் தொடர்பாக பெரியளவு குறிப்புக்கள் எதுவும் இல்லை. சமஸ்கிருதச் சுவடிகளிலும் ஜெயின் நூல்களிலும் கோவில் பற்றியும், யாத்திரைகளில் ஈடுபடும் யாத்திரீகர்களின் கொள்ளை பற்றியும் எழுதப்பட்டிருந்த போதும் இவ்விடயம் தொடர்பாக அவ்வளவாக சொல்லப்படவில்லை. ஆனால், முரண்நகையாக சோம்நாத் கோவில் ஆக்கிரமிக்கப்பட்டு 200 ஆண்டுகளுக்குப் பின் 2ம் நூற்றாண்டில் இந்து முஸ்லிம் உறவில் ஒரு முக்கிய விவாதத்துக்குரிய விடயமாகிவிட்ட இந்த விடயம் தொடர்பாகத் தகவல்கள் கிடைக்கின்றன. அந்தக் காலத்திலிருந்து சோம்நாத் கோவி ல்கள் இருந்த நிலப்பரப்பிலிருந்து 'தர்மஸ்தான் (மசூதி) கட்டுவதற்காக நிரோதின் பிரொஜா (ஹோர்முன்ஷ்சைச் சேர்ந்த நுறாதின்டு பரோஷ்) என்பவருக்கு உள்ளூர் பஞ்சகுலத்தவரால் (பஞ்சகுல என்பது உள்ளூரின் நிர்வாக அதிகாரம் படைத்த குழுவாகும். இந்த விவகாரத்தில் இக்குழு புரோகித் வீரபத்ர என்ற சோம்நாத் கோவிலின் பிரதான குரு இக்குழுவின் தலைவராக இருந்தார்). நிலம் வழங் கப்பட்டதாக கூறும் தகவல்கள் வந்து சேர்கின்றன. சமஸ்கிருதத்திலும், அரேபிய மொழியிலும் காணப்படும் இந்த ஆவணம் மிகவும் சிநேகபூர்வமான மொழியில் எழுதப்பட்டிருக்கின்ற அதேவேளை, இந்தக் கோவில் தொடர்பாகவோ அல்லது இந்த சுற்றிவளைப்பு சம்பவம் தொடர்பாகவோ இன்று பார்க்கப்படும் விதத்தில் பார்க்கப்பட்டதற்கான எந்த ஆதாரத்தையும் கொண்டதாக எழுதப்பட்டிருக்கவில்லை.

1943ல் பொதுச்சபையில் நடந்த விவாதத்தின்போது தான் முதல் முதலாக 'இந்துக்களின் காயம்' பற்றிப் பேசப்படுகிறது. இந்த நூற்றாண்டில் கே.எம்.முன்ஷி அவர்களின் ஜாய் சோம்நாத் 1927ல் பிரசுரிக்கப்படுகிறது. அது இனவாத இந்து உணர்வலைகள் குஜராத்திலும் மகாராஷ்டிராவிலும் பெருமளவுக்கு எழுந்து வருவது குறித்து விமர்சிக்கிறது.

1947க்குப்பின், முன்ஷி யூனியனின் அமைச்சர் நேருவை அந்தக் கோவிலை அரச நிதியைப் பயன்படுத்திக் கட்டுமாறு கோரினார். இது இந்துக்களை கட்டுப்படுத்த உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார். நேரு இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மையை விட்டுக் கொடுக்க முடியாது என்றும் இது தனியார்களது நிதியால் கட்டப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டு இக்கோரிக்கையை மறுத்தார்.

VI

மொழி மற்றும் மொழி அடையாளங்கள் தெற்காசியாவில் இனரீதியான கருத்தாடல்களிலும், மதச்சார்பற்ற ஒருங்கிணைப்பிலும் ஆற்றிய பாத்திரம் குறித்து நெருக்கமான வரலாற்று ஆய்வு செய்யப்படுவது அவசியமாகும். இலங்கையில் சிங்களத்தை ஆட்சிமொழியாக்கிய நடவடிக்கையானது அங்கு நிலவிய இனரீதியான பெரும்பான்மை, சிறுபான்மை பிரிவினையை மொழிசார்ந்த ஒன்றாகவும் கூர்மைப்படுத்தியது.

1930களில் இலங்கை அரசு உருவாக்கப்பட்ட காலத்தில் அரசுக்கும் மொழிகளுக்குமிடையிலான தொடர்பு பற்றிய கருத்தாடல் குறித்த ஒரு தகவலை குணவர்தன தெரிவித்தார். ஒரு கம்யூனிஸ்ட் தலைவரான கொல்வின் ஆர் டி சில்வா தனது சகாக்களுக்கு இவ்வாறு தெரிவித்தார். "நாம் ஒரு மொழி சட்டத்தை கொண்டு வருவோமாயின் இந்த நாட்டில் நாம் இரு அரசுகளைக் கொண்டவர்களாவோம். இரு மொழிகளைக் கொண்டு வருவோமானால் எமக்கு ஒரே ஒரு அரசு தான் இருக்கும்." அவரது எச்சரிக்கை அப்போது கவனிக்கப்படவில்லை. ஆனால், அதன்பிறகு நடந்து வந்த இனரீதியான பிளவுகளுக்குப் பிறகு இப்போது இலங்கை மக்கள் அதுபற்றித் திரும்ப சிந்தித்துப்பார்க்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் உருது, ஹிந்தி மொழிகளின் வரலாற்றைப்படிப்பது, அவ்வவ்மொழிக் கவிஞர்கள், அவர்கள் என்ன எழுதினார்கள், எப்போது எழுதினார்கள், யாருக்காக எழுதினார்கள் என்று பார்த்து - அவற்றின் இலக்கியத்தரம் பற்றிய எந்த அக்கறையும் இன்றி - ஒதுக்கப்பட்டது அல்லது சேர்க்கப்பட்டதைப் புரிந்து கொள்ள முடியும்.

வட இந்தியாவைச் சேர்ந்த இந்த இரு மொழிகளதும் வரலாற்றில் கூட பிரிவினைக்கு முந்திய இந்தியாவில் இன முரண்பாடுகள் வளர்ந்தது பற்றிய அடையாளங்களை இனங்காண முடியும். பிரிவினைக்கு முந்திய நாட்களில் உருது மொழி முஸ்லிம்களின் மொழியாகவும், ஹிந்தி இந்துக்களின் மொழியாகவும் தவறாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. இவ்வாறே, 1971இல் பங்களாதேஷின் பிறப்புக்கூட உருது மற்றும் பஞ்சாபி மொழி பேசும் மக்கள் கிழக்குப் பாகிஸ்தான், பிரிவினைக்கு முந்திய கிழக்கு வங்கம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் மீது கொண்டிருந்த மேலாதிக்கத்துடன் தொடர்புற்றதாக்கப்பட்டது. பாகிஸ்தானில், உருது மொழி உத்தியோகபூர்வ மொழியாகியது இந்தி, செராக்கி மற்றும் பூஸ்ரோ மொழி பேசும் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. இந்தியாவில் சுதந்திரத்தின் பின் உருது ஒரு முஸ்லிம் மொழியாகக் கருதப்பட்டு ஹிந்தி ஆட்சி மொழியாக்கப்பட்டது. இது தென்னிந்திய மாநிலங்களின் அதிருப்திக்கு வழிகோலியது.

1920இல் ஜமிட்-ஏ-உலமா-ஹிந்த் என்ற முஸ்லிம் மதகுருக்களின் அமைப்பிலே (மௌலானா உபெட் உல்லா இந்தி, மௌலானா அபுல் கலாம் அசாட், மௌலானா சியட் குசைன் மட்னி போன்ற பிரிவினை எதிர்த்த மதகுருக்களை இவ்வமைப்பு கொண்டிருந்தது.) சிந்தி மத அரசியல் தலைவர்கள் 1843இல் பிரிட்டிசாரால் கைப்பற்றப்பட்ட சிந்து மாகாணத்தை ஒரு சுதந்திரமான மாகாணமாக அறிவிக்க வேண்டும் என்று திட்டவட்டமாக வலியுறுத்தினார்கள்.

இன்றும் கூட இந்தி தலைமைத்துவத்தில் மௌலானா உபாயத்துல்லாஹ் பூட்டோ போன்றவர்களின் தலைமையிலான ஒரு பிரிவு சிந்தி மாகாண அரசை வலியுறுத்துவதுடன், சிந்தியர்கள் எங்கு இருந்தாலும் அவர்ளுக்கு சிந்தி தேசிய அடையாளம் வழங்கப்படவேண்டும் என்று கோருகிறார்கள்.

பாடப்புத்தகங்கள் மற்றும் வகுப்பறைப் போதனைகளுக்கு அப்பால், இப்போது வரலாறு பெருமளவு துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பிற வடிவிலான பிரசுரங்களின் ஊடாக ஒரு இனவாத கருத்தாடலாக எடுத்துச் செல்லப்படுகிறது.

இன்று விஷ்வ ஹிந்து பரிசத் (ஏரீ), ஹிந்து ஜாரிகன் மஞ்ச் போன்ற அமைப்புகளாலும் மிகவும் மோசமான விதத்தில் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் துண்டுப் பிரசுரங்கள் வரலாற்றைத் திரிப்பதுடன் கிறிஸ்தவ சிறுபான்மைக்கு எதிரான வெறுப்புணர்வை தூண்டுபவையாகவும் உள்ளன.

இந்தியாவில் இன்று கோட்பாட்டளவில் ஜனநாயக அரசும், அரசியலமைப்புச் சட்டமும் மதசார்பற்றதாக இருந்தபோதும், அடிக்கடி இனவாதிகளால், மதச் சிறுபான்மையினர், தவறான வரலாற்று தகவல்களை ஒன்றில் ஆக்கிரமிப்பு என்றோ அல்லது மதமாற்றம் செய்கிறார்கள் என்றோ கூறி நியாயப்படுத்தியபடி தாக்கி வருகிறார்கள் இதை விட சிறப்பான ஒரு உதாரணத்தினை இப்படியான சம்பவங்களுக்கு உதாரணமாக உலகில் எங்கும் காண முடியாது.

இந்தப் பட்டறையில் கலந்து கொண்டவர்கள், பாடப்புத்தகங்கள் பாடவிதானம், வகுப்பறைக்கற்பித்தல் என்பவற்றுக்கு அப்பால் வரலாறானது துண்டுபிரசுங்கள், செய்தித்தாள்கள், இனவாத பிரச்சார வலைப்பின்னல்கள் என்பவற்றினூடாக பரப்பப்படுவதும் கூட வரலாற்றாசிரியர்களால் ஆராயப்பட வேண்டும் என்றும் வகுப்பறைக்கு வெளியே மக்களை சென்றடையக் கூடியதும், அவர்கள் மத்தியில் தலையீட்டை செய்யக் கூடியதுமான தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் கருத்து தெரிவத்திருந்தார்கள்.

# மலையக கல்வியின் மறுபக்கம்

இலங்கை வாழ் இந்திய மரபு வழி மக்களின் வாழ்க்கை வரலாற்றினை நோக்கும் போது 1830களில் இங்கே வரத் தொடங்கிய அவர்கள் அக்காலத்தில் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே வருவதும் போவதுமாகத் தான் இருந்துள்ளனர். ஆனால், அக்கால குடியேற்றவாதம், இலங்கையில் பெருந்தோட்டத்-துறையில் முழுமையாக ஈடுபடத் தலைப்பட்டமையால் ஒரு நிரந்தரமான ஊழியர் தொகுதி தேவைப்பட்டது. இதனால் நிரந்தரமாகக் குடியிருக்குமாறு தொழிலாளர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். இதன் பின்னரே இம்மக்களின் பிள்ளைகளின் கல்வி பற்றிய பிரச்சினை தோன்றியது. ஆயினும், 19ம் நூற்றாண்டின் முழுக் காலப்பகுதியிலும் தோட்டப்புற மக்களின் கல்வி தேவைகள் முற்றாக புறக்கணிக்கப்பட்டமை தெளிவான விடயம்.

உண்மையில், பெருந்தோட்ட கலாசாரத்தின் ஒரு அம்சமாகக் கல்வி அங்கீகரிக்கப்படவேயில்லை என்பதுடன் தோட்டப்புற குழந்தைகளின் வாழ்வின் தேவைகளுக்கு உதவக் கூடிய ஒரு நடைமுறை அம்சமாகக் கல்வி அங்கீகரிக்கப்படவுமில்லை. ஒரு உண்மையான விடுதலையின் அடிப்படை அம்சமாகக் கணிக்கப்பட வேண்டிய கல்வி தோட்டத்துரைமாரை பொறுத்தவரையில் ஒரு ஆபத்தான அம்சமாகக் கணிக்கப்பட்டது. சில தோட்ட நிர்வாகிகள் மேலும் ஒருபடி சென்று கல்வியானது தோட்டத்-தொழிலாளரின் தொழில் திறமைகளை முடமாக்கிவிடக் கூடும் என்றனர்.

இலங்கையில் 1901 குடிசனக் கணக்கெடுப்பு மதிப்பீட்டு அறிக்கையானது, இலங்கையின் அரசு சார்ந்த கல்வி முறை குறித்து பிரித்தானிய பாராளுமன்றத்தில் பல கேள்விகள் எழக் காரணமாயிற்று. பிரித்தானிய பாராளுமன்றத்திலும் சில மனிதாபிமான குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட பிரசாரத்தின் காரணமாகவே தோட்ட நிர்வாகங்கள் கல்வி குறித்த ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்தன.

### பின் தங்கியிருந்த தோட்டக் கல்வி

1905 பின்னர் தான் சட்டபூர்வமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தோட்டப்புற கல்வி குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக முன்னாள் பொது சன கணீப்பீட்டு அதிகாரியாகவிருந்த எஸ். எம். பரோவ்ஸ் அறிக்கை, தோட்டப்புற கல்வியில் பெரும் பகுதி லயத்துப் பள்ளிக்கூடங்கள் எனப்பட்ட அமைப்பின் மூலமே பெறப்பட்டன என்பதையும் அவ்வாறு பெறப்பட்ட கல்வி நெறியும் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருந்தது என்பதையும் சுட்டிக் காட்டின.

1907இல் பின்வரும் கல்வி நிலைய முறைகள் காணப்பட்டன.

1. தோட்டத் தொழிலாளர்களின் முனைப்பினால் உருவாக்கப்பட்ட லயன் காம்பரா பள்ளிகள்.
2. கிறிஸ்தவ மிஷன்களால் உருவாக்கப்பட்டவை.
3. ஏனைய தனியார் முயற்சிகளினால் உருவாக்கப்பட்டவை.
4. தங்களுடைய மதம் சார்ந்த சமய ஸ்தாபனங்களின் கல்வி நிலையங்கள்.

1904ல் முழு மலையகத்திலும் 179 லயன் காம்பரா பள்ளிக் கூடங்கள் இருந்த அதேநேரத்தில், 120 பள்ளிகள் தோட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட கட்டிடங்களில் நடத்தப்பட்டன. இவற்றில் 60 பள்ளிக் கூடங்கள் மாத்திரமே அரசாங்க உதவியைப் பெற்றன. இதன் பின்னரே தோட்ட நிர்வாகங்கள் பாடசாலைகளை அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியது. 1960களில் 800 பாடசாலைகள் இருந்தன.

20ம் நூற்றாண்டின் விடியலோடு ஆரம்பமாகிய இப் புதிய கல்வி சீர்திருத்தங்களின் போக்குகளின் குறிப்பிடத்தக்க மாற்றங்கள், 1961ம் ஆண்டளவிலேயே ஆரம்பமாகியது எனலாம். தொடர்ந்து 1970ம் ஆண்டிலிருந்து தோட்டப் பாடசாலைகள் படிப்படியாக அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு 1988ல் பூர்த்தியடைந்தது.

பொருளாதாரத்தை இக்கல்வி பயிற்சியற்ற தொழிலாளர்களைக் கொண்டே நிர்வகிக்கக் கூடியதாக இருந்தது. எழுத்தறிவற்ற ஊழியர்கள் என்பதால் மிகக் குறைந்த சம்பளம் வழங்கி மிகக் கூடிய இலாபம் அடைய முடிந்தது. பெருந்தோட்ட தொழிலாளரின் குறைந்த செலவிலான உழைப்பினால் பெறக் கூடிய வருமானங்களைக் கொண்டு நாட்டின் இதர மக்களுக்கான கல்வி, சுகாதார, மற்றும் உணவு மானியங்களை வழங்கலாம் என்ற நிலையும் காணப்பட்டது. சுருங்கக் கூறின், சமூக அரசியல் ரீதியாக மட்டுமன்றி பொருளாதார ரீதியாகவும், கல்வி அறிவற்ற தொழிலாளர் குழுவொன்றை


நேரிட்டதாலும் அரசாங்கம் தனது பாரபட்சக் கொள்கையிலிருந்து விடுபட நேர்ந்தது. இவ்வாறான நிர்ப்பந்தங்கள் காரணமாகவும் குடியுரிமை பெற்ற பின்னர் இந்திய மரபுவழி தமிழர்கள் இலங்கை அரசியலிலும் ஒரு வலுமிக்க அழுத்தக் குழுவாக உருவானமையினாலும் அவர்களுடைய கல்வி வசதிகளில் சில மாற்றங்களும், முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சுருங்கக் கூறின் இப்பின்புலத்தில் மிக அண்மைக் காலம் வரை இந்திய மரபு வழித் தோட்டத் தொழிலாளர்கள் கல்வி நிலை மிகவும் பின் தங்கியே இருந்து வந்துள்ளது. இதற்கு அரசாங்கக் கொள்கையும், செயற்பாடுகளும் காரணமாக இருந்தது உண்மையே என்று பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

### செட்டிமார்களின் வருகை

ஆனால், இதில் இன்னொரு சமூகவியல் காரணி பற்றியும் ஆராய

பெரும் முதலாளிகளாயினர். மலையக நகர்களில் இன்று பெரும் வர்த்தகர்களாகத் திகழ்பவர்கள் இவர்கள் வழித் தோன்றல்களே. இந்த சமூகத்தவரில் கொழும்பு, நீர்கொழும்பு, புத்தளம், சிலாபம் முதலிய கரையோரப் பகுதிகளில் வந்து குடியேறிய தமிழ் நாட்டு நாட்டுக் கோட்டைச் செட்டி எனும் சாதிப் பிரிவினர் திரவப் பணத்துடன் வந்தமையால் வட்டிக்கடைகள், சாப்பாட்டுக் கடைகளை ஆரம்பித்து காலகெதியில் நிலையாக இங்கே வாழ்க்கையை அமைத்துக் கொண்டு சிங்கள இனத்துடன் திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு சிங்களவர்களாகவே மாறினர். இன்று கொழும்புச் செட்டி வகுப்பினர் என்று கூறப்படும் இவர்களின் வழித் தோன்றல்கள் சிங்களப் பெயருடன், சிங்களக் கல்வியைப் பெற்று சிங்கள இனமாகவே தங்களை இனங்காட்டிக் கொள்வதைக் காண முடிகிறது.

அதேவேளை மலையகத்தில் பெருந்தொகையாகக் குடியேறிய தொழிலாள வர்க்க மக்கள் தமது மொழி, கலை, கலாசாரங்களை இறுகப் பற்றிக் கொண்டு தமது தனித்துவத்தை இழக்காது ஒரு தனிப் பிரிவினராக இன்றும் நிலைத்து நிற்கின்றனர். இதற்குக் காரணம் இம்மக்கள் . தோட்டங்களில் செறிவாக வாழ்ந்ததும், கிராம மக்களுடன் தொடர்பு கொள்ள மொழி தடையாக இருந்தது




இதுவரை தோட்டப் பாடசாலைகள் தேசியக் கல்வி முறையுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கும் கல்வித் தேவை என்று குடியேற்றவாத அரசோ, சுதந்திர அரசாங்கங்களோ கூட நினைக்கவில்லை. சுதந்திரம் வந்தும் கல்வித்துறையில் விடுதலையை வழங்கவில்லை. ஆனால், கல்வியின் மூலம் தான் - கல்வியினால் மட்டுமே தான் இம்மாதிரியான அடக்கி ஒடுக்கப்பட்ட, எழுத்தறிவற்ற அறியாமையால் பீடிக்கப்பட்ட சமுதாயத்தை விடுவிக்க முடியும் என்ற கருத்து 1960 களில் எழுந்தது. ஆனால், இலங்கை அரசு இதில் அக்கறைக் காட்டவில்லை. ஆனால், அதேவேளை அக்கால சூழ்நிலையில் நாட்டின் பொருளாதார முறையினுடைய முதுகெலும்பாக விளங்கிய பெருந்தோட்டப்

முன்னேற விடாமல் வைத்திருப்பது இலாபகரமானதாகவும் இருந்தது. இந்த நிலைப்பாட்டில் இருந்து தான் பல சமூக சிந்தனையாளர்கள் அக்காலத்தில் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

ஆயினும், கல்வித்துறையில் உலகில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களும், கல்விச் சிந்தனையில் யாவருக்கும் கல்வி, யாவருக்கும்

**வே. சண்முகராஜா**

எழுத்தறிவு, யாவருக்கும் விஞ்ஞானம், கல்வி ஒரு அடிப்படை பிறப்புரிமை என்ற சித்தாந்தங்கள் எழுந்த போதும், ஆசியாவில் கல்வித்துறையில் 1960களில் முன்னணியில் நின்ற இலங்கை 1980களில் மலேசியா, தாய்லாந்து, கொரியா போன்ற நாடுகளை விட பின்தங்க

> **கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி காலத்தில் ஏற்பட்ட தோட்ட சுவீகரிப்பு, அதன் காரணமான வேலையின்மை, தோட்டத்திலிருந்து வெளியேற்றியமை, அதன் காரணமாக வருமானமின்மை, பொருளாதாரத் தட்டுப்பாடு இத்தகைய காரணங்களால் நெருக்கடிக்குள்ளான தோட்டத் தொழிலாளர்களையும், அவர்களின் கல்வியை இழந்த சிறார்களையும் இத்தகைய முதலாளி வர்க்கம் தமது ஊழியர் படையில் குறைந்த ஊதியத்திற்கு சேர்த்துக் கொண்டது.**

வேண்டியுள்ளது. அதுவே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமுமாகும். இந்திய மரபு வழி தமிழரில் எல்லோருமே தோட்டத் தொழிலாளர்கள் அல்லர். வர்த்தகம், சிறு வியாபாரம், நகர்ப்புற வட்டிக் கடை, பொருட்களை இடத்துக்கு இடம் கொண்டுச் சென்று விற்பனை செய்தல் போன்றவற்றில் தோட்டத்-துறை சாராத இந்திய மரபு வழி தமிழர்களும், தொழிலாளர்களைப் பின்தொடர்ந்து வந்து ஈடுபடலாயினர். தோட்டத்தொழிலாளரைப் போலன்றி, கல்வியறிவுடையோராய் வந்த இவர்கள் நகர்ப் புறங்களில் தங்கி தமது வியாபார முயற்சிகளில் ஈடுபட்டனர். இவர்களில் ஒரு பிரிவினர் புகையிரதத்துறை, துறைமுகத்துறை, அச்சகத்துறை போன்றவற்றில் கடைநிலை, இடைநிலை தொழில் வாயப்புகளையும் பெற்றனர். சிலர் தோட்டத்-துறையுள், ஆசிரியர், எழுதுவினைஞர், மேற்பார்வையாளர், பெரியகங்காணி போன்ற பதவிகளில் அமர்ந்து கொண்டனர். இவர்களே பிற்காலத்தில் இந்திய மரபு வழி மக்கள் மத்தியிலிருந்து தோன்றிய மத்திய தர வர்க்கமாகப் பரிணமித்தனர்.

சொந்த நாட்டில் வரட்சி, வறுமை, தொழில்வாய்ப்பின்மை ஆகிய இக்காரணிகளால் கையில் திரவப் பணமின்றி, படிப்பறிவை மட்டும் நம்பி இத்தகைய பின்புலத்திலிருந்து வந்த இவர்கள் பிற்காலத்தில் தோட்டத் தொழிலாளர்களாகிய தம்மக்களிடையே வியாபாரம் செய்து, அவர்களை சுரண்டியே

மட்டுமல்ல அவர்கள் கல்வியறிவற்ற மக்கள் கூட்டமாக இருந்ததும் ஒரு காரணம் என்ற கருத்தும் சிலரால் முன்வைக்கப்படுகிறது.

நகர்ப் புற இந்திய மரபு வழி மக்கள் தோட்டப்புற மக்களுடன் தொடர்பற்றவர்களாவே இருந்தனர். அதேவேளை தோட்டப்புற இளைஞர்களையும், சிறுவர்களையுமே தமது வியாபாரத் தளங்களில் சிற்றூழியர்களாக வைத்திருந்தனர். தோட்டத்துறை ஊழியர்களாக வந்தவர்கள் இந்திய தனவந்தர்களுக்கு சேவகம் செய்யும் ஊழியர்களாகவும் மாறினர். கல்வியறிவின்மை பிரஜா உரிமையின்மை, தாழ்ந்த கலாசாரத்திலிருந்து வருவதால் கீழ்படிந்து போகும் தன்மை போன்ற காரணங்களால் தோட்ட இளைஞர்களையே ஊழியர்களாக தமிழ் முதலாளிகளும் வைத்துக் கொண்டனர். பொதுவாக இவர்களின் உழைப்பு மிகக் குறைந்த ஊதியத்துடன் இரவு பகலாக சுரண்டப்படுவது சாதாரண நிகழ்வாக இருந்து வந்தது. மாறாக சில இடங்களில் சில முதலாளிகள், சில ஊழியர்களை மிகுந்த கரிசனையுடனும், நல்ல நிலையிலும் வைத்துக் கொண்டனர். இத்தகையவர்கள் வியாபார உத்திகளைக் கற்று பின்னர் தாமே குட்டி முதலாளிகளாகவும் மாறினர். தோட்டத்-துறையிலிருந்து கடை சிப்பந்திகளாக மாறி பின்னர் குட்டி முதலாளிகளாகவும் மாறிய பலர் இன்று கொழும்பு நகரில் பெரும் வர்த்தகர்களாகவும் இருப்பதைக் காணலாம்.

இத்தகைய பின் புலத்தில்

நன்றி - நூலகத்திட்டம்



பார்க்கும்போது, தமது குடும்ப வறுமை நிலை காரணமாக கல்வியைத் தொடர முடியாது இடையில் விலகி இளம் தொழிலாளர்களாக மாறும் போக்கு ஒரு புறம் காணப்பட, மறுபுறத்தில் பாடசாலைக் கல்வியை விட ஓரளவு எழுத்தறிவு இருந்தால் நகர்ப்புறம் சென்று நிறைய உழைக்க முடியும், நாகரீகமாக வாழ முடியும், முதலாளிகளாக தாமும் வர முடியும் என்ற எண்ணங்களாலும் பெரும்பாலான இளைஞர்கள் க.பொ.த. சாதாரண தரத்துடன் அல்லது அதற்கு முன்னரே பாடசாலை வாழ்வை முடித்துக் கொண்டு கடைசிப் பந்திகளாக மாறும் போக்கும் தொடர்ந்தும் நிலவி வருகிறது.

## இரு கட்சிகளும் கையாண்ட முறை

கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி காலத்தில் ஏற்பட்ட தோட்ட சுவீகரிப்பு, அதன் காரணமான வேலையின்மை, தோட்டத்திலிருந்து வெளியேற்றியமை, அதன் காரணமாக வருமானமின்மை, பொருளாதாரத் தட்டுப்பாடு இத்தகைய காரணங்களால் நெருக்கடிக்குள்ளான தோட்டத் தொழிலாளர்களையும், அவர்களின் கல்வியை இழந்த சிறார்களையும் இத்தகைய முதலாளி வர்க்கம் தமது ஊழியர் படையில் குறைந்த ஊதியத்திற்கு சேர்த்துக் கொண்டது.

அவ்வாறே ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கக் காலத்தில் 1983ம் ஆண்டு இன வன்முறைக்கு திட்டமிட்ட முறையிலே தோட்டப்புற மக்களே மிகவும் மோசமான முறையில் தாக்கப்பட்டனர். தோட்டத் தொழிலாளரின் உயிர் மட்டுமல்ல அவர்களின் உடமைகள், அவர்களின் உறைவிடமாகிய "லயன் காம்பராக்கள்" யாவும் எரிக்கப்பட்டன. அத்துடன் இனவாதிகள் நிற்கவில்லை. மலையக மாணவர்களுக்கு கல்வி வழங்கிய ஏராளமான பாடசாலைகளும் எரித்து அழிக்கப்பட்டன. அழிக்கப்பட்டது பாடசாலைக் கட்டிடங்கள் மட்டுமல்ல மலையக மாணவர்களின் கல்வியும் எதிர்காலமும் தான். இப்போதும் ஏராளமான மலையக மாணவர்கள் சிறுவர் ஊழியர் படைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

1977க்குப் பிறகு திறந்த பொருளாதாரக் கொள்கை இந்திய மரபு வழி வர்த்தகர்களின் கொள்கைக்கு ஏற்புடையதாக அமைந்தது. கோட்டாமுறை, அனுமதி பத்திரம் வழங்கல் போன்றவை 1977க்கு முன்னர் பெரும்பான்மை இனத்தவருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. தாராளமயமாக்கல் கொள்கை வர்த்தகத் துறையில் இவர்களுக்கிருந்த கட்டுப்பாடுகளை நீக்கியது. இதை பயன்படுத்தி சிலர் நவீன வர்த்தகத் துறைகளிலும் ஈடுபடலாயினர். தயாரிப்புத்துறை, ஏற்றுமதித்துறை, ஆடைத்தொழிற்சாலை போன்ற பல புதிய துறைகளிலும் நுழைந்தனர். இத்துறைகளுக்கான ஊழியர் தொகுதியும் தோட்டங்களிலிருந்து சென்று நகர்ப்புறப் பாடசாலைகளில் கற்று ஓரளவு ஆங்கில அறிவினைப் பெற்றிருந்த இளைஞர்களைக் கொண்டே நிரப்பிக் கொண்டனர்.

இலங்கையில் மிஷனரி செயற்பாட்டுக் கூடாக நாடு முழுதும் பாடசாலைகள் அமைக்கப்பட்டபோது மலையக நகர்களிலும் ஆங்கில போதனை மூலமான பாடசாலைகள் அமைக்கப்பட்டன. தோட்டப் பாடசாலை முறையை விட முற்றிலும் மாறான அமைப்பு, நிர்வாக செயற்பாடு, போதனா முறைகளுடன் நவீன வசதி வாய்ப்புகளுடன் இப்பாடசாலைகள் விளங்கின. முதலாளி வர்க்க பிள்ளைகளுக்கு வாய்ப்பான, அவர்களைக் கவர்ந்திழுக்கக் கூடியனவாக அவை அமைந்திருந்தன. இத்தகைய பாடசாலைகள் பசறை தொடக்கம், பொல்காவலை வரை பரந்திருந்தன. தோட்டப்புற ஏழை பிள்ளைகளுக்கு இப்பாடசாலைகளில் படிக்க வசதியும், வாய்ப்பும் இருக்கவில்லை. ஆனால், நகர்ப்புற வசதி படைத்த இந்திய மரபு வழி சந்ததியினர் இப்பாடசாலைகளில் கல்விபெற்று சமூகத்தில் உயர் நிலையை அடைந்திருக்க முடியும் அத்துடன் தமது சமூகத்திற்கும் வழிகாட்டியாக, சமூக உயர்வுக்கு உந்து சக்தியாக இருந்திருக்க முடியும். ஆனால், நிலைமையோ இதற்கு மாறாக இருந்து வந்துள்ளது. அதாவது தோட்டத்துறைக்கு வெளியே இவர்கள் இருந்ததால் தோட்டத்துறையுடன் இவர்களால் இணைய முடியவில்லை. அத்துடன், இவர்கள் தமது கல்வியைப் பூர்த்தி செய்துக் கொண்டதுடன் வர்த்தகத்துறையிலேயே தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். அத்தோடல்லாது அவர்களுள் ஒரு பகுதியினர் தாம் கற்ற ஆங்கில அறிவு காரணமாக ஆங்கிலேய கம்பனிகளின் உடமையான பெருந்தோட்டத்துறையில் காரியாலய எழுதுவினைஞர், தொழிற்சாலை மேற்பார்வையாளர் போன்ற பதவிகளைப் பெற்று பெருந்தோட்டத்துறையுள் கூலித் தொழிலாளர்களாக இருந்த தமது இன மக்களையே அடக்கி ஒடுக்கி வேலை வாங்கும் பதவிகளிலும் அமர்ந்தனர்.

## வாய்ப்புகள் பயன்படுத்தப்படவில்லை?

இத்தகைய பின்புலத்திலிருந்து அன்றைய மத்திய தர இளைஞர் சமுதாயத்தை எடுத்து நோக்கும்போது பெரும்பாலானோர் தமது குடும்பம் சார்ந்த வர்த்தகத்துறையினுள்ளேயே பிரவேசித்தமையால் உயர்கல்வியில் அக்கறை செலுத்தவில்லை. மற்றும் ஒரு தொகுதியினர் சுமாரான ஆங்கில அறிவுடன், குறைந்த கல்வித் தகைமையுடன் வசதியான தொழில்வாய்ப்பு தோட்டத்துறையுள் இருந்ததால் அதனுள் பிரவேசித்தமையால் அவர்களும் உயர்கல்வியில் கவனம் செலுத்தவில்லை. ஒரு சிலர் உயர்கல்வி பெற்று வெளிவந்தபோதும் பெரும் ஆங்கில வர்த்தகக் கம்பனிகளே தமது வாழ்க்கையை இணைத்துக் கொண்டமையால் சமூகத்தில் அவர்கள் முகம் தெரியாது போய்விட்டது. சுருக்கமாகக் கூறுவதாயின், ஓர் சமூக விழிப்புணர்விற்கும், விடுதலைக்கும் தலைமை தாங்க வேண்டிய மத்திய தர வர்க்கம் அக்காலத்தில் சமூக நாட்டமின்றி, பெரும்பான்மையான தோட்டப்புற மக்களோடு ஐக்கியமின்றி தனிமைப்பட்டுப் போனது. இதன் தாக்கம் எதிர்காலத்தில் தாமும் பலவீனப்பட்டு, மலையக மக்களையும் பலவீனப்படுத்தி இனவாத சக்திகளுக்கு இரையாகிப்போகும் இனமாக ஒவ்வொரு இனக்கலவரத்தின் போதும் அடிவாங்கும் இனமாக ஆகிப் போனது.

மலையக நகர்ப்புற பாடசாலைகளை எடுத்து நோக்குவோமாயின், மிஷனரிகளால் அக்காலத்திலேயே மிகவும் புகழ் வாய்ந்த பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மலையகத்தில் கண்டி நகரை எடுத்துக் கொண்டால் டிரினிரி கல்லூரி, சில்வஸ்டர்ஸ் கல்லூரி, சென் அந்தனிஸ் கல்லூரி, (கட்டுக்கஸ்தோட்டை) கண்டி பெண்கள் உயர் பாடசாலை, மோபிறே மகளிர் கல்லூரி போன்றவையும், கண்டி இந்து சீனியர் கல்லூரி, கண்டி அசோகா வித்தியாலயம் போன்றனவும் இன்றும் புகழ்பெற்று விளங்குகின்றன. இவ்வாறே மலையக நகரங்களான நுவரெலியா, அட்டன், பதுளை, பண்டாரவளை போன்ற நகர்களிலும் மிகவும் பிரசித்திப் பெற்ற கல்லூரிகள் காணப்படுகின்றன. இவற்றுள் பல நூறு வருடங்களுக்கு மேற்பட்ட பழமைவாய்ந்தனவாகவும் காணப்படுகின்றன. இவற்றில் தமிழ் மாணவர்களும் கற்கக் கூடிய வாய்ப்புகள் இருந்தன. குறிப்பாக தமிழ் மத்திய தர வர்க்கத்தினருக்கு இவை பெரும் வரப்பிரசாதமாக அமைந்திருந்தன. இருந்தும் அக்கால மத்தியதர வர்க்கம் இவற்றை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லையென்றே கூறலாம். ஏனெனில், மலையகத்திற்கு வருகை தந்து சுமார் 170 வருட காலத்தைக் கொண்ட ஒரு சமூகத்திலிருந்து இறுதி நூறு வருடங்களை எடுத்துக் கொண்டாலும் கூட வருடாந்தம் சுமார் 1000ம் மாணவர்கள் உயர்கல்வி பெற்று பட்டதாரிகளாக வந்திருப்பின் சுமார் ஒரு இலட்சம் பேராவது இன்று வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, சட்டத்தரணிகளாக, பேராசிரியர்களாக இருந்திருக்க வேண்டும். ஆனால், இன்றைய நிலைமை என்ன? இன்று விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில வைத்தியர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள், பேராசிரியர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் மிகவும் பிற்காலத்தில் தோற்றம் பெற்றவர்களே.



நன்றி: Sudasia

> **ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கக் காலத்தில் 1983ம் ஆண்டு இன வன்முறைக்கு திட்டமிட்ட முறையிலே தோட்டப்புற மக்களே மிகவும் மோசமான முறையில் தாக்கப்பட்டனர். தோட்டத் தொழிலாளரின் உயிர் மட்டுமல்ல அவர்களின் உடமைகள், அவர்களின் உறைவிடமாகிய 'லயன் காம்பராக்கள்' யாவும் எரிக்கப்பட்டன. அத்துடன் இனவாதிகள் நிற்கவில்லை. மலையக மாணவர்களுக்கு கல்வி வழங்கிய ஏராளமான பாடசாலைகளும் எரித்து அழிக்கப்பட்டன. அழிக்கப்பட்டது பாடசாலைக் கட்டிடங்கள் மட்டுமல்ல மலையக மாணவர்களின் கல்வியும் எதிர்காலமும் தான். இப்போதும் ஏராளமான மலையக மாணவர்கள் சிறுவர் ஊழியர் படைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.**

அத்துடன் இன்று மலையகத்தில் பெயர் குறிப்பிடக் கூடியதாக உயர்கல்வித் தகைமை பெற்று விளங்குபவர்களில் பெரும்பாலானோர் தமது கல்விச் சேவைக் கூடாக மலையக மக்களோடு தம்மை பிணைத்துக் கொண்டு, சமூக உணர்வோடு தொண்டாற்றியவர்களாகவே இனம் காணப்படுகின்றனர். இந்த வரிசையிலே அண்மையில் அமரரான இரா. சிவலிங்கம் மற்றும் திருச்செந்தூரன், பேராசிரியர்களான சோ. சந்திரசேகரன், எம்.எஸ். மூக்கையா, எம். சின்னத்தம்பி மற்றும் எம். வாமதேவன், எம். நித்தியானந்தன், டி. தனராஜ், எஸ். மரியதாஸ் போன்றோரைக் குறிப்பிடலாம். ஒன்றரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட சுமார் 10 இலட்ச மக்கள் தொகையினரைக் கொண்ட ஒரு மக்கள் கூட்டத்தில் விரல்விட்டு எண்ணக் கூடிய சுமார் நூறு பேரைத்தானும் உயர் வாண்மைத் தொழிலில் காண முடியாதிருக்கிறதென்றால், எமக்கு உயர்கல்வி பெற பாதகமான அம்சங்களே அதிகமாக இருப்பினுங் கூட உள்ள உயர்கல்வி வாய்ப்புகளை நம் மத்தியில் உள்ள வசதி படைத்த வர்க்கம் கூட பயன்படுத்திக் கொள்ளவில்லையென்றே தெரிகிறது. இக்கருத்தினை பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்களும் தமதுரையில் பல சந்தர்ப்பங்களிலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

கல்வித்துறையில் மலையக மத்திய தர வர்க்கம் சரியான முறையிலே பாடசாலை முறையைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறியமையால் அதன் தாக்கம் இன்றும் தொடர்ந்து நீடித்து நிலவுகிறது. அதற்கு சான்றாக பின்வரும் அம்சங்கள் காணப்படுகின்றன. மலையக மாணவர்களின் பாடசாலை இடைநிறுத்த வீதம், மாணவர் சேர்வு வீதம், பல்கலைக்கழக அனுமதி வீதம் என்பன தேசிய சராசரியுடன் ஒப்பிடும்போது இன்றளவில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன.

நகர்ப்புற மக்களின் எழுத்தறிவு 89.1 வீதமாகவும், கிராமப்புற மக்களின் எழுத்தறிவு 84.6 வீதமாகவும் இருக்க, மலையக மக்களின் எழுத்தறிவு வீதம் 59.4ஆக உள்ளது. மலையகப் பெண்களின் எழுத்தறிவு வீதம் 46 வீதம் மட்டுமே. (1985)

1953ல் தோட்ட சனத்தொகையினரில் 60 வீதமானவர்கள் கல்வியறிவு அற்றவர்களாக இருந்தனர். 1963இல் இந்த விகிதம் 57சதவீதமாகவும், 1973இல் 52சதவீதமாகவும் குறைந்திருந்தாலும், இன்றும் கல்வியறிவின்மை ஒப்பீட்டளவில் கூடுதலாகவே இருக்கிறது.

தேயிலை தரகர்களுக்கான ஏஜென்ஸி கொமிஷனின் 1974ம் ஆண்டு அறிக்கையின் படி பாடசாலை செல்லக் கூடிய வயதெல்லையில் உள்ள சிறுவர்களில் 100,000 பேர் பாடசாலைகளுக்கு செல்லாமல் இருக்கின்றனர். பிறிதொரு அம்சம் 1929ம் ஆண்டில் தோட்டத் தொழிலாளரில் 2,64,500 பேர் 10 வயதுக்குக் குறைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது தோட்டத் தொழிலாளரில் 36 சதவீதமாகும்.

1950களில் மொத்த பல்கலைக்கழக மாணவர்களில் 1.4 சதவீதத்தினரே தோட்டப்புறத்தைச் சார்ந்தவர்கள். 1977ஆம் ஆண்டு இது 0.1சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இன்னும் இதே விகிதாசாரம் மிகவும் கீழ்நிலையிலேயே உள்ளது.

1970/71இல் 18 மலையக மாணவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். தரப்படுத்தலின் பின்னர் இத்தொகை 11ஆக வீழ்ச்சியடைந்தது.

மிக அண்மைக்கால ஆய்வுகளின்படி (1994) பாடசாலைக் கல்வி பயிலாதவர்கள் முஸ்லிம்களில் 3.6 வீதமானவர்கள். சிங்களவர்கள் 4.2 வீதம், இலங்கைத் தமிழர் 7.5 வீதம், மலையகத் தமிழர் 21.3வீதம். இலங்கை மக்களின் கல்வி மட்டம் தொடர்பான சகல குறிகாட்டிகளும், மலையகத் தமிழரின் பின் தங்கிய நிலைமையையே காட்டுகின்றன. இன்று பல்கலைக்கழகக் கல்வி பயிலும் 33,000 மாணவர்களில் மலையகத்தைச் சேர்ந்த ஒரு சில நூறு (200) மாணவர்களாவது இருப்பர் என்பது சந்தேகமே எனக் கூறுகிறார் பேராசிரியர் சந்திரசேகரன் அவர்கள்.

ஒரு சமூகத்தின் எழுச்சிக்கும், விடுதலைக்கும் மத்தியதர வர்க்கத்திலிருந்து வந்தவர்களே தலைமை ஏற்று வழிநடத்திச் சென்றுள்ளதையே உலக வரலாற்றில் காணக் கூடியதாக இருக்கிறது. இலங்கை வரலாற்றிலும் மத்தியதர வர்க்கத்தின் எழுச்சியுடனேயே கீழ்மட்ட மக்களும் முன்னேற்றம் கண்டனர். இலங்கை வாழ் தமிழ் மக்கள் வாழ்விலும் மத்தியதர எழுச்சியைப் பின்பற்றியே பிற்பட்டோர் சமூகமும் இன்று கல்வியிலும், தொழில் வாய்ப்பிலும் முன்னேறியிருப்பதைக் காண முடிகிறது. ஆனால், மலையகத்தைப் பொறுத்தவரையில் ஒரு மத்தியதர வர்க்கம் பிற்பட்ட நிலையிலுள்ள மலையக இளைஞர்களுக்கு முன்மாதிரியாக அமையவில்லை என்றே கூறலாம்.

நன்றி - நூலகத்திட்டம்



# சிறார்களின் மகிழ்வுக்குரியதான சிறுவர் நாடகங்கள்

> இலங்கைத் தமிழ் சிறுவர் நாடக வளர்ச்சியில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் பங்கு முக்கியமானது. நாடக அரங்க கல்லூரியூடாக அவர் தயாரித்த சிறுவர் நாடகங்கள் மிகுந்த முக்கியத்துவம் உடையன. அவரே சிறுவர் நாடகங்களுக்குக்கான பிரதிகள் பலவற்றையும் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவர்கள் சூழலோடு ஒட்டி இணைந்து வாழத்தக்கவர்கள். சூழலில் இருந்து கிடைக்கும் நல்லனவற்றையும், தீயனவற்றையும் மனதில் பதித்துத் தமக்கென வாழ்க்கைப் பாதையை மாற்றியமைக்கக் கூடியவர்கள். இத்தகைய உள்ளம் படைத்தவர்களுக்குச் சூழலை நன்மை பயப்பனவாக அமைத்து வழிகாட்டுகின்ற பாரிய பொறுப்பு இன்றைய சமூகத்தினருக்கு உண்டு. நன்மையும், தீமையும் கலந்துள்ள சூழலில் இருந்து, தீமையின் கொடூரப் பாதிப்பை வெறுத்து, நல்லவற்றை நாடக் கூடிய சந்தர்ப்பங்கள் இன்று சிறுவர்களுக்கு மிக மிக அவசியமானவையாகும். இத்தகு சந்தர்ப்பங்களை வழங்கும் களங்களாகவே சிறுவர் நாடகங்கள் இன்று சிறுவர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று வருகின்றன.

மனிதனுடைய தீய பண்புகளையும், நடவடிக்கைகளையும் எடுத்துக் காட்டித் தத்துவம் புகட்டும் பருவம் சிறுவர்களுக்குரியதல்ல. எனவே தான் சூழலில் உள்ள பறவைகள், விலங்குகள் ஆகிய அஃறிணைப் பொருட்களை மையப்படுத்தி அவற்றின் தீமை பயக்கும் பண்பை வெளிக் கொணரும் போது, சிறுவர்களின் சிந்தனை விரிகின்றது. மனப்பாங்குகளிலும், நடத்தைக் கோலங்களிலும் மாற்றமும், எழுச்சியும் ஏற்படுகின்றன. பேசும் தகைமையற்ற இத்தகைய அஃறிணைப் பொருட்களைப் பேசுவதாக அமைக்கப்பட்ட நீதிக் கதைகள், சிறுவர்களின் விழுமியங்களைப் பட்டை தீட்டுவதாகவே அமைகின்றன. இத்தகைய கதைப் பின்னல்களை எளிய பாத்திரங்களாகப் பேச வைக்கின்ற தன்மைகளையே சிறுவர் நாடகங்களாகக் காண்கின்றோம். சிறுவர் நாடகங்கள், சிறுவர்கள் மத்தியிலும், பெரியோர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பைப் பெற்று வருதல் குறிப்பிடத்தக்க அம்சமாகும். நாடக அரங்கக் கல்லூரியை அமைத்துச் சிறுவர் நாடக வளர்ச்சிக்கு வித்திட்டு, அதற்காக இன்னமும் உழைத்துக் கொண்டிருப்பவர்களில் முதன்மையானவர் குழந்தை ம. சண்முகலிங்கம். ஏராளமான சிறுவர் நாடகங்கள் இவரது ஆக்கங்களாக வெளிவந்துள்ளன. பல நாடகங்கள் களம் கண்டு, மங்காப் பெருமையுடன் இன்றும் நிலைத்துள்ளன. சிறுவர்களின் ஆற்றலை மேம்படுத்தி, அவர்கள் கூடி மகிழ்வதற்கான களங்களையும் உருவாக்க உழைக்கும் இவர்களின் நாடகப் பணியினைத் தொட்டுணர்ந்து நுகரும் பாக்கியம் இடையிடையேனும் கிடைக்கப் பெற்றமையால், மனங்கொண்ட சிறுவர் நாடகச் சிந்தனைகளைப் பகிர்வதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

யாழ்ப்பாணத்தில், குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் எழுத்துருவில் வெளிவந்த பல நாடகங்கள், அரங்கக் கல்லூரி மாணவர்களின் நெறியாள்கை மூலம் பாடசாலை மாணவர்களின் தீரமிகு நடிப்பில் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துள்ளன எனலாம். இத்தகைய நாடகங்கள், சபையோரையும் உள்ளிட்ட பாத்திரங்களாகவும் அவர்களுக்குள்ளிருந்து புறப்பட்டு மேடையை நோக்கி நகர்ந்து சபையின் உன்னிப்பான ஈர்ப்பைக் கவருந்தகையனவாகவும் உள்ளன. மேலும் நாடகப் பாத்திரங்கள் முதலில், விளையாட்டில் ஈடுபட்டு அதில் ஏற்பட்டு நிற்கும் மகிழ்ச்சியில் ஒன்று கூடி நாடகம் ஒன்று நடிப்பதற்கான முடிவிற்கு அவர்கள் வருவதாகவும், தாங்கள் எடுக்கும் பாத்திர அமைப்புகளையும் கலந்துரையாடி முடிவு செய்து கொண்டு நாடகக் களத்திற்கு வருகின்றனர். பார்வையாளர்கள், என்ன நடக்கப் போகின்றது, எவ்வாறு நடைபெறப் போகின்றது என்ற உன்னிப்போடு காத்திருக்கின்ற தன்மை தான் சிறுவர் நாடகத் தயாரிப்பாளர்களின் மதிநுட்பம் சார்ந்த திறமை என்பதை இங்கு நோக்கற்பாலது. நாடகங்களில் பாடல் குழுவினர் பலர் இடம்பெறுவர். அவர்கள் தமக்குரிய வேளைகளில் வரிசையாகத் தாளக் கட்டுகளுடன் மேடைக்கு வந்து, ஆடி அசைந்து ஒத்திசைவுடன் அடுத்து வரப் போகும் செய்திகளைப் பாடல்களாகப் பாடுவர். நாடகப் பாத்திரமேற்பவர்களை ஒரளவு அணிந்திருந்தாலும்,



அத்தகைய பாத்திரங்களின் அசைவு, பாவனை, பாய்ச்சல், குரலொலி அச்சொட்டாக அமைக்கப்பட்டிருப்பதால் பாத்திரங்கள் உண்மைத் தன்மையை முழுமையாகப் புலப்படுத்துவனவாக உள்ளன. காட்சிகள் யாவும் அசையாப் பொருட்களும், அசைந்து அவ்வப்போது கள நிலைமைகளை ஏற்ற காட்சியமைப்பிற்கு இட்டுச் செல்லுவனவாக உள்ளன. நாடகத்தின் கருப்பொருள்கள் உண்மை, தியாகம், அன்பு போன்ற நற்குண, நற்செய்கைகளை வளர்ப்பனவாகவே அமைந்துள்ளன. இத்தகைய நாடகங்களில் வரும் தீய நடத்தைக்குப் பார்வையாளரின் ஆலோசனையுடன் தண்டிப்பும், தவிப்பும் இடம் பெறுதல் மற்றொரு சிறப்பம்சம் ஆகும். இத்தகைய நிகழ்வு நாடகங்களின் இலக்குகளை வெற்றி கொள்ளச் செய்யத்தகையன.

குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் எழுத்துருவில் வெளிவந்த "ஒற்றுமையின் சின்னம்" என்னும் சிறுவர் நாடகத்தை நாடக அரங்கக் கல்லூரியின் சார்பில் தேவானந்த் அவர்கள் யாழ்ப்பாணம், கல்வியங்காடு இ.த.க. பாடசாலையில் 1992ல் நெறிப்படுத்தியிருந்தார். இந்த நாடகம் ஐந்திற்கும் மேற்பட்ட மேடைகளில் காட்சிப்படுத்தப்பட்டுப், பலரையும் கவருந்தகையனவாக அமைந்திருந்தது. ஓர் காட்சியின் மூலம் திரட்டப்பட்ட நிதி பாடசாலையின் நூலகம் ஒன்றைப் புதிதாகத் தோற்றுவிக்கப் பெரிதும் உதவியிருந்தது. அடுத்த ஆண்டு இதே பாடசாலையில் இவர்களின் தயாரிப்பில் உருவான "காட்டு ராஜ சிங்கம்" பல களங்களைக் கண்டிருந்தது.

நாடக அரங்கக் கல்லூரி மாணவன், தேவானந்த் அவர்களின் நெறியாள்கையில் வெளிவந்து மக்கள் மத்தியில் பாராட்டுப் பெற்ற நாடகங்களாக முத்துத் தம்பி மகாவித்தியாலய மாணவர்களின் நடிப்பில் மலர்ந்த 1993களில் வெளிவந்த "நட்பு" என்னும் நாடகமும், திருநெல்வேலி சிறுவர் நிறை வாழ்வு இல்ல மாணவர்களினால் 1994களில் தயாரிக்கப்பட்ட "ஒரு பூனையின் விலையென்ன" என்ற நாடகமும், 1995களில் வெளிவந்த "பாலுக்குப் பாலகன்" என்ற நாடகமும், மேலும் 1994களில் வெளியிடப்பட்ட "பண்பும் பயனும்", 1998களில் யாழ்ப்பாண இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களினால் வெளிக் கொண்டுவரப்பட்ட "முயலார் முயல்கிறார்" என்ற நாடகமும், 1997களில் தேவானந்த் அவர்களின் எழுத்துரு, நெறியாள்கையில் வெளிவந்த "துணிவு" என்ற நாடகமும் குறிப்பிடப்படலாம். 1998களில் அரங்கச் செயற்பாட்டுக் குழுவினராலும், நாடக அரங்கக் கல்லூரியினராலும் செயற்படுத்தப்பட்ட குழந்தை ம. சண்முகலிங்கத்தின் "இடுக்கண் வருங்கால்..." என்ற நாடகமும், சிறுவர்களின் மன விழுமியங்களைத் துலக்கி அண்மித்த, வரலாற்றைப் படைத்து நிற்கும் சிறுவர் நாடகங்களாகக் குறிப்பிடலாம்.

1993 - 1994 காலப்பகுதியில், பாடசாலை மட்டத் தமிழ் மொழித் திறன் போட்டிகளில், சிறுவர் நாடகம், தனியான போட்டி நிகழ்ச்சியாக மாகாணக் கல்வித் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தக் காலகட்டத்தில் பாடசாலைகள் போட்டி போட்டுக் கொண்டு சிறுவர் நாடகங்களைத் தயாரித்து வழங்கியிருந்தன. இத்தகைய தயாரிப்புக்களில் பெரும்பாலானவற்றிற்கு, நாடக அரங்கக் கல்லூரியினரே பிற்பலமாக அமைந்திருந்தனர் எனலாம். இடப்பெயர்வுகளைத் தொடர்ந்து வந்த காலங்களில் இத்தகைய போட்டி நிகழ்ச்சிகளுக்குத் தனியான இடத்தைக் கல்வியுலகு வழங்கத் தவறியிருந்தமை, சிறுவர் நாடக வளர்ச்சியில் இடைப்பட்ட தளர்ச்சிக்கு ஏதுவான காரணம் எனின் மிகையாகாது.

சிறுவர் நாடகத்தை ஆற்றுவோர் சிறுவர்களாகவோ வயது, வந்தவர்களாகவோ அல்லது இரு சாராரும் கலந்தவர்களாகவோ அமைய முடியும். சிறுவர்களுக்காக வயது வந்தவர்கள் ஆற்றுகைப்படுத்திய நாடகமாகக் "கூடி விளையாடு பாப்பா" என்ற நாடகம் அமைகின்றது. 1978ல் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் எழுத்துருவில் வெளிவந்த நாடகம் 1979ல் மேடையேற்றப்பட்டது. இதன் நெறியாளராக ஆ. தார்சீசியஸ் விளங்கியிருந்தார். அக்காலத்தில் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பல களங் கண்ட சிறுவர் நாடகமாக இது விளங்கிற்று. 1994 நாடக அரங்கக் கல்லூரியினால் க. சிதம்பரநாதன் அவர்களின் நெறியாள்கையில் மீண்டும் புதுப் பொலிவு பெற்றது. இந்த வருடம் மூன்றாவது முறையாக, அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரால் தே. தேவானந்த் அவர்களின் நெறியாள்கையில் க.பொ.த.(உ/த.) மாணவர்களையும், பல்கலைக்கழக மாணவர்களையும், ஆசிரியர்களையும் ஆற்றுவோர்களாக உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. யுனிசெப் சிறுவர்களுக்கான, உளநல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் 32 மேடைகளைச் சந்தித்துப் புகழ் பூத்து நிற்கின்றது. ஆடு, பூனை, நரி, கரடி, பன்றி, சேவல், நாய், குரங்கு என்ற விலங்குப் பாத்திரங்களை உள்ளடக்கித் தயாரிக்கப் பட்டுள்ளது. பாத்திரங்களுக்கு மிகப் பொருத்தமான ஆற்றுவோர்களைச் சேர்த்துக் கொண்டார்களா? அல்லது பாத்திரங்களை அவ்வாறு நெறியாள்கை மூலம் நெறிப்படுத்தியுள்ளார்களா? என்று சிந்திக்கத்தக்கவாறு, வயது வந்தவர்கள், குழந்தைகளாகி இந்த நாடகத்தை மெருகூட்டியுள்ள னர். ஒரு முறை பார்த்தவர்கள் மீண்டும் பார்க்க வேண்டும் என்று, பல மேடைகளைத் தேடி ஓடியவர்களுள் நானும் ஒருவன் என்ற வகையில் இவ்வாண்டு வெளிவந்த அற்புதப் படையல் "கூடி விளையாடு பாப்பா" என்பதைக் கூறிக் கொள்ளலாம்.

சிறுவர் நாடக வளர்ச்சியில் ஓர் மைல் கல்லாக விளங்குபவர் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள். அவர்களால் உருவாக்கப்பட்ட அரங்கச் செயற்பாட்டுக் குழுவினர் தமது குழுவின் ஒத்திசைவுடன், சிறுவர் நாடகங்களைத் தயாரித்து வெளிக் கொணருவது சிறுவர் நாடகத் துறையின் வளர்ச்சிக்கு ஓர் மிடுக்கான எடுத்துக் காட்டு எனலாம்.

நன்றி - நூலகத்திட்டம்



# சிறந்த புனைகதைப் படைப்பாளிகள் உருவாகாததற்கு படைப்பாற்றல் சார்ந்த காரணங்கள் இல்லை!

–காலச்சுவடு நேர்காணலில் சேரன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**மு. தளையசிங்கம் பற்றி உங்கள் மதிப்பீடு என்ன?**

மு. தளையசிங்கத்தின் எழுத்துக்களில் காணப்படும் அதிருப்தி, கலகம், எதிர்ப்பு ஆகிய அம்சங்கள் முக்கியத்துவமானவை என்று கருதுகின்றேன். அவருடைய சிறுகதைகளும், படைப்பாற்றல் மிக்கவையானதாகவும், வீச்சானவையாகவும் இருக்கின்றன. அவருடைய படைப்புக்களின் பின்னால் ஒரு சிந்தனைத் தளமும், அலசலும், படைப்பின் பின்னணிகள் பற்றிய உணர்வும் இருந்தது. இது பல எழுத்தாளர்களிடம் காணக் கிடைக்காத ஒரு அம்சம் ஆகும்.


வைதீக மார்க்ஸீயத்தின் எல்லைப்பாடுகள் பற்றிய உணர்வு அவரிடம் இருந்தது. எனினும் அந்த எல்லைப்பாடுகள் பற்றிய உணர்வுக்கு அவர் வந்து சேர எடுத்த வழி முறையும், நான் வந்துசேர எடுத்த முறைமையும் வேறு வேறானவை. அராஜகம், சர்வாதிகாரத்தின் சமூக அமைப்பாக்கம், தொழிற்பாடுகள் பற்றிய அவரது கருத்து நிலையும் பிரக்ஞையும், இடதுசாரி அரசுகள்- குறிப்பாகப் பழைய சோவியத் யூனியனின் அனுபவங்களூடாக மட்டுமே பெறப்பட்டிருந்தன. வலது சாரி அரசுகள், சர்வாதிகாரங்கள் பற்றிய பகுப்பாய்வும், ஒப்பீடும் அவரிடம் சமாந்தரமாக இடம் பெறவில்லை. அந்த வகையில் அராஜகம், சர்வாதிகாரம் பற்றிய அவரது உள்ளார்ந்த விமர்சனங்களில் போதியளவு சமூக, வரலாற்றுப் பின்னணியை அவர் பேணவில்லை. இது ஒரு முக்கியமான குறைபாடு என்பதோடு அவருடைய பார்வை வீச்சையும் பாதித்துள்ளதாகவே கருதுகின்றேன்.

ஆசாரங்களை எதிர்த்த அல்லது புறந்தள்ளிய ஆன்மீகம் என்ற வகையில் அவருடைய மெய்முதல்வாதச் சிந்தனைகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் இறுகிய யாழ்ப்பாணத்து ஆசாரச் சூழலில் ஒரு முக்கிய பங்கு இருந்தது என்பதோடு, அந்த ஆசார யாழ்ப்பாணக் கட்டுமானத்துக்கும் அது சவாலாக இருந்தது. அவருடைய ஆளுமையின் முக்கியமான இயல்பு அதுதான் என்று கருதுகின்றேன்.

மனதின் ஆழங்கள், ஆத்மார்த்த தளங்களைத் தொடுகின்ற இலக்கியப் படைப்புக்கள் தான் காலங் கடந்து நிற்கும் என்பதும், எல்லாக் காலத்துக்கும் பொருந்தக் கூடிய ஒரு சர்வ வியாபகமான கலைப் படைப்பைப் பற்றிய ஒரு வேட்கையையும் மு.த.விடம் பார்க்கலாம். அது எனக்கு அவ்வளவாக உடன்பாடான விஷயமில்லை. எந்தப் படைப்புகள் காலத்தை வென்று நிற்கப் போகின்றவை, எவை கால வெள்ளத்தில் அடிபட்டுச் செல்லப் போகின்றவை என்பது பற்றிய முடிந்த முடிவான தீர்மானத்தை வெறும் இலக்கிய வலு அல்லது இலக்கியங்களின் ஆத்மார்த்த வலுவை மட்டுமே வைத்துத் தீர்மானிக்க முடியும் என்று தோன்றவில்லை. நவில்தொறும் நூல்நயம் என்பதும் எல்லாக் காலத்துக்கும் ஒரே மாதிரியான வாசிப்புக்களைத் தரும் என்பதும் இல்லை. அந்த வகையில் மு.த.வின் பிரபஞ்ச யதார்த்தத்தோடு, என்னால் உறவு கொள்ள முடியாதுள்ளது. பெருமளவுக்கு நான் நிகழ்காலத்தின் கவியாகவே இருக்கின்றேன். கடந்த காலத்தோடும், எதிர்காலத்தோடும் எனது படைப்பும் சிந்தனையும் உறவாடக் கூடும். எனினும் காலங்கடந்த விலையேற்றத்துக்கு எவரும் திட்டமிட்டு எழுத முடியும் என்று தோன்றவில்லை.

மு.த.வின் ஆத்மார்த்த தளத்தோடு இணைந்ததாக எழுகிற இன்னொரு சிக்கல் அவர் பேசுகின்ற 'குணவியல்' ஆகும். இது எவ்வகையான சமூக, வரலாற்று, அரசியல் சுவர்களுமின்றி ஆத்மார்த்தம் என்கின்ற அந்தரத்திலேயே நிற்கின்றது. இன்னும் சற்று ஆழமாகப் பேசுவதானால், மு.த.விடம் இடம் பெறுகின்ற மெய்ம்முதன்மை அல்லது ஆத்மார்த்தத்துக்கான முன்னுரிமைப்பாடு ஒருவகையில் பண்பாட்டையும், ஆத்மீகத்தையும் மேல்கொண்டு வருகின்ற அதேவேளை, சமூகம் இயக்கப் போக்கு, வர்க்கம், வரலாறு என்பவற்றை இடம்பெயர்த்து விடுகிறது. இந்த இடப்பெயர்ச்சி தான் எனக்குப் பிரச்சினையாக இருக்கின்றது.

இதை இன்னொரு தளத்தில் வைத்து விளக்க விரும்புகின்றேன். வாழ்க்கைக்கும், கலைக்கும் சோதனைபூர்வமான இணக்கமும், ஒன்றிப்பும் இருக்க வேண்டும் என்று மு.த.



சேரன்

கருதுவதோடு எனக்கு அடிப்படையில் முரண்பாடில்லை. ஏனென்றால் இது அறம் மற்றும் விழுமியங்கள் சார்ந்தது. படைப்பாளி இவற்றிலிருந்து முற்றுமுழுதாக விலகிவிட முடியாது. இனவாதம், நிறவாதம் போன்ற தீவிரமான பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகின்ற பலர், இன்று அவற்றுக்கு அடிப்படையாக இருக்கும் அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பைத் தமது ஆய்வுகளில் இருந்து தவிர்த்து விட்டு இனவாதம், நிறவாதம் என்பன கலாசாரம் /பண்பாட்டு ரீதியாகவே இப்போது கட்டப்பட்டு வருகின்றன என்ற வாதத்தைப் பிரபலப்படுத்தி வருகின்றார்கள். இனவாதம், நிறவாதம் ஆகியவை கலாசாரப் பண்பாட்டுத் தளங்களூடாகத் தம்மை வெளிப்படுத்துகின்றன என்பது வேறு. அவை கலாசாரம் / பண்பாட்டு ரீதியாகத் தான் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்வது வேறு.

**தமிழகத்தின் கவிதை இயக்கம், ஈழக் கவிதை இயக்கத்தைப் பாதித்ததா? ஈழப் படைப்பாளிகளைத் தமிழகப் படைப்பாளிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாகக் கருதுகிறீர்களா அல்லது முற்றிலும் தனித்துவமான இலக்கிய மரபுகள் கொண்டவர்களாக நினைக்கின்றீர்களா?**

தமிழகத்துக்கும், ஈழத்துக்கும் எப்போதுமே கலை, இலக்கிய ரீதியான உறவுகளும், ஊட்டங்களும் இருந்து வந்துள்ளன. இவை பெருமளவுக்கு ஒரு வழிப் பாதையாகவே இருந்தன. தமிழகத்திலிருந்து நூல்களும், இலக்கியமும் மிகவும் தாராளமாக ஈழத்துக்கு வந்து சேர்ந்த அதேவேளை, ஈழத்திலிருந்து நூல்களும், இலக்கியமும் பண்பாட்டின் இதர அம்சங்களும் தமிழகத்தில் சேர்வது பெருமளவுக்குச் சாத்தியமில்லாமலே இருந்தது. இந்தியாவில் வழங்கப்படுகின்ற எந்த ஒரு மொழியிலும் நூல்கள் இறக்குமதி செய்வதும், விற்பனை /விநியோகம் செய்வதும் இந்திய அரசு சட்டங்களாலேயே முடக்கப்பட்டிருந்தன. அந்த வகையில் ஈழத்து நூல்களையும், சஞ்சிகைகளையும் தமிழகத்தில் பரவலாகக் கிடைக்கச் செய்வதில் பெரும் தடைகள் இருந்தன. எனவே தமிழக - ஈழ இலக்கிய, கலை உறவுகள் பெருமளவுக்கு ஒரு வழிப்பாதையாகவே இருக்க நேர்ந்தமை சாத்தியமானதுதான்.

தமிழகத்தின் பல இலக்கியப் போக்குகளின் பாதிப்புக்களை, ஈழத்தில் பார்க்க முடியும். முருகையன், மஹாகவி, நீலாவணன் ஆகியோருக்கு ஆரம்பத்தில் கலைவாணன் (திருவானைக்காவல், அப்புலிங்கம்) மீது ஈடுபாடு இருந்தது. கூடவே பாரதி, பாரதிதாசன் ஆகியோரது பாதிப்புக்களையும் நீங்கள் இனங்காண முடியும். அவர்களுடைய ஆரம்பகாலக் கவிதைகளில் இவற்றைத் தெளிவாகவே பார்க்கலாம். இத்தகைய பாதிப்பிலிருந்து விடுபட்டு நுஃமான், முருகையன், சண்முகன் சிவலிங்கம் ஆகியோர் இனங்கண்டு சொல்லியிருப்பது போல - ஒரு பேச்சோசை வழக்குக்கு ஈழக் கவிதை ஒரு முக்கியமான கூறு திரும்பியது முக்கியமான திருப்பமாகும். இந்தத் திருப்பத்திலிருந்து ஒரு தனித்துவமான ஈழத்துக் கவிதைப் போக்கொன்றை இனங்காண முடியும் என்று கருதுகின்றேன். எழுபதுகளின் ஆரம்பம் வரை, ஈழத்துக் கவிதைகள் /கவிகள் என முக்கியமாக மேலெழுந்த பலரிலும் இந்தப் போக்கை நீங்கள் தொடர்ச்சியாகப் பார்க்க முடியும். இந்தப் போக்கின் அசலான இன்றைய பிரதிநிதியாக சோ. பத்மநாதனைக் குறிப்பிடலாம் என்பது என் எண்ணம். இந்தப் போக்கிற்குத் தா. இராமலிங்கம் மெல்லிய ஒரு விதி விலக்கு.

1971-1975 காலப் பகுதியில் புதுக் கவிதை பரவலாக மேலே வருகிறது. நானும், எனது தலைமுறையைச் சேர்ந்த பலரும் எழுத ஆரம்பித்த காலங்களில் வானம்பாடி, பிரக்ஞை, கசடதபற எனப் பல சிற்றிதழ்கள் வேறு பல புதுக் கவிதைத் தொகுதிகள் எமக்குக் கிடைத்தன. தீபம், கணையாழி, தாமரை ஆகியனவையும், தொடர்ச்சியாகப் பார்க்கக் கிடைத்தன. இந்தக் காலகட்டப் பகுதியில் தான் திக்குவல்லைக் கமாலின் "எலிக் கூடு" புதுக்கவிதைத் தொகுதி வெளியாயிற்று. அன்பு ஜவஹர்ஷா பல புதுக்கவிஞர்களின், கவிதைகளைத் தொகுத்துப் 'பொறிகள்' எனும் தொகுதியை வெளியிட்டார். 'பொறிகள்' எனும் தொகுதியை இப்போது பார்க்கின்ற போது தமிழகப் புதுக் கவிதைகளின், குறிப்பாக வானம் பாடிச் சாயலைப் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

எங்களுடைய கையெழுத்துச் சஞ்சிகையான 'ஞாயிறு' இதழ்களில் நான் எழுதியிருந்த பல கவிதைகளும் இந்த வகையாகத் தானிருந்தன. இந்தப் போக்கின் தொடர்ச்சியாக எழுதி வருபவர்கள் பலர் ஈழத்தில் இருக்கின்றார்கள். இத்தகைய புதுக் கவிதைகள் தினசரிப் பத்திரிகைகளின், வார இதழ்களின் 'கவிதை மூலை'களிலேயே பெருமளவுக்குக் கிடைக்கின்றன.

வானம்பாடி இதழ்களை ஒரு சேரவும் பின்னர் அவர்கள் வெளியிட்ட வானம்பாடி, ஈழத்துக் கவிதைச் சிறப்பிதழையும் பார்த்தீர்களானால் ஈழத்துக் கவிதையின் தர மாற்றங்களைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

இத்தகைய மாற்றங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் இலக்கியம் சார்ந்தவை மட்டுமன்று, ஈழத்தில் மொழி, சமூக, அரசியல் வெளி இரண்டுமே தமிழகத்தை விட வேறானதாக இருந்து வருகின்றன. எமது சமூக அனுபவங்களும், அரசியல் வரலாற்றுணர்வும் வித்தியாசமான ஒரு உணர்திறனை எங்களுக்கு வழங்கியிருக்கிறது. ஐம்பதுகளிலிருந்தே இதனை நீங்கள் மெல்ல மெல்ல அவதானிக்கலாம். எனினும் எண்பதுகளில் இது மிகவும் துலக்கமாகவே தெரிகின்றது. இப்படிச் சொல்கின்ற போது எமது சமூக அனுபவங்களை நாங்கள் வெளிப்படுத்துகின்ற முறைமையும், பாங்கும் தமிழக எழுத்தாளர்கள் தமது சமூக அரசியல் மற்றும் தன்னுணர்வு அனுபவங்களை வெளிப்படுத்துகின்ற முறைமையையும், பாங்கையும் விட உணர்ந்தது என நான் வாதிடமாட்டேன். தனித்துவம் என்பதை 'உயர்ந்தது' என்கின்ற அர்த்தத்தில் இங்கு, நான் பயன்படுத்தவில்லை. உயர்ந்தது எது என்பது பற்றிய சொல்லாடலுக்கு நாம் இன்னும் தீவிரமாகவும், விரிவாகவும் பேசவேண்டி இருக்கும்.

ஆங்கில மொழிலேயே பல்வேறு தனித்துவங்களும், பல்வேறு உணர்திறன்களும் நிறையப் பெற்ற எழுத்துக்கள் இங்கிலாந்து அல்லாத வேறு வேறு நாடுகளிலிருந்து எழுவதைக் கவனிக்க வேண்டும். 'ஆங்கில இலக்கியம்' என்ற தொடரே இப்போது வழக்கிழந்து போய்விட்டது.

Literatures In English / English என்றுதான் பேச வேண்டி இருக்கும். உதாரணமாக, மேற்கு இந்தியத் தீவுகளிலிருந்து வருகின்ற இலக்கியங்கள் (Derek Walcott, Earl Lovelace, Martin Carter போன்றோர்), கனடாவிலிருந்து வருகின்ற இலக்கியங்கள் (Margret Atwood, Dionne Brand, Alice Munro, Shyam Selvadurai, Anne Michaels), நைஜீரியாவிலிருந்து வெளிவருபவை, ( Wole Soyinka, Chinue Achebe போன்றோர்) வெளிப்படுத்துகின்ற வெளி மொழித் தனித்துவங்கள் வேறானவையாகும். (இத்தகைய இலக்கியங்களைப் Post- Colonial Literature என்று ஒரே குடையின் கீழ் சேர்த்து விடுகின்ற ஆபத்தை /அபத்தத்தைப் பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் பேச வேண்டும் !)

இத்தகைய ஒரு தளத்திலேயே - ஈழ தமிழக இலக்கியங்களும் பார்க்கப்படுவது பயன் உள்ள ஒன்றாக இருக்கும். நீண்ட காலத்துக்கு முன்பாகத் தன்னுடைய இலங்கைப் பயணத்திற்குப் பிற்பாடு அசோக மித்திரன் இத்தகையதொரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்.

## கனவில் தான் முழுமையாகும் நான்

'இன்னுந்தான்,
நீங்கள் அழைக்கும் இடங்களுக்கெல்லாம்
என்னால் மறுப்புச் சொல்ல முடியவில்லை
நீங்கள் குத்திய மூக்கணாங்கயிற்றையும்
அறுத்து எறிய இயலவில்லை.

எத்தனை முறைகள் என்னைத்
திக்கற்ற காடுகளில் தவிக்க விட்டீர்கள்
எத்தனை தடவைகள்
சாக்கடை நீரினில் இறக்கினீர்கள்

அப்பொழுதெல்லாம்
நான் என் மூளையைத் தின்று பசியாறினேன்
இரத்தத்தைக்குடித்து விடாய் தீர்த்தேன்
என்னையே கொன்று, புதைகுழியுள் கிடத்தி
மண்போட்டு நிமிர்ந்தேன்.

உங்கள் முகங்களுக்கு முன்,
பாசங்களுக்கு முன்,
தங்கியிருத்தல்களுக்கு முன்,
பெரும்பான்மையின் முன்,
நான் தோற்றுத்தான் போகின்றேன்

ஆயினும்,
நான் கனவில் எழுந்து,குளித்து முழுகி,
சோடனைகள் ஏதுமின்றி உடையணிந்து
என் பாதையை அடையாளம் கண்டு செல்கின்றேன்
அதில் சில்லென்று காற்று வீசுவதையும்
நிலவு எறிப்பதையும்
எப்படி உங்கள் முன் நிரூபிக்கப் போகின்றேன்.

*சிவ. வரதராஜன்*, 1999 ஆவணி

நன்றி - நூலகத்திட்டம்



# கதவுகள் திறந்து தான் உள்ளன

தலைமுறை தலைமுறையாகவே புத்திக்கூர்மையும், ஆளுமையும் என்னுள் கடத்தப்படுவதாக உணர்கிறேன். எப்போதுமே எதையுமே சாதிக்கக் கூடிய ஆற்றலுடன் தான் நான் இருந்து வருகிறேன். எந்தப் பெரிய நிர்வாகத்தையும் சிக்கலின்றி இயக்கக்கூடிய ஆளுமை பண்டுதொட்டு என்னிடம் இருந்து வருகிறது. ஆனால், என் புத்திசாலித்தனத்தை தம் புத்திசாலித்தனத்தால் சந்திக்காமல் தம் அதிகாரத்தால் என்னை அடக்க முனையும் மனிதர்களே இந்த உலகில் பெரும் எண்ணிக்கையில் என் முன் உலாவுகிறார்கள். எனக்கு இருக்கும் ஒரே ஒரு மனவருத்தம் என்னவென்றால் என்னுடைய புத்திசாலித்தனத்தை ஆளுமையை மதித்து கௌரவிக்கக்கூடிய உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய மனிதர்களை பெரும்பாலும் காண-முடிவதில்லை என்பது தான். தாய்வழிச் சமுதாயம் அழிந்த நாள் முதலாய் நான் அவர்களை அந்த நல்ல மனிதர்களைத் தேடியலைகிறேன். இன்னும் தான் நான் அவர்களைச் சந்திக்கவில்லை.

நான் காணுகின்ற மனதிர்கள் என்னைத் தம் அதிகாரத்தால் அடக்க முயலுகின்றார்கள். அல்லது அன்பு எனும் போர்வையில் கட்டுப்போட்டு முடக்க முயல்கிறார்கள். இரண்டு வழிகளுமே சரி வராத நிலையில் எனக்கு "அடங்காப் பிடாரி", "ஒரு மாதிரி" என்று பட்டங்களைச் சூட்டிவிட்டு விலகி நின்று வீண் விமர்சனம் செய்து என்னை மழுங்கடிக்க முயலுகின்றார்கள். நான் தம்மைவிட ஒரு படியேனும் குறைந்தளவாக இருக்கமாட்டேனா என்ற ஆதங்கம் அவர்களிடம் நீண்ட காலமாகவே இருந்து வருகின்றது. நாலுபேருக்கு முன்னால் என்னை அறிவுபூர்வமானவள். உணர்வு பூர்வமானாவள் என்பதை அவர்களால் ஏற்றுக் கொள்ளவே முடிவதில்லை. என்னைவிட தாங்களே அறிவுபூர்வமானவர்கள், ஆளுமையானவர்-கள், என்று நாலுபேரிடம் காட்டிக்கொள்ள முயலும் போது நான் ஒன்றுமே தெரியாதவள் போல் இருந்து விட்டால், அதில் தான் இவர்களுக்கு எத்துணை மனவிறைவு! தம்மைவிட ஒரு பெண் மேலானவள், அறிவு கொண்டவள் என்பது எங்கேனும் வெளிபட்டு விட்டால் அவர்களுக்கு உண்டாகும் கொதிப்புத் தான் எத்துணை! அப்படியான நேரங்களில் அவர்களுக்கு முடியுமானால் என்னைக் கொன்றே விடுவார்கள். இவர்களுடன் எப்படி நான் கை குலுக்க...?

இப்படித் தான் ஒரு முறை பாஞ்சால புரத்தில் ஜனகனின் மகா சபையில் பிரம்மவாதியான யக்ஞவல்கியனுடன் பிரம்மம் பற்றி கருத்தாடல் செய்யச் சென்றிருந்தேன். யக்ஞவல்கியனால் என்னைக் கருத்தாடலில் வெல்ல முடியவில்லை. பிரமம் பற்றிய என் கேள்விகளால் திணறிப்போன யக்ஞவல்கியன்,

"நிறுத்து கார்க்கி. இதற்கு மேல் கேள்வி கேட்டால் உன் தலை அறுந்துவிழுந்துவிடும்." என்று அந்த மகா சபையில் கூடியிருந்த அத்துணை அறிஞர்கள் முன்னிலையில் நாகரிகமேயில்லாமல் கத்திக் கூச்சலிட்டுத்தான் அந்தக் கருத்தாடலை நிறுத்த முடிந்ததே தவிர, என் அறிவோடு தன் அறிவால் மோதியல்ல.

பின்னொரு நாளில் இன்னொரு சம்பவம் நடந்தது. சோழமண்டலத்தில் கம்பன் என்னைத் தன் கவியால் மட்டம் தட்ட முயன்று என்னிடம் மூக்குடைபட்டான். எப்படியாவது என்னை 'எடி' போட்டு மட்டம் தட்ட விரும்பிய கம்பன் 'காலடி நாலிலைப்பந்தலடி' என்று நொடி போட்டான். ஒரு தண்டிலே நான்கே இலைகளை மட்டும் கொண்டிருக்கும் ஆரை என்ற கீரையைப் பற்றியதே நொடி. என்னை 'எடி' போடவே கம்பன் நொடி போட்டான். விட்டேனா நான்?


"எட்டே கால் லட்சணமே
எமனேறும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே - முட்டமேல்
கூரையிலா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாய் அடா"

(அவலட்ணமே எருமையடா, கழுதையே குட்டிச்சுவரே குரங்கே, நீ கேட்டது ஆரை என்ற கீரையை அடா)

என்று பதில் கொடுத்து மடக்கினேன். கவிச் சக்கரவர்த்தியேயானாலும் ஒரு பெண்ணை மட்டம் தட்டித்தான் தன் புலமையைக் காட்ட நினைத்த கம்பனை வேறு எவ்வாறு நான் அணுகியிருக்க முடியும்?

வேறொரு நாளில் பீஷ்மனும் சால்வனும் சேர்ந்து என் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தி அவமானப்படுத்தியமை இன்னும் எத்துனை தலைமுறை கடந்தாலும் மறக்க முடியுமா என்னால்...?

சாளுவ மன்னன் சால்வனுடன் மனதால் ஒன்றியிருந்த என்னை சுயம்வர நாளன்று சுயம் வர மண்டபத்தில் இருந்து என் சகோதரிகள் இருவருடன் சேர்ந்து தன் தம்பி திருதராட்டிர-னுக்கு மணம் முடித்துக் கொடுப்பதற்காகத் தூக்கிச் சென்றான். பீஷ்மன் அத்தினா-புரத்திலிருந்து அவனது அரண்மனைக்குக் கொண்டு செ



பின் நான் என்மனதில் இருந்ததை பீஷ்மனிடம் தெரிவித்தேன். அவன் என்னைச் சால்வனிடம் அனுப்பினான். சுயம்வர மண்டபத்துக்கு வந்திருந்து ஏமாற்றத்துடன் நாடு திரும்பியிருந்த சால்வனோ, "பீஷ்மனால் தூக்கிச் செல்லப்பட்ட பெண்ணை என்னால் மணம் செய்ய முடியாது. நீ பீஷ்மனிடமே போ அம்பை"

எனத் திருப்பியனுப்பிவிட்டான். மீண்டும் பீஷ்மனிடம் வந்து அவன் தம்பி திருத்ராட்டிரனுக்கே என்னை மணம் செய்து வைக்குமாறு கேட்க, "இன்னொருவரை மதனால் நினைத்த உன்னை என் தம்பிக்கு மணம் செய்து கொடுக்க முயடிாது. நீ சால்வனிடமே போ" என பீஷ்மன் திருப்பியனுப்ப மீண்டும் சால்வனால் மறுக்கப்பட்டு பீஷ்மனிடம் திரும்பி வந்து, "உங்களல்லா தான் இந்த நிலைமை வந்தது. நீங்களே என்னை மணம் செய்யுங்கள்" என்று கேட்க அவன் மறுத்து விட்டான்.

நான் என்ன குப்பையா இப்படிச் சால்வனாலும் பீஷ்மனாலும் மாறி மாறி தூக்கி வீசியெறிப்பட?

நான் ஒரு பெண். உடலும் உயிரும் உணர்வும் கொண்ட மனித உயிரி. என் இளமை உணர்வுகளைத் தூண்டியவன் சால்வன். கேட்டுக்கேள்வி இல்லாமல் தூக்கிச் சென்றவன் பீஷ்மன். தன்னுடன் மனதால் ஒன்றிய என்னை பீஷ்மன் தூக்கிச் சென்றான் என்று காரணம் சொல்லி மறுத்தான் சால்வன். தன்னால் தூக்கிச் செல்லப்பட்ட என்னை வேறொருவனை விரும்பினேன் என்று காரணம் சொல்லி மறுத்தான் பீஷ்மன். அவன் பிரமச்சாரிய விரதம் கடைபிடித்தது வேறு விடயம். ஒரு பிரம்மச்சாரி ஏன் என் வாழ்வில் தலையிட வேண்டும்?

இந்த இருவரில் ஒருவராவது எனக்கும் மனம் விருப்பு, வெறுப்பு, உணர்வு இருக்கும் என்பதைச் சிறிதும் புரிந்து கொள்ள முயன்றார்களா? எனக்குத் தெரியும் சால்வன் என்னை மறுத்தது பீஷ்மன் என்னைத் தூக்கிச் சென்றான் என்பதற்காக மட்டும் அல்ல. அவனது அரண்மனையில் நின்றபோது என் ஒழுக்கம் மாறுபட்டிருக்கக் கூடுமோ என்ற ஐயத்தால் தான் என்பது. இதைக்கூடப் புரிந்து கொள்ள முடியாதளவு முட்டாளா நான்?

தன்னிலேயே நம்பிக்கையில்லாத சால்வனிடம் மனதைக் கொடுத்தது என் தவறு தான். ஆனால், இந்த பீஷ்மன் கடையிலே ஒரு பொருளை வாங்கி வீட்டுக்கு கொண்டுபோய் காட்டி பிடிக்கவில்லையென்றதும், கடையிலே திருப்பிக் கொடுப்பது போலல்லவா என் வாழ்வுடன் விளையாடினான். ஒரு பட்டாம்பூச்சி போல் விளையாடித் திரிந்த, சிட்டுக் குருவி போல் கட்டற்றுப் பறந்த என் சிறகுகளை ஒடித்து என்னைக் காயப்படுத்தியது மல்லாமல் காயத்துக்கு மருந்துபோட மறுத்த அவன் மிருகத்தனத்தை என்னவென்று சொல்ல?

எவனோ ஒருவனின் கதையைக் கேட்டு என்னில் ஐயுற்ற இராமன், வேடம் புனைந்து வந்து என்னை ஏமாற்றிய இந்திரன், தானும் இந்திரனிடம் ஏமாந்து விட்டுத் தன் ஆற்றாமையால் என்னில் சினந்த கௌதமன்.

இப்படி இவர்கள் போல் இன்னும் எத்துணை பேரை நான் காலங்காலமாகக் கண்டு வருகின்றேன். இது போன்றவர்களிடம் இனியும் ஏமாந்து போக நானென்ன மூளையே அற்றவளா?

என்னை அறிவால் மடக்குவதில் தோற்று, பின் என் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தி இழிவுபடுத்தி என்னை ஏறிமிதித்த இவர்கள் இப்போது என்னவென்றால் என் உரிமைக்-காகத் தாம் குரல் (?) எழுப்பப்போகிறார்-களாம். என் விடுதலைக்காகத் தாம் வழியமைக்கப் போகிறார்களாம். என்னைத் தம் பின்னால் வரட்டாம். எப்படியிருக்கிறது?

அடப்போடா பைத்தியக்காரா!

அன்றொரு நாள் ஜனகனின் மகா சபையில் 'என் தலை அறுந்து விழுந்து விடும்" என்று நீ கத்தினாயே. அன்றே நான் உன்னை நன்றாக அறிந்து கொண்டேன். நான் நடந்துபோகும் பாதையை நீ தீர்மானிக்கத் தேவையில்லை. என் வழியில் நீ குறுக்கே பாய்ந்து விழாமல் விலகி நடப்பாயானால் அதுவே போதும்.

என் வழி எனக்குத் தெரியும். அதற்காக இந்த உலகம் உள்ளவரையும் நீயும் நானும் தனித்தனி வழிகளில் தான் பயணம் என்று உன்னை நான் தள்ளி வைக்கவும் இல்லை. என் பாதை உனக்குத் தடை செய்யப்படவுமில்லை. என் உணர்வுகளைப் புரிந்து கொண்டு என் திறமைகளுக்கு மதிப்பளித்து என் ஆளுமையை கௌரவிக்கக்கூடிய மனிதர்கள் என்னோடு என் வழியில் எப்போதும் நடக்கலாம்.

என்னுடன் கைகோர்த்து நடக்க நீ தயாரானால், என் பாதையில் வரலாம்.

என் கைகளைப் பிணைத்துக் கட்டி என் பின்னால் என்னை இழுத்துத் தான் திரிவாயானால், நீ உன் பாதையிலேயே போ.

நான் என் சிறகுகளை அகல விரித்துப் பறக்கத் தொடங்கி நீண்ட நாட்களாயிற்று. மண்ணிலே உள்ள கூண்டு பொன்னால் ஆனதாக இருந்தாலும் இனி அதற்குள் நான் வந்தமரப் போவதில்லை. இந்த மண்ணிலே எத்துணை பசிய புல்வெளிகளும் பச்சை மரங்களும் ஆற்றோரங்களும் கடற்கரைகளும் உள்ளன, நான் இறங்கி இளைப்பாற.

ஆனால்,

என் மனதின் கதவுகள் நல்ல மனிதர்களின் வருகைக்காக எப்போதும் அகலத் திறந்த படியே தான் உள்ளன.

**-மோகனா**

*முல்லைத்தீவு*



# பெண்கள் பற்றி ஆணாதிக்க செய்தியிடல்!

- மகளின் வீட்டிலிருந்து மகனின் வீடு நோக்கிச் செல்லும் போது தாயின் தொலைக்காட்சி கல்லாக உருமாறியது!
- தாயின் தலையில் மகள் கல்லைத் தூக்கிப் போட்டாள்!
- கணவன் மனைவியின் காதை கடித்து போத்தலில் இட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றான்!
- மனைவியின் புலம்பலை பொறுக்க முடியாது கணவன். மனைவியை கோடாரியால் அடித்துக் கொலை!
- இரு பெண்கள் பெண்ணுரிமையை பாதுகாக்க பெரும் போராட்டம்!
- இப்படியும் ஒரு பெண்!
- அரை நிர்வாணத்திற்கு ரூ250 தண்டப்பணம்!

இங்கு குறித்துக் காட்டப்பட்டுள்ள செய்தித் தலைப்புகள் சிங்கள தினசரிகளிலிருந்து எடுக்கப்பட்டவை. இத்தலைப்புக்களும், செய்திகளும் இவற்றை உள்வாங்கிக் கொள்ளும் வாசகர்களுக்கு எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்? செய்தி, சம்பவம் எம்முறையில் தொடர்பூடகங்களில் வெளிப்படுத்தப்படுகின்றது? ஒரு சம்பவத்தை செய்தியாக பரிணமிக்கச் செய்வது எப்படி? ஒரு ஆண் நிர்வாணமாக வீதியில் ஓடுவதற்கும், ஒரு பெண் நிர்வாணமாக வீதியில் ஓடுவதற்கும் இடையிலான செய்தி பிரசுரிப்பு வேறுபாடு என்ன? ஒரு செய்தியை ஆண் எழுதுவதற்கும் பெண் எழுதுவதற்கும் இடையிலான வேறுபாடு ஏதும் உண்டா? போன்ற கேள்விகளை மேற்கூறப்பட்ட செய்தித் தலைப்புகள் தோற்றுவிக்கின்றன. இந்த செய்திகள் அனைத்திலுமே பெண்களின் பங்கு உள்ளது. பெண்கள் பற்றியதனால் தான் இந்தச் செய்திகள் இவ்வடிவத்தை பெற்றுள்ளதா என்ற ஐயத்தையும் இவை ஏற்படுத்துகின்றன. இவை ஏன் செய்தி என்ற அளவில் முக்கியத்துவம் பெறுகின்றன என்ற வினாவை இங்கு தவிர்க்க முடியாமல் முன்வைக்க வேண்டியேற்படுகின்றது. தெட்டத்தெளிவாகக் கூறினால் இவை பெண்களுக்கெதிரான வன்முறைச் செய்திகள் என்ற போர்வையில் பெண்களை கொச்சைப்படுத்தும் செயதிகள்.

மேலதிக விளக்கத்திற்கு இன்னுமொரு உதாரணம்

'அத்தனகல மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்குள் அரை நிர்வாணமாக பிரவேசித்த பெண்ணுக்கு மாஜிஸ்திரேட்டினால் ரூ. 250 தண்டப்பணம் செலுத்த ஆணை விடுக்கப்பட்டது.

அப் பெண் நீதிமன்ற வளாகத்தில் அங்குமிங்கும் உலவிக் கொண்டும் அணிந்திருந்த ஆடைகளினால் நீதிமன்றத்தை அவமதித்ததனாலும் பொலிஸ் அதிகாரியினால் அப்பெண் கைது செய்யப்பட்டார்.

அவள் அணிந்திருந்த பாவாடை (டைட்ஸ்கர்ட்) ஒன்றரை அடி கூட உயரம் கொண்டிராததுடன், அமர்ந்திருக்கும் பொழுது அரை நிர்வாணத்தை வெளிக்காட்டிக் கொண்டிருந்தாள்."

இச்செய்தி, "அரை நிர்வாணத்திற்கு ரூ. 250 தண்டப்பணம்" என்ற தலைப்பில் பதினான்கு புள்ளி அளவில் அடிக்கோடிடப்பட்டு திவயின நாளிதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

பத்திரிகைகளில், சஞ்சிகைகளில், நூல்களிலும் இவ்வாறான தன்மைகளை காணலாம். இவற்றுக்குபத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் பெண்கள் பக்கங்களும் விதிவிலக்கல்ல.

மேற்குறிப்பிடப்பட்ட இச்செய்தி திவயின நாளிதழில் வெளிவந்தது என நாம் நம்மை ஆசுவாசப்படுத்திக் கொள்ள முடியாது. மாறாக தமிழ், ஆங்கில இதழ்களில் வெளியிடப்படும் துணுக்குச் செய்திகள், பிரசுரிக்கப்படும் படங்கள் இவையெல்லாம் ஒரு வகையில் பெண்களை கேவலப்படுத்தும் கீழ்த்தரமான தந்திரோபாயங்கள் எனலாம். தகவலை தெரிவிக்கின்ற பொறுப்பு என்ற போதிலும் பெண்களை சிறுமைப்படுத்தும் எந்தவிதமான தகலவல்களுக்கும் நாம் இடம் கொடுத்துவிட முடியாது. அவ்வாறுதான் உண்மையான சமூக அக்கறைக் கொண்டவர்களும் நடந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கலாம்.

கணிணி வலையமைப்பில், கிடைக்கப்பெறுகின்ற இணையத் தளங்களில் "கூர்ப்பின் பாதையில் ஆணும் பெண்ணும்" என்றவாறான நகைச்சுவைத் துணுக்குகளை அள்ளி வழங்கினாலும் தகவல் அடிப்படையிலேயேயாயினும் பெண்களை சிறுமைப்படுத்துவது என்பதில் மாற்றுக் கருத்துக்கள் நிலவமுடியாது. அத்துடன் வாராந்த பத்திரிகைகள் பெண்களின் பாலியல் நடவடிக்கைகளையும், அந்தரங்கங்களையும் தொடர் அங்கங்களாக பிரசுரித்து பெண்களை சிறுமைப்படுத்துவதில் மகத்தான பங்களிப்பை இம்மியளவும் குறையாது மேற்கொண்டு வருகின்றன.

பெரும்பாலும் வாசகர்கள் மத்தியில் குதூகலத்தைத் தோற்றுவிக்கும் வகையில் நகைச்சுவையுணர்வுடன் இச்செய்திகள் எழுதப்படுகின்றன. செய்திகளை சுவையுடன் தர அதிர்ஸ்டவசமாக (துரதிருஷ்டவசமாக) இதழ்களில் ஒரு முழுப்பக்கம் குறைந்தது அரைப் பக்கமாவது ஒதுக்கப்படுகின்றன.

சிங்கள நாளிதழ்களில் பின்வருமாறு இச் செய்திகளுக்கு தலைப்பும் இடப்படுகின்றன.

**லங்காதீப**

தெய்யோ சாக்கி
(கடவுளின் சாட்சியாக)

**திவயின**

எம அப்ப லோக்கய
( இது தான் எம் உலகம்)

**தினமின**

மெஹெம லோக்கய
(இப்படியும் உலகம்)

என்றவாறு கவர்ச்சிகரமாகத் மக்கள் மத்தியில் செய்திகள் கையளிக்கப்படுகின்றன. வாசகர்கள் மத்தியில் இவ்வாறான தலைப்புடன் கூடிய செய்திகளுக்கு பெரும் வரவேற்பு காணக்கிடைக்கின்றது. குறிப்பாக ஆண்கள் மத்தியில் - இவை நகைச்சுவையாக எழுதப்படுவதால் ரசித்துச் சுவைத்து உள்வாங்கப்படுகின்றது. இலாபத்தை நோக்காகக் கொண்டியங்கும் அடிப்படையில் பரவலாக மக்களைத் திசைதிருப்ப இம் முறை சாத்தியப்படுகின்றது. அதேவேளை இச்செய்திகள் குற்றமிழைக்கும் ஆண் சமூகத்திற்கு சார்பானதாக அமைகின்றது.

கீழே குறிப்பிடப்படும் செய்தி மகளின் சித்திரவதைகளை தாங்க முடியாத ஒரு பெண் தன் உடமைகளை எடுத்துக் கொண்டு மகனின் வீட்டிற்குச் செல்லும் போது மகளினால், தாயின் தொலைக்காட்சிப் பெட்டி எடுக்கப்பட்டு அதற்கு பதில் கல்லொன்று வைக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

இச்செய்தியை லங்காதீப பத்திரிகையும், திவயின பத்திரிகையும் வெவ்வேறு தினங்களில் பிரசுரித்த விதம்.

<u>லங்காதீப</u> -"...தனது மகளின் வீட்டில் தங்கியிருந்த 74 வயதான தாய், மகளின் சித்திவதைகளிலிருந்து மீளும் முகமாக தன் பொருட்களை எடுத்து மகனின் வீட்டிற்குச் சென்றதுடன் மகளின் வீட்டிலிருந்து பெட்டியொன்றில் இட்டு எடுத்து வரப்பட்ட தொலைக்காட்சியை மகனின் வீட்டில் வைத்து பார்க்கும் பொழுது அத் தொலைக்காட்சிப் பெட்டி பெரிய கருங்கல்லாக மாறிய சம்பவம் பற்றி வடக்கு களுத்துறை பொலிசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு களுத்துறை பனாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த இந்த தாய் பொலிசில் பின்வருமாறு முறையிட்டுள்ளார்.

நான் மகளின் வீட்டில் தங்கியிருந்தேன். மகள் என்னைத் துன்புறுத்தியதால் நான் மகன் வீட்டிற்குச் செல்லத் தீர்மானித்தேன்.

இதன்படி நான் எனக்குரிய பொருட்களை எடுத்து வந்தேன். தொலைக்காட்சியினையும் பெட்டியொன்றில் எடுத்து வந்தேன். மகனின் வீட்டில் வைத்து பெட்டியைத் திறந்து பார்க்கும் போது அதில் தொலைக்காட்சிப் பெட்டிக்கு பதில் பெரிய கருங்கல் ஒன்று காணப்பட்டது.

பெட்டியினுள் கல்லொன்றை வைத்து விட்டு மகள் தொலைக்காட்சிப் பெட்டியை எடுத்துள்ளார்..."

(93.01.14)

<u>திவயின-</u> 70 வயதான தாய் இறுதிக் காலத்தை பிரச்சினையின்றி கழிப்பதற்கு மகளின் வீட்டிற்கு சென்றிருந்தார். மகள் அவருக்கு தொல்லை கொடுக்கத் தொடங்கினார். மகளின் தொல்லைகளைத் தாங்கவொணாத தாய் தன்னுடைய சொத்துக்கள் மற்றும் பொருட்களை எடுத்துக் கொண்டு மகனின் வீட்டிற்குச் சென்றார். மகனின் வீட்டிற்குச் சென்று அவர் தொலைக்காட்சியை வைத்த பெட்டியை திறந்த பார்த்த பொழுது அது கல்லாக மாறியிருந்தது. இது பற்றி அத் தாய் அழுது புலம்பிக் கொண்டு பொலிசுக்கு அறிவித்துள்ளார்.

தொலைக்காட்சிக்குப் பதில் கருங்கல்லை மகளுக்கு வழங்கிய மகள் பற்றி பொலிசாரினால் மேலதிக விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது.

சுருங்கக் கூறின் பெண்களை சிறுமைப்படுத்த பத்திரிகைகள் இந்தளவு வாய்ப்பினைத் தாராளமாக வழங்குகின்றன.

பெண்ணியம் ஒரு கல்வியாகி வரும் இக்காலச் சந்தர்ப்பத்தில் தொடர்பூடகங்களில் வெளிப்படுவது தொடர்பூடகக் கட்டமைப்பில் ஆணாதிக்க வேர்கள் புரையோடிப் போயிருப்பதையே கோடிட்டுக் காட்டுகின்றது.

தொடர்பூடகங்களில் உள்ள பெண்கள் எண்ணிக்கை, இவர்களில் தீர்மானம் எடுக்கக் கூடிய மட்டத்தில் உள்ள பெண்கள் எண்ணிக்கை, அவ்வாறான மட்டத்தில் உள்ள பெண்கள் கொண்டிருக்கும் கருத்தியல்கள், பார்வைகள் என்பன இவ்விடயத்தில் தாக்கம் செலுத்துகின்றது. அத்தோடு "பெண்ணியம் என் வாழ்க்கையோடு இணைந்தது. மனிதர்கள் இழிவுபடுத்தும் போது அதை சகித்துக் கொண்டிருப்பது சாத்தியமில்லை" என பெண்ணிய எழுத்தாளரான அம்பை குறிப்பிடுவதனைப் போன்று இந்த அவலங்களை சகித்துக் கொள்ள முடியாத பெண்களும் தொடர்பூடகங்களில் தம் பங்களிப்பைச் செலுத்தல் வேண்டும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் பெண்களை இழிவுபடுத்தும், கொச்சைப்படுத்தும் செய்திகள், சொற்றொடர்கள் கூடிய வரையிலும் தவிர்க்கப்படலாம்.

**-ரத்னா**

---

✔ ஒக்.8ம்திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 11 மணியளவில் தெஹிவளையிலுள்ள ஓஷானிக்பீச் இன்என்ற ஹோட்டலுக்கு இளைஞர் ஒருவருடன்வந்த யுவதி ஒருத்தி மாலை 6.00 மணி அளவில் ஹோட்டல் அறையிலிருந்து பிணமாக மீட்கப்பட்டிருக்கிறாள். இந்த யுவதியை அழைத்து வந்த இளைஞர் இரவுணவு எடுத்து வருவதாகச் சென்றவர் மாலை 6 மணியாகியும் திரும்பி வரவில்லை. இவர்கள் மாலை 6 மணி வரையே அறையை எடுத்திருக்கிறார்கள். 6 மணியாகியும் இவர்கள் வெளியேறாததால் ஹோட்டல் நிர்வாகிகள் அறையைத் உடைத்துத் திறந்து பார்த்த பொழுது அந்தப் பெண் நிர்வாணமாக இறந்து கிடக்கக் காணப்பட்டார். அவரை அழைத்து வந்த இளைஞர் திரும்பி வரவேயில்லை. பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டிருந்தது.

இது ஒக்.12ம் திகதிய தினக்குரலில் இரண்டாம் பக்கத்தில் வெளியான செய்தி இது.

சாதாரணமாக தமிழ் ஆண்கள் ∴பெண்கள் ஹோட்டல் அல்லது லொட்ஜ் ஒன்றுக்குச் செல்வதென்றால் அடையாள அட்டை, பொலிஸ்பதிவு என்று கழுத்தை நெரிக்கும் ஒரு சூழலில்தான் இவ்வாறானதொரு சம்பவம் இடம் பெற்றிருக்கிறது.

அத்தகைய எல்லா அடையாளங்களையும் வைத்திருக்கும் அப்பாவிகளைக் கைது செய்து தடுத்து வைக்கும் பொலிஸாரின் அதியுயர் பாதுகாப்பு கெடுபிடிகள் இந்த பெண்ணின் கொலை விடயத்தில் எங்கு போய் முக்காடிட்டுக் கொண்டன?

கேட்க வேண்டிய கேள்வி அல்லவா அது?

✔ கிழக்குப்பகுதியின் வாழைச்சேனை, பொலநறுவை, நிலாவெளி கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் நால்வர் தம்புள்ள விருந்தினர் விடுதியில் பாலியல் வன்முறைக்குள்ளாகியுள்ளனர். இப்பெண்கள் நால்வரும் மத்திய கிழக்கில் வீட்டுப்பணிப்பெண்களாகத் தொழில் பார்த்து விட்டு நாடு திரும்பினர். கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி தமது சொந்த இடங்களுக்குப் பயணம் மேற்கொண்ட வேளை இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. நாட்டு நிலைமை காரணமாக இரவு வேளைகளில் அவர்களுடைய கிராமங்களுக்குப் பயணம் மேற்கொள்வது ஆபத்தானது என்ற கூறி இவர்களை வாகனச் சாரதிகள் விடுதியில் தங்க வைத்து இக்குற்றங்களை புரிந்துள்ளனர்.

மத்திய கிழக்கில் பணிப்பெண்களாக தொழில் புரிந்து விட்டு நாடு திரும்பும் பெண்கள் பற்றி சமூகத்தில் நிலவும் மதிப்பீடுகள் பற்றி புதிதாகச் சொல்லத் தேவையில்லை.

மத்திய கிழக்கில் இருந்து திரும்பி வரும் பெண்கள் கட்டுநாயக்காவிலிருந்து வீடு செல்லும் போது தம்புள்ளயில் வைத்து பாலியல் வல்லுறவுக்கும், வன்முறைகளுக்கும் உள்ளாவதும் தமது சொத்துக்களையும் பணத்தையும் பறி கொடுப்பதும் தொடர்ச்சியாகவே நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடர்ச்சியான போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க மகளிர் விவகார அமைச்சோ, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமோ என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருகின்றது?

பொலிஸாரும் படையினரும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

அவர்களுடைய வேலை மக்களைப் பாதுகாப்பதா என்ன?

✔ நுகேகொடைப் பகுதியில் மசாஜ் கிளினிக் என்ற போர்வையில் இயங்கி வந்த விபசார விடுதியைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுற்றி வளைத்து 27 யுவதிகளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் தொழில் தேடி கொழும்புக்கு வந்த வேளை பல்வேறு பிரச்சினையின் காரணமாக விபசார விடுதிகளில் சேர்ந்து சட்ட விரோதமான குற்றச்செயல்களில் ஈடுபட நேரிட்டதாக விசாரணையின் போது அவர்கள் தெரிவித்தனர்.

ஒக்.12ம் திகதிய தினக்குரல் (பக்கம் 04), வீரகேசரி (பக்கம் 08) லங்காதீப (பக்கம் 06) பத்திரிகைகளில் வெளியான செய்தி இது.

மசாஜ் கிளினிக்கில் வேலை செய்யும் பெண்கள் கைது செய்யப்படுவது தொடர்பாக தொடர்ச்சியாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

தொடர்ச்சியாக இந்தச் செய்திகளை அவதானிப்பவர்களுக்கு ஒரு உண்மை புலப்படும். அதாவது இந்தக் கிளினிக்குகளுக்குச் செல்லும் ஆண்கள் கைது செய்யப்பட்டதாக ஒரு போதும் செய்தி வருவதில்லை என்பது தான். பெண்கள் தான் இக்குற்றத்திற்காக கைது செய்யப்படுகின்றனர், தண்டனைக்குட்படுத்தப்படுகின்றனர். அங்கு 'சேவை'யைப் பெற்றுக் கொள்ள வரும் ஆண்கள், அவர்கள் ஆண்கள் என்ற ஒரே காரணத்தினால் கைதுக்கோ சமூக கீழ்ப்படுத்தல்களுக்குகோ தண்டனைகளுக்கோ உட்படும் சாத்தியம் அறவே இல்லை. அதேபோல், இந்தக் கிளப்புகளை போஷித்து வளர்க்கும் சிறு முதலாளிகள், அவர்களுக்குப் பின்னால் இருக்கும் அரசியல்வாதிகள், பொஸ்கள், மாமாக்கள் என்போர் கைது செய்யப்படுவதுமில்லை. அப்படிக் கைது செய்யப்பட்டாலும் எப்படியோ இச்செய்தியிடல்களிலிருந்து மிகக் கவனமாகத் தவிர்க்கப்பட்டு விடுவர்.

பதிலாக தமது வறுமை காரணமாகவும் அறியாமை காரணமாகவும் இதனுள் தள்ளப்பட்டு விடும் பெண்கள் தான் தொடர்ந்து தண்டிக்கப்படுகிறார்கள்.

உண்மையில் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தப்பி விடுகிறார்கள் அல்லவா?

✔ கோயிலுக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த 19 வயது யுவதியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் 07 இளைஞர்கள், எதிர்வரும் 14ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். காரைதீவு கடற்கரைக்கு அண்மையிலுள்ள பத்தினி அம்மன் கோயிலுக்குச் சென்று வரும் போது ஆள் நடமாட்டம் அற்ற பிரதேசத்தில் வைத்து பிரஸ்தாப இளைஞர்களால் மாறி மாறி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

ஒக்.12ம்திகதிய தினக்குரலில் (பக்கம்04) வெளியான செய்தி இது.

இப்பாலியல் வல்லுறவுச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் இந்தப் பெண்ணின் எதிரிகளோ, அந்நிய படையினரோ அல்ல.ஒரே கிராமத்தில்வாழ்ந்து அந்தப்பெண்ணை நன்கு அறிந்த பழகிய இளைஞர்களே இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களை இந்தக் குற்றத்தைச் செய்யத் துண்டியது எது? இந்தக் கேள்வி இங்கு பிரதானமானது. எமது சமூகத்தில் பெண் குறித்த பாத்திரம் என்ன? புனைவுகள் என்ன? பெண்ணுடைய பாத்திரத்தை வடிவமைப்பதில் தொடர்பு சாதனங்களின் பங்கு என்ன? குறிப்பாகத் தமிழ்த் திரைப்படங்களின் பங்கும் அந்தத் திரைப்படக் கருத்தியலை இவ்விளைஞர்களின் மூளைக்குள் திணித்து விடுவதில் செய்தித்தாள்கள் சஞ்சிகைகள் ஆகியன ஆற்றும் பங்கு என்ன? இந்தக் கேள்விகள் எழுப்பப்பட வேண்டியவை. இந்தச் சமூகவியல் ஆராயப்பட வேண்டியது. இதனை நாம் ஆராயாது போனால் இவற்றிற்கு விடை காண முடியாது.

✔ "இன்று பெண்க்ள் பெருமையாகத் தலை நிமிர்ந்து நிற்கின்றனர். பெண்கள் ஆண்களுக்குச் சமமாகக் களத்தில் நின்று போராடுகின்றனர். வீரம், தீரம், தியாகம் எனப் பெண்கள் ஆண்களுக்கு சளைத்தவர்களல்லர்" விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் பானு பேசிய பேச்சு இது.

1987ல் இந்தியப் படைகளுக்கு எதிராகச் சமர் புரிந்து விடுதலைப் புலிகளிலிருந்து பலியான முதலாவது பெண் போராளி 2வது லெப்டினன்ட் மாலதியின் நினைவு தினத்தை முன்னிட்டு பெண்கள் எழுச்சி தின வைபவமொன்றில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு பேசியிருக்கிறார்.

உண்மை தான். பெண்கள் ஆண்களுக்கு சளைத்தவர்கள் அல்ல என்பதை யுத்தகளத்தில பெண்கள் நிரூபித்து வருகிறார்கள்.

இங்குமட்டுமல்ல ஏற்கெனவே சர்வதேச அரங்கில் தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெற்ற பல நாடுகளில் அந்தப் பெண்கள் அவ்வாறு நிரூபித்திருந்தார்கள். ஆனால் துயரம் என்னவென்றால் யுத்தம் முடிவடைந்ததும் அப்பெண்கள் இறுதியில் சமையல்கட்டை நோக்கியே படையெடுக்க நேர்ந்தது.

இது எப்படி இங்கு தடுக்கப்படப் போகிறது. அதற்கான சமூக உத்தரவாதமென்ன? சமூகத்தின் கருத்தியல் தளத்தில் அந்த மாற்றத்திற்கான விதைகள் ஊன்றப்பட்டு விட்டனவா?

இவை கேட்கப்பட வேண்டிய கேள்விகள் அல்லவா?

நன்றி - நூலகத்திட்டம்



## பெண்+அழகு+சினிமா=பாலியல் சுரண்டல்!

# ஒருபாலுறவின் மீதான ஆண்மைய சிந்தனை சினிமாவிலும்!

I

கடந்த மே மாத சிங்கள, தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியான ஒரு செய்தி சர்ச்சையைக் கிளப்பியிருந்தது. அது என்னவெனில் களுத்துறையில் ஒரு லெஸ்பியன் சோடி தற்கொலை செய்து கொண்டதாம். ஆடைத்தொழிற்சாலையொன்றில் பணிபுரிந்து வந்த ரேணுகா (22), சுமனா (26) ஆகிய பெயர்களைக் கொண்ட இந்த இரு யுவதிகளும் மனமுடைந்த நிலையில் வீட்டாருக்கு பிக்னிக் போவதாகக் கூறிவிட்டுச் சென்று களுத்துறையில், களுகங்கை ஆற்றில் ஒருவரையொருவர் தழுவியபடி விழுந்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர். சடலங்கள் மறுநாள் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டிருந்தன. அவர்களது டயரியிலிருந்த வாசகங்கள் அவர்கள் இருவரும் தன்னினச்சேர்க்கையாளர்கள் என்பதை உறுதி செய்வதாக பொலிஸார் உறுதி செய்தனராம். இச்செய்தி மனித நேயமுள்ள பலரது மனங்களை உலுக்கச் செய்திருந்த சம்பவமாக இருந்தாலும் இது அப்பெண்களை தூற்றிக் கொச்சைப்படுத்தவும், அவர்களிருவருக்கும் "தேவடியாள்" பட்டம் கொடுக்கவும் வேறுபல பத்திரிகைகள் மற்றும் சராசரி மட்டங்களில் பின்னிற்கவில்லை.

II

கடந்த ஒகஸ்ட் மாதம் ஐலண்ட் பத்திரிகையில் வெளியான ஒரு செய்தியும் இப்படியான ஒரு சர்ச்சையை கிளப்பியிருந்தது. இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் கொழும்பில் லெஸ்பியன்களின் (பெண் தன்னினச் சேர்க்கையாளர்களின்) முதலாவது மாநாடு நடத்த திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதே அது. இச் செய்தி. இதுவும் அடுத்தடுத்த நாட்களில் வெளிவந்த ஐலண்ட் பத்திரிகையில் கடும் எதிர்ப்பைத் தாங்கிய கட்டுரைகள், கடிதங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இந்நிகழ்வுகள் இரண்டும் ஏற்கெனவே புனையப்பட்டுள்ள பாரம்பரியம், புனிதம், தூய்மை, குடும்ப அலகு என்கிற பெயரால் மோசமாக தாக்குதலுக்குள்ளாக்கப்பட்ட நிகழ்வுகள். இத்தாக்குதலினால் அடிபட்டுப்போன, வெளித்தெரியாமல் செய்யப்பட்ட விடயங்கள் அப்பெண்களின் சுயவிருப்பு, பாலியல் தெரிவு, பாலியல் ஜனநாயகம் போன்றவையே.

இந்த வகையில் இத்தாக்குதலுக்குப் புதிதாக இலக்காகி இருப்பது அண்மையில் வெளிவந்த சிங்களத் திரைப்படமான "சுரயான கினிகனி" (தேவமஞ்சம் தீப்பிடிக்கிறது) எனும் லெஸ்பியன்கள் பற்றிப் பேசும் திரைப்படமாகும். இந்த



இடத்தில் நமது கவனம் சிங்களத் திரைப்படச் சூழலில் ஏற்பட்டிருக்கிற இந்த பாலயல் குறித்த கருத்தாடலே.

**ADULTS ONLY**

"18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டும்", "வயது வந்தவர்களுக்கு மட்டும்", "கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்"

இப்போதெல்லாம் இலங்கையில் திரையிடப்படும் சிங்களத் திரைப்படங்களில் இந்த வாசகங்கள் இல்லாத திரைப்படங்களை லேசில் காண மாட்டீர்கள்.

தணிக்கைக்கு உட்படாத, தணிக்கை சபையின் X சான்றிதழ் பெறாமல் வெளிவரும் சிங்களத் திரைப்படங்களை லேசில் காண முடியாது. இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இந்தத் தணிக்கையானது பாலியல் காட்சிப்படுத்தல்களிலேயே பிரயோகிக்கப்பட்டுவருகிறது.

சிங்களத் திரைப்படத் திசைவழியின் புதிய பரிமாணமாக இந்த போக்கைக் காணலாம். பத்திரிகை விளம்பரங்கள், தொலைக்காட்சி விளம்பரங்கள், சுவரொட்டிகள், திரையரங்குகளின் வாசலில் வைக்கப்படும் கட்அவுட்கள் என்பவற்றில் கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற வாசகம் பொறிக்கப்படுகிறது. திரையரங்கு கட்அவுட்களில் படுக்கையில் இருவர் அரை நிர்வாணமாக காட்சிப்படுத்துவது என்பது கடந்த அரை தசாப்தகாலமாகவே ஒரு குறியீடாக ஆகிவிட்டிருக்கிறது.

### சினிமா சந்தையில் பாலியல்

திரைப்படத்துறையில் முதலிடுபவர்கள் இந்த போக்கை கிரமமான முறையில் தொடர்ந்து வருகிறார்களென்றால் இது எந்தளவுக்கு லாபத்தைக் கொட்டிக்குவிக்கிற வியாபாரமாக "பாலியல் விவகாரங்களை விற்றல்" என்பது ஆகிவிட்டிருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது. இவ்வாறான திரைப்படங்கள் கலைப்படமாகவும், முற்போக்குதிசைவழியைக் கொண்டிருக்கிறது என்றும் கற்பிதம் செய்யப்பட்டிருப்பது தான் பல பார்வையாளர்களை தொடர்ந்து தக்கவைத்திருப்பதன் ரகசியம். எனவேதான் இது இன்றைய சிங்களத் திரைப்படத்துறையில் பெரும்போக்காகவே ஆகிவிட்டிருக்கிறது.

1993இல் எகே வைரய திரைப்படம் வெளிவந்த போது வயது வந்தவர்களுக்கு மட்டும் என்கிற லேபலுடன் திரையிடப்பட்ட இத்திரைப்படத்தைத் தொடர்ந்து "எகே வைரய-2", "ராகய உனுசும்", " வியரு கெஹனியக்", "அக்கய் நங்கிய்", "கேர்ள் பிரன்ட்", "உனுசும் ராத்திரிய" என தொடர்ந்து திரைப்படங்கள் வெளிவந்தன. இத்திரைப்படங்களுக்கே என்று அப்போது சில நடிகைகளை பயன்படுத்தினர். சுமனா கோமஸ், அனுஷா தமயந்தி, சந்தி ரசிக்கா போன்றோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சமீபத்தில் வெளிவந்த திரைப்படங்களில் அதிகம் பேசப்படும் படமாக கொள்ளப்பட்டது "பஹூ பாரியா" (பல மனைவிகள்) எனப்படும் திரைப்படம். இத்திரைப்படத்தில் பிரபலமான கதாநாயகி சங்கீதா பாலியல் காட்சிகளில் நடித்திருந்தார். இது பற்றிய விவாதங்கள் திரைப்படத் துறையினர், தொடர்புசாதனங்கள், ஏன் பெண்ணிய அமைப்புகள் மட்டத்தில் கூட நடத்தப்பட்டன. பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பின் (Women & media Collective) ஒன்றுகூடலொன்றின் போது இது குறித்து மிகவும் சுவாரசியமான உரையாடலொன்றும் நடத்தப்பட்டது. அதில் பெண்ணியவாளர்கள், எழுத்தாளர்கள், நாடகக் கலைஞர்கள், சினிமா தொலைக்காட்சி கலைஞர்கள் என்போர் கூட கலந்து கொண்டு ஆரோக்கியமான விவாதமொன்றைச் செய்திருந்தனர்.

### சங்கீதா ஓர் உதாரணம்

சங்கீதா அப்படி நடிக்கவில்லை, அக்காட்சிகள் வேறு பெண்ணைக் கொண்டு எடுக்கப்பட்டு கலந்திருக்கிறார்கள் என்று சங்கீதாவின் தகப்பனார் ஒரு பத்திரிகைக்கு தெரிவித்திருந்த கருத்து குறித்து பத்திரிகையொன்று (சங்கீதாகிவிடம் பேட்டியொன்றை எடுத்தபோது) கேட்டபோது அவ்வாறு தான் பொய் கூற விரும்பவில்லை என்றும் அதனை தான் ஏற்றுத் தான் நடித்ததாகவும், அக்குறிப்பிட்ட கதைக்கு அக்காட்சி அவசியமாக இருந்ததென்றும் தெரிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து சங்கீதாவின் தகப்பனார் தற்கொலைக்கு முயற்சித்ததாகவும் கதைகள் அடிபட்டன. பாலியல் காட்சிகள், பெண் பற்றிய சித்திரிப்பு, என்பவை யாருக்கு அவசியப்பட்டிருக்கிறது? எந்தப் பிரிவினருக்கு எனப் பல விடயங்கள் அப்போது உரையாடப்பட்டன.

சங்கீதா நாட்டில் இல்லாததை வைத்து, இத்திரைப்பட வெளியீட்டு விழாவன்று நாட்டை விட்டு ஓடிப்போயிருந்தார் என்ற பிரச்சாரத்தை இங்குள்ள பத்திரிகைகள் செய்திருந்தன. இப்படியாக பாலியல் காட்சிகளில் நடிக்க வைத்து வியாபாரத்தை பெருக்கும் "ஆணதிகார உத்தி"க்கு பலியாக்கப்பட்டு இறுதியில் ஆணதிகார சூழலுக்கு எதிர்கொள்ளும் பொறுப்பும் அந் நடிகைகளுக்கு வந்து சேர்ந்தது. இது தான் இன்றைய உண்மை நிலை. சங்கீதா போன்றோரின் தூய்மை, கற்பு, புனிதம், என பல சர்ச்சைகளை பௌத்த மதத்துறவிகளும், பாரம்பரியம் பேசுகின்ற ஒரு

## சுரயான கினி கனி :
## தேவ மஞ்சம் தீப்பிடிக்கிறது

நகர்ப்புற சொகுசு பங்களா ஒன்றில் பலியக்கார எனும் பெண் (வீணா ஜயக்கொடி) தனது வீட்டுப் பணிப்பெண்ணான குமாரியுடன் (குமுதினி நிலவீர) தனியாக வசித்து வருகின்றாள். அதே வீட்டில் புதிதாக திருமணம் முடித்த இளந் தம்பதியான யமுனாவும் நிஹாலும் (சனோஜா பிபிலே-சிறியந்த மெண்டிஸ்) வாடகைக்கு தங்கியிருக்கின்றனர்.

கட்டைக் காற்சட்டை அணிந்த, சிகரட், விஸ்கி குடிக்கின்ற, கிளப் போய் வருகின்ற பெண்ணாக சித்திரிக்கப்படும் வீட்டுச் சொந்தக்காரி பலியக்கார ஒருபாலுறவில் நாட்டம் உள்ளவராக காண்பிக்கப்படுகிறது.

இளம் தம்பதியினரான யமுனாவும் நிஹாலும் குழந்தை பெறுவதை தள்ளி வைத்து வருகின்றனர். இதற்கு பாலியல் ஈடுபாட்டில் கணவன் அக்கறை காட்டவில்லை எனக் காட்டப்படுகிறது. குழந்தை பெறுவதில் மனைவி காட்டுகின்ற ஆர்வத்தின் காரணமாக அவ்வப்போது கனவனுடன் தர்க்கிக்க நேரிடுகிறது. அச்சந்தர்ப்பங்களில் ஒழுங்கான வருமானமற்ற நிலையில் தனது குடும்பத்தில் தங்கையின் திருமணத்துக்கான ஏற்பாடுகளை செய்யாது, தம் இருவருக்குமான குடும்பச் செலவுக்கே சம்பளம் போதுமான நிலையில் இருக்கையில் இது தேவைதானா என்று கேட்கிறான் கணவன். சம்பாதிப்பதில் கவனம் செலுத்துகிறான் கணவன். செய்து வரும் வேலையில் சம்பாத்தியம் காணாது என்பதால் ஒரு கட்டத்தில் இரவு வேலையும் செய்வதற்கு தீர்மானிக்கிறான். மனைவி கவலைப்படுகிறாள். இரவு வேலை ஒரு பங்களா வீட்டில் பாதுகாப்பு கடமைக்கு அமர்த்தப்படுகிறான்.

(அவ் வீட்டுச் சொந்தக்காரன் மனைவியை இழந்த வயதான நிலையில் ஒரு இளம் பெண்ணை மறுமணம் முடிக்கிறான். பணத்துக்காக கட்டிவைக்கப்படும் அவ்விளம் பெண்ணுக்கு ஏற்கெனவே உள்ள இளம் காதலன் இரவு கணவன் இல்லாத இரவு நேரங்களில் வந்து சந்தித்துப் போவதால் இரவுக் காவலனை விரட்டி விட்டு புது காவலனாக நிஹாலை சேர்க்கிறான். நிஹாலிடம் இவ்விடயத்தை கூறாமல் வேறு யாராவது உள்ளே வந்தால் சுட்டுக் கொன்று விடும்படியும் தான் மற்றதைப் பார்த்துக்கொள்வதாகவும் கூறி கைத்துப்பாக்கி ஒன்றை நிஹாலிடம் கொடுத்து வைக்கிறான். என்ற போதும் அந்த காதலன் இரு நேரங்களில் வந்து அந்த மனைவியுடன் பாலுறவு புரிந்து விட்டுச் செல்கிறான். இதனை தடுக்க முடியாதபடி "இதனை கண்டு கொள்ளாமல் இரு இல்லையேல் வேலை போகும்" என அந்த இளம் மனைவியால் நிஹால் மிரட்டப்படுகிறான். இதற்கு என்ன செய்வது என்கிற குழப்பத்தில் அவன் பணி புரிகிறான்.)

கணவன் வேலைக்குப் போனபின் யமுனா தனிமையில் இருக்கிறாள் என்பதை கவனிக்கிறாள் பலியக்கார. நிஹால் இன்னும் வரவில்லையா என்ற விசாரணையுடன், அந்தப் பக்கம் பாம்பு இருப்பதாகவும் யமுனாவிடம் கூறுகிறாள் பலியக்கார. தேவைப்பட்டால் அன்று இரவு தனது அறையில் உறங்குமாறு கூறுகிறாள். அவளும் அழைப்பை ஏற்று அந்த அறையில் உறங்கச் செல்கிறாள். கட்டிலுக்கு அருகில் தரையில் பணிப்பெண் உறங்குகிறாள். அவள் இச் செய்கையை ஆத்திரத்துடன் பார்க்கிறாள். அவளை சமையலறையில் உறங்குமாறு கேட்கிறாள் பலியக்கார அவள் மறுக்கிறாள். எஜமானியின் சொல் கேளாமல் இருக்கும் பணிப்பெண்ணை திட்டி மிதித்து சமையலறைக்கு விரட்ட முயற்சிக்கிறாள். மிதித்த காலை ஆத்திரத்துடன் கடித்துவிட்டுச் செல்கிறாள் அப்பணிப்பெண். இந்த காட்சிகளின் மூலம் அவள் பலியாகாரவுடனான பாலுறவுக்குப் போட்டியாக இன்னொருத்தி வந்துவிட்டாள் என்கிற பொறாமையும், பலியக்கார தன்னை கைவிட்டுவிட்டாள் என்கிற ஆத்திரமுமே காட்சிப்படுத்தப்படுகிறது.



'சுரயான கினி' வீனாவும் சனோஜாவும்

அன்று யமுனாவுடனான பாலுறவு சாத்தியமற்றுப் போகிறது.

இந்த முயற்சியில் தளராத பலியக்கார ஒரு நாள் இரவு கிளப்புக்கு அழைக்கிறாள் ஒரு கிராமிய பாரம்பரிய பின்னணியைக் கொண்ட யமுனா முதலில் மறுத்தாலும் பலியக்கார பேசி சம்மதிக்க வைக்கிறாள். கவுனை உடுக்க கொடுக்கும் போது மறுக்கும் யமுனாவுக்கு பலியக்காரவே சாரியைக் கழற்றி, கவுனை மாற்றிவிடுகிறாள். கிளப்பில் விஸ்கி குடிக்க கட்டாயப்படுத்துகிறாள் பலியக்கார. இரவு போதை நிலையில் வீட்டுக்கு கொண்டு வரப்பட்டு போதை நிலையில் இருக்கின்ற யமுனாவுடன் பாலுறவு கொள்கிறாள் பலியக்கார.

அடுத்த நாள் காலையில் யமுனா பலியக்காரவை திட்டித் தீர்க்கிறாள். பலியக்காரவும் திட்டுகிறாள். திட்டிக்கொண்டே அருகில் சென்று அணைத்து மீண்டும் வழிக்கு கொண்டுவருகிறாள் பலியக்கார.

இவ்வாறு இருவரும் பாலுறவு கொள்ளும் போது பணிப்பெண் வந்து பார்த்து விடுகிறாள். அவள் அழுகிறாள். குளியலறைக்குச் சென்று சுயஇன்பத்தில் ஈடுபடுகிறாள்.

(அந்தப் பகுதியில் இருக்கும் கடையொன்றின் சொந்தக்காரனான குனே அய்யா (சிறியந்த மெண்டிஸ்) இந்த வீட்டின் தனிமையை அவதானித்து தனது கடையில் கடன் உள்ள இளைஞனான 'விஜே'வை (மகேந்திர பெரேரா) அவ்வீட்டுக்கு அனுப்பி கொள்ளையிட நிர்ப்பந்திக்கிறான். அதற்கு சாதகமான முறையில் பலியக்கார விஜே அய்யாவிடம் தனது வீட்டுக்கு புல் அறுக்கும் வேலைக்கு யாரையாவது அனுப்பும்படி கேட்க விஜேவை அனுப்புகிறான். வேலைக்கு வரும் விஜே பணிப்பெண்ணை காதலிக்கிறான். இருவரும் கடிதங்கள் பரிமாறிக் கொள்கிறார்கள். இந்தக்கடிதம் ஒன்று பலியக்காரவின் கைக்கு கிடைத்ததும் பணிப் பெண்ணை நோக்கி "நீ என்னோடு படுத்தால் என்னோடு படு. வேறு எவனையாவது படுக்கத் தேடினால் பொல்லாதவளாக ஆவேன்" என உதைத்துவிட்டு விஜேவை வேலையில் இருந்து விரட்டி விடுகிறாள். தான் சொன்னபடி கொள்ளையடிக்காமல் வந்த விஜேவை குனே அய்யா மிரட்டுகிறான். பலியக்கார-யமுனா ஆகியோரை ஒன்றாகப் படுக்கையில் கண்ட குமாரி விஜேவிடம் வந்து சேருகிறாள். இருவரும் குனே அய்யா கடையில் இல்லாத சமயத்தில் பாலுறவில் ஈடுபடுகிறார்கள். அதனை பார்த்துவிடுகிறான் குனே அய்யா. இதனை வைத்து விஜேவை மிரட்டுகிறான். கடனையும் தராது, தனது வீட்டையே படுக்கையாக ஆக்கியதைக்கூறி தாக்குகிறான். எப்படியாவது கொள்ளையிடுமாறு காலக்கெடு வைக்கிறான்.)

ஒரு நாள் நிஹால் யமுனாவை படுக்கைக்கு அழைக்கும் போது அதனை அவள் மறுக்கிறாள். இருவருக்குமிடையில் கைகலப்பு நடக்கிறது. பலியக்கார இதில் தலையிட்டு நிஹாலை விவகாரத்து புரியுமாறு யமுனாவிடம் கூறுகிறாள். சட்டஆலோசனைக்கு கூட்டிச் செல்கிறாள்.

இந்த நிலையில் நிஹால் பணிபுரிந்த வீட்டில் ஒரு நாள் இரவு தனது எஜமானனின் இளம் மனைவியின் காதலன் வருகின்ற போது துப்பாக்கியை காட்டி திட்டி மிரட்டி விரட்டிவிட்டு ஆத்திரத்துடன் வருகிறான். வரும்வழியில் வீட்டு வாசலில் குனே அய்யாவை பார்க்கிறான். (விஜேவையும் குமாரியையும் கொள்ளையடிக்க உள்ளே அனுப்பி விட்டு வாசலில் காவலுக்கு இருந்த குனேவை) குனே அய்யாவை விசாரித்த போது கள்வன் ஒருவனை தேடிக்கொண்டிருப்பதாக கூறுகிறான் நிஹாலிடம். நிஹால் துப்பாக்கியுடன் எங்கே கள்வன் என மெதுவாகத் தேடிப் போகிறான். அப்படி ஒவ்வொரு அறையாக மெதுவாக திறந்து பார்க்கின்ற போது யமுனாவும்-பலியக்காரவும் பாலுறவில் ஈடுபடுவதைப் பார்த்துவிடுகிறான். இருவரையும் ஆத்திரத்துடன் கடுமையாக திட்டிக்கொண்டே பலியக்காரவை சுட்டுவிடுகிறான். நிஹால் என்ன தவறு செய்துவிட்டாய் என யமுனா நிஹாலை அணைத்து அழுகிறாள்.

நன்றி - நூலகத்திட்டம்



தரப்பினரும் கேள்வி எழுப்பினர்.

இந்த விவாதம் போய்க் கொண்டிருக்கும் போது தான் வரிசையாக இன்னும் சில திரைப்படங்கள் இதே வரிசையில் திரையிடப்பட்டன. அதில் முக்கியமாக பரப்பரப்பாக பேசப்பட்ட படம் "சுரயான கினி கனி" எனும் திரைப்படம்.



'பகுபார்யா'வில் ரஞ்சன் வசந்தி சத்துரானி

### முதல் ஒருபாலுறவு திரைப்படம்

இத்திரைப்படம் Fire திரைப்படத்தின் சாயலைக் கொண்டுள்ள பெண் தன்னினச்சேர்க்கை பற்றி பேசப்படும் ஒரு திரைப்படம்.

இலங்கையில் வெளிவந்த, தன்னினச்சேர்க்கை பற்றி பேசிய முதலாவது திரைப்படம் இது எனலாம். இதற்கு முன் பாலியல் விடயம் குறித்து எடுக்கப்பட்ட திரைப்படங்களில் சிறிய காட்சிகள் வந்து போயிருக்கிற போதும். அதனையே கருப்பொருளாக வைத்து எடுக்கப்பட்ட திரைப்படம் இதுவாகும்.

ஆனால் இத்திரைப்படத்தின் கருவானது தன்னினச்சேர்க்கைக்கு எதிரான, அப்பட்டமான பெண் பற்றிய தப்பபிப்பராயங்களை புனைகின்ற அதே ஆணாதிக்க உற்பத்திப் போக்கின் விளைவென்றே கூறமுடியும். இதனை அதன் இயக்குனர் எரங்க சேனாரத்ன தெளிவாக ஒப்புக்கொள்கிறார்.

"நான் தன்னிச்சேர்க்கையை நிராகரிக்கிறேன். எங்கள் சமூகச் சூழல் அதனை ஏற்றுக்கொள்வதில்லை. நானும் அதனை ஏற்றுக் கொள்வதற்கில்லை."

"தற்போதைய சூழலில் ஒருபாலுறவு குறித்து பேசப்பட்டதன் காரணம் அதற்கு சந்தையில் பெறுமதி இருக்கிறது என்று நீங்கள் அடையாளம் கண்டதால் தானே?" என கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு விடையளித்த எரங்க "1995இல் 'எகே வைரய" (அவளின் வைராக்கியம்) திரைப்படம் வெளியானது. 1993 காலப்பகுதியில் இப்படிப்பட்ட ஒரு திரைப்படத்தை எடுப்பது குறித்து நான் நினைத்திருக்க மாட்டேன்." என்கிறார்.[1]

"இது போலத்தான் பகுபார்யா திரைப்படத்தின் இயக்குனரான உதயகாந்த வர்ணசூரிய ஒரு பேட்டியில் சந்தையை புறக்கணித்து விட்டு ஒரு திரைப்படத்தை எடுத்துவிடமுடியாது. சந்தைக்காக நாங்கள் இவ்வாறான உத்திகளைக் கையாண்டாக வேண்டும்..."[2]

முதலாவது கூறிய எரங்க சேனாரத்னவின் கருத்திலிருந்து அத்திரைப்படம் நிச்சயம் லெஸ்பியன்களின் உரிமை பற்றிப் பேசவோ. அல்லது இதனை ஒரு ஆரோக்கியமான விவாதத்தை உண்டுபண்ணவோ எடுக்கப்பட்டதில்லை. மாறாக ஏலவே நிலைபெற்றிருக்கிற ஆணாதிக்க நிறுவனத்தின் மோகப்பசியை தீர்க்க எடுக்கப்பட்ட, லெஸ்பியன் எதிர்ப்பு பிரச்சாரத் திரைப்படமாகும்.

உண்மையிலேயே தற்போதைய சந்தையில் இப்படியொரு தலைப்பை நன்றாக விற்கலாம் என்பதால் தான் இப்படிப்பட்ட திரைப்படம் எடுக்கப்பட்டது என்பதற்கு வாக்குமூலமாகவே இப்படிப்பட்ட கருத்தைக் கருத முடிகிறது.

### பெண் சித்திரிப்பு

"சுரயான கினி கனி"யில் வீனா ஜயக்கொடியை கட்டைக் காற்சட்டை அணிந்த சிகரட், விஸ்கி குடிக்கிற ஒரு மத்தியதரவர்க்க, தனியாக வாழும் பெண்ணாகச் சித்திரிப்பதன் மூலம் ஏள்கெனவே இது ஒரு உயர் வர்க்க உறவு முறை என்கிற கற்பிதத்தைத்தான் மீளுறுதி செய்கிறது. அது தவிர தன்னில் தங்கியிருககும் பணிப்பெண், மற்றும் வாடகைக்கு குடியிருக்கும் பெண் ஆகியோரை தனது வர்க்க செல்வாக்கால் அதிகாரத்துவத்துடன் தன்னிச்சேர்க்கைக்கு உள்ளாக்குவதாகவும் காண்பிக்கப்படுகிறது. சனோஜாவை வீணா போதைக்குள்ளாக்கி பாலியலுறவு புரிவதாக காண்பிக்கப்படுவதன் மூலம் சனோஜா "பாவம் அப்பாவி" என்கிற கருத்தே



சங்கீதா

வடிவமைக்கப்படுகிறது. கணவன் பாலியலை தவிர்ப்தால் தான் சனோஜா வீணாவுடன் உறவை வளர்ப்பதாகக் காண்பிக்கப்படுகிறது. லெஸ்பியன் உறவு என்பது வெறும் பாலியல் சார்ந்ததென்று நிறுவுகிற வகையில் காட்சிகள் வரையறுக்கப்படுகின்றன. "மோசமான" பெண்ணிடமே இப்படியான நடத்தைகள் இருப்பதாக காண்பிக்கப்படுகிறது. இறுதியில் அவள் அழிக்கபடுவதன் மூலம் விட்டு வைக்கக்கூடாது என்கிற எண்ணக்கரு உருவாக்கப்படுகிறது. சனோஜாவின் கனவன் தொழில் பார்க்கும் வீட்டில் உள்ள பெண்ணும் ஒரு "நடத்தை கெட்டவளாகவே" காட்சிகள் கட்டமைக்கப்படுகின்றன. இது புராதன, பண்பாடு, கலாசாரம், மதம் சீரழிவு என்று புலம்பும் பலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய -சந்தையில் எடுபடக்கூடிய- எண்ணக்கரு. எனவே தான் இப்டியான ஒரு கதை சிருஷ்டிக்கப்பட்டு சந்தையில் விற்கப்பட்டுள்ளது.

### ஆணாதிக்கத்துக்கு துணை போகும் பெண் நிறுவனங்கள்

பாலுறவின் வடிவங்களும், நுட்பங்களும் சுதந்திரத் தெரிவிற்குரியவை. எந்தவித அதிகாரத்துவமற்ற முறையிலான, சமத்துவமான பாலுறவு எந்த வடிவத்தையோ, நுட்பத்தையோ கொண்டிருக்கலாம்.

இலங்கையில் தன்னினச் சேர்க்கை கிரிமினல் குற்றம் என்பது கவனத்திற்கொள்ளத்தக்கது. இது வரை பெண்கள் இயக்கங்கள் எதுவும் லெஸ்பியன் கருத்தாக்கத்திற்காக செயற்பட்டது கிடையாது. எம்மத்தியில் இருக்கும் பெண்ணியலாளர்கள் என்று கூறிக் கொள்வோர் பலர் லெஸ்பியன் உறவுக்கோ, செயற்பாட்டாளர்களுக்கோ ஆதரவாக குரல்கொடுத்ததுமில்லை. இதில் காட்டும் தயக்கங்களுக்கு முக்கிய காரணம். இலங்கையில் சகல பெண்கள் இயக்கங்களும் என்.ஜீ.ஓ வலையில் சிக்கியிருப்பதும், செயற்பாட்டுத் தளத்தில் தொலைநோக்குடனான பெண்கள் இயக்கங்கள் இல்லாததும், பெண்ணியலாளர்கள் என அழைத்துக் கொள்வோர் இதனைப் பற்றிப் பேசி சமூக ஐதீகங்களுடனும், வைதீக சக்திகளுக்கு முகம் கொடுக்க தயாரில்லாமையே என்றால் அது மிகையில்லை.

ஆண்மைய சமூக கட்டமைப்புக்கே இது வெற்றியைத் தந்துள்ளது.

பொதுவாகவே பாலியலானது பகிரங்க சொல்லாடலுக்கு உட்படுத்தக்கூடாத ஒன்றாக ஆக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு வைத்திருப்பதன் மூலம் இதிலுள்ள சமத்துவமின்மையையும், ஜனநாயகமின்மையையும் கேள்விக்குட்படுத்தாமல் பாதுகாக்க முடியும் என்று ஆணாதிக்கம் நம்புகிறது. எனவே தான் அடிப்படையில் நிறுவனமயப்பட்ட ஆணாதிக்கமானது பலமாக நிலைநாட்டவென மதம், கல்வி, சட்டம், நிர்வாகம், தொடர்பூடகங்கள், தத்துவம் என சகல வழிகளிலும் நிறுவியுள்ளது. இவை கேள்விக்குட்படுத்தவோ அல்லது கிளர்ச்சி செய்யவோ முடியாதபடி ஆணதிகார கட்டமைப்பு அதன் நசுக்கும் இயந்திரங்களை தோற்றுவித்துள்ளது. பெண் தனியான ஒரு ஆணுக்கு சொந்தமானவள் என்கிற சொத்துடமைக் கருத்தாக்கம் கேள்விக்குட்படுத்தப்பட்டால், அதற்காக நிறுவப்பட்டுள்ள குடும்ப அலகு சிக்கலுக்குள்ளாகும். அப்படியொன்றை ஆரம்பத்திலேயே என்ன விலைகொடுத்தும் நசுக்கிவிடுவது ஆணாதிக்கத்தின் வழிமுறை. மேற்தோற்றத்தில் இதனை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியாது. ஏனெனில் நிறுவனமயப்பட்டு நிலைபெற்றிருக்கிற ஆணாதிக்கமானது இப்போது நேரடியாக அது இறங்கத்தேவையில்லை. ஆணாதிக்கமயப்பட்ட அல்லது ஆணாதிக்கத்துக்கு பலியான பெண்களோ/பெண்ணிய இயக்கங்களோ இதனைச் செய்யும். மோதல் பெண்களுக்கிடையிலானதாகவும், பெண்கள் இயக்கங்களுக்கிடையிலானதும் என்பது போல வெளியில் தோற்றமளிக்கும்.

இந்த நிலைமையை விளங்கிக் கொணடால் தான் இதனைக் கடக்க முடியும்.

பொதுவாகவே பாலியலானது பகிரங்க சொல்லாடலுக்கு உட்படுத்தக்கூடாத ஒன்றாக ஆக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு வைத்திருப்பதன் மூலம் இதிலுள்ள சமத்துவமின்மையையும், ஜனநாயகமின்மையையும் கேள்விக்குட்படுத்தாமல் பாதுகாக்க முடியும் என்று ஆணாதிக்கம் நம்புகிறது. எனவே தான் அடிப்படையில் நிறுவனமயப்பட்ட ஆணாதிக்கமானது பலமாக நிலைநாட்டவென மதம், கல்வி, சட்டம், நிர்வாகம், தொடர்பூடகங்கள், தத்துவம் என சகல வழிகளிலும் நிறுவியுள்ளது.

1. "இஸ்க்ரா" 1999-யூலை 4 இதழில் வெளியான எரங்கவின் பேட்டி.
2. "லங்காதீப" 1999-ஏப்ரல் 9 இல் வெளியான உதயகாந்தவின் பேட்டி.

- சூரியகுமாரி, சரவணன், தேவகௌரி -

## நிர்வாணம் நிர்வாணம் தான்!

*சுமனா கோமஸ் என்பவர் இலங்கையில் 51 வருட சிங்கள சினிமா துறையிலேயே அதிகளவில் திட்டுதல்களுக்கு உள்ளானவர். அந்த திட்டுதலுக்கு முதுகெழும்போடு முகம்கொடுத்த முகம்கொடுத்துக்கொண்டிருக்கும் பெண் என்றால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். இது சுமனா கோமசுடனான உரையாடல்.*

*தணிக்கை சபையினரின் கைகளுக்கு அகப்பட்டு வெளியிடப்படும் திரைப்படங்கள் பற்றி "பாலியல் அலை" நிலவுவதாக கூறப்படுவது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

இதில் இருக்கும் முக்கிய பிரச்சினை கலை மற்றும் வர்த்தக முரண்பாடே. முன்னர் அனைவரும் என்னை நோக்கி அல்லவா திட்டினார்கள். இன்று அவர்களுக்கு எனனைத் திட்ட முடியாது. ஏனெனில் தற்போது ஏற்பட்டுவரும் அலை வளர்ந்து விரவி தொடர்ந்து வருகிறது. இன்று பாலியல் காட்சிகளில் நடிக்கத் துணியாத நடிகைகளும் இதில் நடிக்க வேண்டியேற்பட்டிருக்கிறது. நான் ஏகப்பட்ட தூற்றுதலுக்கு உள்ளாகி தனியாகவே வெட்டிய பாதையில் அவர்களும் போகத் தொடங்கியிருக்கிறார்கள். அது எனக்கு மகிழ்ச்சி. பலர் பகு பார்யா திரைப்படத்தை பார்த்து விட்டு வந்து கூறினார்கள், சுமனா நீ என்ன செய்திருக்கிறாய், நீ சங்கீதா செய்ததைப் போல செய்யவில்லையே என்று கூறினார்கள். நானும் அத்திரைப்படத்தைப் பார்த்து அக்கருத்தை உறுதி செய்துகொண்டேன்.

இருந்தாலும் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். எந்தவொரு நிர்வாண அல்லத பாலியல் காட்சிகளை கலா ரசனையுடன் கூடிய சட்டகத்துக்குள் கொண்டுவரும் ஆற்றலானது அந்தந்த திரைப்பட இயக்குனர்களின் அறிவாற்றலைப் பொறத்தே அமைகிறது. என்னைத் திட்டியவர்களிடம் நான் கேட்பது இதுதான். என்னுடைய காலை, அல்லது எனது மார்பகத்தை சைட் சொட்டிலும் காண்பித்திருப்பேன் இருந்தாலும் இவர்கள் என்னைவிட அதிகமாக வெளிக்காட்டியிருக்கிறார்கள். ஒரு காட்சியில் சங்கீதா தனது பாலுறுப்பு வரை ஆடையை அகற்றி நிர்வாணமாகின்றார். பார்வையாளர்களுக்கு அது அரைகுறையாக தெரிந்தாலும் 'ரஞ்சனுக்கு' அவை பார்த்து தெரிந்திருக்கும் அல்லவா? பார்வையாளர்களுக்கு பின் பகுதி தான் காண்பிக்கப்பட்டது. எப்படியோ எம்மவர்கள் மத்தியில் இருக்கின்ற பார்வை குழப்பகரமானவை.

*நம் நாட்டில் உள்ள விமர்சகர்கள் உங்களையும் சங்கீதாவையும் பற்றி இருக்கிற பார்வைகள் பக்கசார்பானவை என்று நாங்கள் கருதுகிறோம்.*



கலையாக இருந்தாலும், வர்த்தகமாக இருந்தாலும் நிர்வாணமானது நிர்வாணம் தான். சின்ன சின்ன வேறுபாடுகள் இருக்கலாம். சங்கீதாவினதும் எனதும் கால்களையும் மார்பகத்தையும் கலையென்றும் வர்த்தகம என்றும் பிரிப்பது அபத்தம். இதில் வித்தியாசம் இருப்பதாக கத்துபவர்கள் சினிமா துறையில் உள்ளவர்கள் தான். "எகே வைரய-1" வில் நடித்த ரசிக்கா அப்படியான காட்சிகளில் தான் நடிக்கவே இல்லையென வாதிட்டார். "எகே வைரய-2"இல் நான் சிறைச்சாலையொன்றில் சண்டித்தனமிக்கவளாகவும், தன்னினச்சேர்க்கையில் (டநளடியைெ) ஈடுபடுபவளாகவும் நடித்தேன்.

எனவே இவர்கள் தமது நலன்கள், மற்றும் அவ்வப்போதைய இருப்புக்காக வெவ்வேறு அர்த்தங்களைக் கொடுத்துக்கொண்டிருப்பவர்கள். அது போல சங்கீதா எப்படி நடித்தாலும் சங்கீதா அப்படி நடிக்கவில்லை என வாதிடுவதற்கே இத்துறையில் பலர் இருக்கின்றனர். எங்களுக்காக அப்படி வாதிடுவதற்கு எவரும் முன்வருவதில்லை ஏன் என்று இப்போது தெரிகிறதா? சிலர் சங்கீதாவை ரெடிக்கல் பெண் என்று கூட கூறினார்கள். ஆனால் சங்கீதாவை அப்படியான ஒரு ரெடிக்கல் பெண் என்று நான் ஏற்றுக்கொள்ளாததற்கு இரு காரணங்கள் இருக்கிறது. ஏன் சங்கீதா "பகுபார்யா" திரைப்பட வெளியீட்டு காட்சிக்கு வரவில்லை. அது போல அத்திரைப்படம் திரையிடப்பட்ட போது வீட்டிலேயே சங்கீதா இருக்கவில்லை. அவுஸ்திரேலியா சென்றுவிட்டார். ஏன் இதற்கு முகம்கொடுக்க பின்வாங்க வேண்டும். எனவே தான் எமது எமது விமர்சகர்களின் பிதற்றுதல்களை நான் பொருட்படுத்துவது கிடையாது.

அது போல "பகுபார்யா" திரைப்படத்தில் நடித்த ஒரு பிரதான நடிகர் கூறியிருந்தார். சங்கீதா கௌரவமிக்க குடும்பத்தைச் சேர்ந்தவராம். அவர் ஏனைய நடிகைகளைப் போல பாலியல் ஆசைக்காக நடிக்கவில்லையாம். ஏனையோர் பணத்துக்காக அப்படி நடிப்பார்களாம். ஆனால் சங்கீதா அப்படியில்லையாம். அதனை வாசகர்களை நம்பட்டாம். நான் கேட்க விருமபுகிறேன், சங்கீதா அத்திரைப்படத்தில் நடித்தது புண்ணியத்துக்காகவா? பொருளாதார பிரச்சினை பற்றியும் அந்த நடிகர் பேசியிருந்தார் அல்லவா? காம இச்சைகளுக்காகத் தான் நடிகைகள் பாலியல் காட்சிகளில் நடிப்பதாகக் கூறுவதும் அவரல்லவா? இன்றுவரை இந்த வகை சினிமா அலையில் நாங்களும் நடிக்கிறோம் என்பதைத் தவிர அந் நடிகர் கூறும் கதையைப் போல நாங்கள் நடிக்கவில்லை. அப்படி அவர் கூறுவாராயிருந்தால் அவருடன் நானும் படுத்து இருக்க வேண்டும். இந்த முரண்பாடானதும் குழப்பகரமானதுமான கதைகளுடன் நான் உடன்பாடில்லை.

*எமது நாட்டிலுள்ள பல நடிகைகள் சிலவகை திரைப்படங்களில் நடித்ததன் பின என்னென்னவோ கூறுகிறார்கள். அது போல அப்படி நடித்ததன் பின் அதற்கு தைரியமாக முகம்கொடுக்கிறார்களும் இல்லை. அதன்படி எமது நாட்டிலுள்ள பெண்களின் தைரியத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

எனக்கு அன்று கூறியவற்றையே இன்றும் கூறி வருகிறார்கள். அன்றைய சுமனா கோமஸ் தான் இன்றும் இருக்கிறேன். எனக்கு கூறப்படும் எதற்கும் நான் அசையாமல் முகம்கொடுப்பது பலருக்கு தாங்க முடியவில்லை. நான் செய்ததை நான் ஒப்புக்கொள்ளத் தயங்கவில்லை. பலர் "ஆசை பயம்" என்கிற ரீதியில் தான் தான் நடந்து கொள்கிறார்கள். எவராக இருந்தாலும் திரைப்படமொன்றில் நடிக்க முன்வரும் போது அதில் வரும் பாலியல் காட்சிகளில் நடிக்க ஒப்புக்கொள்ளவோ நிராகரிக்கவோ முழு உரிமையும் உண்டு. ஆனால் அதனை நடித்ததன் பின் அதனை எதிர்கொள்ளாதது தான் மிகவும் பிழையான விடயம்.

மேலும் நாங்கள் இப்படி பார்ப்போம். எமது நாட்டில் "பத்தினி அம்மா"க்களைப் போல பல நடிகைகள் இருக்கிறார்கள். அவர்கள் ஏழு எட்டு லட்சம் தருவதாகக் கூறி யாராவது அழைத்தால் அந்த அத்தனை "பத்தினி அம்மா"க்களும் நடிப்பார்கள். பகுபார்யாவில் சங்கீதா அப்படித்தான். வசந்தி சத்துரானி போன்ற இதுவரை முத்தக் காட்சிகளில் கூட நடிக்காத நடிகைகள் பெட்ரூம் காட்சிகளில் நடிக்கிறார்கள். அது போல அனைவருமே தற்போது உள்ள இந்த நிலைமையின்படி பிரசந்த விதானகே அல்லது வசந்த ஒபேசேகர போன்றோரின் திரைப்படங்களுக்கு (பாலியல் காட்சியுள்ள) ஏழு எட்டு லட்சங்களுக்கு நடிக்க வருகிறார்கள். இவர்கள் அனைவரும் போலித்தனமானவர்கள்.

(பாரதீசய 1999 யூலை இதழ்)

நன்றி - நூலகத்திட்டம்




# பாதை மூடிய படையினர்

மட்டக்களப்புக்கு வடமேற்கே 25கி.மீ தெலைவில் திகிலிவெட்டை கிராமம் இருக்கின்றது. இக்கிராமத்தையும் இதை அண்டிய இலுப்படி முன்மாரி, வட்டவான், சிறுதயன்கல், ஆயிலியடிச்சேனை கோராவெளி போன்ற கிராமங்களிலும் கிட்டத்தட்ட 750 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களுக்கான பிரதான போக்குவரத்துப் பாதையாக காலம் காலமாக சந்திவெளித்துறையே இருந்து வந்தது. சந்திவெளித்துறையில் இருந்து திகிலிவெட்டைக்கு 5 - 8 நிமிடமே ஆற்றில் இம்மக்கள் பயணம் செய்ய வேண்டும். ஆனால் 1995ம் ஆண்டு இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் குழுவினராலும், இவர்களுடன் சேர்ந்து காட்டிக் கொடுத்து செயற்பட்டு வந்த ரெலோவைச் சேர்ந்த துரைக்குட்டியாலும் இப்போக்குவரத்து பாதை தடை செய்யப்பட்டதுடன் 40 பேர் பயணம் செய்த வள்ளமும் இவர்களால் கொத்தி எரிக்கப்பட்டது. அன்றிலிருந்து இப்பகுதி மக்கள் தங்களது தேவைகளுக்கு புலி பாய்ந்த கல் கிரான் பாலத்தினூடாகவே தங்களது போக்குவரத்தை வைத்துக்கொண்டனர். உண்மையில் இந்த 750 குடும்பங்களுக்குமான தபாற்கந்தோர், வைத்திய வசதி, கூட்டுறவுச்சங்கம் என்பன சந்திவெளியிலேயே இருக்கின்றது. அரை மணித்தியாலத்தில் தங்களின் வேலைகளை முடித்துக் கொண்டு போய்ச் சேர வேண்டியவர்கள் 12கி.மீ- 15கி.மீ வரை மேலதிகமாக நடந்து வந்தே தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் இருக்கின்றனர். மழை காலத்தில் கிரான் பாலத்தின் மேலாக வெள்ளம் ஓடுவதனால் கால் நடையாகப் பயணம் செய்யமுடியாது. அதனூடாக தோணியிலே வரவேண்டும். தோணியில் செல்வதற்கு ஒருவருக்கு பத்து ரூபாய். நாளாந்தம் இருபது ரூபாய் தேவைப்படுகின்றது. உண்மையில் நாளாந்தம் கஞ்சிக்கே திண்டாடும் இம்மக்கள் இருபது ரூபாய் கொடுத்து பயணம் செய்ய எங்கு போவார்கள்?

அதுமட்டுமல்ல, பாடசாலை மாணவர்கள் இந்தக் காலத்தில் ஒவ்வொரு நாளும் இருபது ரூபாவுக்கு எங்கே போவார்கள். திகிலி வெட்டை கிராமத்தில் 5ம் ஆண்டு வரைக்கும் தான் கல்வி கற்கும் வசதி இருக்கின்றது. அதற்கு மேல் படிப்பதென்றால் சந்திவெளி கிரான் பாடசாலைகளுக்கே வரவேண்டும். கடந்த நன்கு வருடங்களுக்கு முன் 145 மாணவ மாணவிகள் இங்கு வந்து கல்விகற்றுச் சென்றிருக்கின்றார்கள். தற்போது 25 மாணவ மாணவிகளே இங்கு வந்து கல்வி கற்றுச் செல்கின்றனர். அத்துடன் 20 பேர் தங்களது உறவினர் வீடுகளில் தங்கி நின்று பாடசாலைக்கு செல்கின்றனர். இவ்வாறான நிலைமைகளால் இங்குள்ள பிள்ளைகள் சிறு பராயத்தில் தாய்தந்தையுடன் இணைந்து விவசாயக் கூலி வேலைகளில் ஈடுபடுகின்றனர் என்று இப்பகுதியில் சேவையில் ஈடுபடும் தொண்டர் நிறுவனமான தடாகத்தின் அறிக்கை ஒன்றில் இருந்து தெரிய வருகின்றது.

இதே வேளை அரங்க களப்பயிற்சியில் கலந்து கொண்ட மகேஸ்வரி என்ற யுவதி கூறுகிறார்: நான் சந்திவெளி சித்திவினாயகர் வித்தியாலயத்தில் ஆண்டு 11 வரைக்கும் கல்வி பயின்றேன். ஆனால் தொடர்ந்து பாடசாலைக்கு வந்து பரீட்சை எழுத முடியவில்லை. கிரான் பாலத்தினூடாகவே பாடசாலைக்கு வந்து போக நேர்ந்தது.



போவோம் அந்த நேரத்தில் கிரான் பாலத்தில் இருக்கும் இராணுவம் என்னையும் என்னைப் போல் தனித்துச்செல்லும் பிள்ளைகளையும் பிடித்து நீங்கள் புலி தானே என்று மிரட்டுவார்கள். கெட்ட வார்த்தைகளால் எங்களை கிண்டல் பண்ணுவார்கள். அதுமட்டுமல்லாமல் வீட்டிலிருந்து காலையில் ஆறு மணிக்கு வெளிக்கிட்டால் சந்திவெளிக்கு 10 மணிக்குத் தான் போய்ச் சேருவோம்.இந்த நிலைமைகள் எங்களது பாடசாலைப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க வழகோலியது.

இது இவ்வாறிருக்க, இங்கு 6 கிணறுகள் தான் இருக்கின்றன. ஒவ்வொரு கிணறும் 35 அடி தொடக்கம் 50 அடி வரை ஆழமுடையது. இருந்தும் தண்ணீரைக் காண்பது மிகவும் அரிது. இவர்கள் கோடை காலங்களில் குடிப்பதற்கு சந்திவெளிக்கோ அல்லது கிரானுக்கோ வந்து தான் தண்ணீர் எடுத்துச் செல்கின்றனர்.

விஷம் அருந்தியதன் காரணமாக ஒருவரும் பிரசவத்தில் 8 பேரும் அரவம் தீண்டி 13 பேரும் அவசர வைத்திய வசதி பெற முடியாமல் இறந்துள்ளார்கள் என தடாகம் நிறுவனத்தின் அதே அறிக்கையில் இருந்து தெரியவந்திருக்கின்றது.

அந்த அறிக்கையில் இப்பிரதேச மக்கள் விவசாயம், சேனைப் பயிர்ச் செய்கை, கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களில் ஈடுபடுபவர்கள். இவர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான சந்தை வாய்ப்பை பெறமுடியாமல் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் போக்குவரத்துப்பாதை சுற்றுப் பயணமாக இருப்பதால் உரிய நேரத்துக்கு சந்தைக்கு வரமுடியாததால் குறித்த பொருளுக்கான சந்தை வாய்ப்பை இழக்க நேரிடுகின்றது. இவ்வாறான நிலைமையினால் இப்பகுதி மக்கள் மென்மேலும் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்து வருவது மட்டுமல்லாமல் வறுமையினால் ஒரு வேளை சாப்பாட்டுக்கு கூட திண்டாட வேண்டிய நிலையே காணப்படுகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான பிரச்சினைகளை கருத்திற் கொண்டே இத்தடாகம் நிறுவனம் கடந்த ஒகஸ்ட் மாதம் 25ம் திகதி இப்பகுதி பிரதேச செயலாளரையும் பத்திரிகையாளர்களையும் சந்தித்து தங்கள் பகுதி மக்கள் படும் கஸ்ரங்களையும் வேதனைகளையும் எடுத்துக் கூறி சந்திவெளித் துறையினூடாக மீண்டும் போக்குவரத்து பாதையை திறக்கக் கோரினர். இதன்காரணமாக நான்கு வருடங்களுக்குப்பின் பழையபடி சந்திவெளி திகிலிவெட்டை வள்ளப் போக்குவரத்து ஆரம்பமானது. இப்பாதை ஆரம்பிக்க முதல் புலிகளுடனும் கதைக்கப்பட்டு அவர்களும் தாங்கள் இந்தப் பாதையை தங்கள் போக்குவரத்துக்காகப் பாவிக்கமாட்டோம் என்று உறுதி கூறிய பின்பே போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது. ஒரு நாளைக்கு 700 தொடக்கம் 800 பேர் வரை இதில் போக்குவரத்துச் செய்தனர். இராணுவத்தினரும் சந்திவெளித்துறைக்குச் சென்று பார்த்துவிட்டு புலிகள் இப்பாதையால் வந்தால் உங்களை வள்ளம் ஓட விட மாட்டோம் என்று கூறிவிட்டு வந்தனர். திடீரென செப்டம்பர் மாதம் 25ம் திகதி இராணுவத்தினர் பாதையைத் தடைசெய்தனர். காரணம் "ஏன் எங்களிடம் அறிவிக்காமல் பாதை திறந்தீர்கள்" என்பது அவர்களுடைய கேள்வி. இந்தக் கட்டுரை எழுதும் வரை மாணவர்களை தவிர வேறு எவரையும் இப்பாதையால் சென்றுவர இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. உண்மையில் புலிகளை சாட்டாக வைத்து அப்பாவி மக்களை துன்புறுத்துகின்ற ஒரு செயற்பாடே இங்கு நடைபெற்று வருகிறது.



ஜே.கே.வீ

## ஒளி சுடர்ந்த என் மனமும் நெருப்பெரித்த உன் மனமும்

தயக்கத்தினூடே நிகழும் வார்த்தைக்கணத்தில்
உன்னுடன் பேசாத நூறு சொற்கள் எழுதித் தீர்ந்தன மனதில்.
நாங்களோ
எமக்கு எப்போதோ பரிச்சயமான ஒற்றைச் சொல்லில்
மூன்று நிமிடங்கள் பேசினோம்.

அறையின் சுவரில்
இரைக்காக அலைந்து கொண்டிருந்தது பல்லி.
யுகங்களுக்கப்பாலான கவிதையொன்று
லட்சக்கணக்கான கிறுக்கல்களினடியில் உறைந்து போயிற்று.
பூக்கள் உதிர்ந்து காற்றில் மிதக்கின்றன:
காற்றோ முற்றத்தை அள்ளிச் செல்கிறது.

வானம் நீலநிறமாயிருக்கிறதென்று நானும்
அதே நீலநிறம்
பரவசங்களால் ஆகர்ஷிக்கப்பட்டிருக்கிறதென்று நீயும்
ஒருவருக்கொருவர் எண்ணக்கூடும்:
எனினுமென்ன
மனதில் எழுதிய சொற்களோ இந்தக் கணம் வரை
எந்த உருவமுமற்றுப் போயின நிழலில் கரைந்து.

௨

உனது முகம் பற்றிய படிமம்
உனது புன்னகையாய்- வண்ணத்துப்பூச்சியொன்றின்
சிறகைப்போல் - என்னுள் படபடக்கிறது.

இருவருமே தெரிந்துவைத்திருக்காத நாளொன்றில்
எப்போதோ பரிச்சயமான ஒற்றைச் சொல்லில் நாங்கள்
பேசக்கூடும் மீண்டும்:
காற்று அதில் எந்த வார்த்தையையும்
வானை நோக்கி இழுத்துச் செல்லாதிருந்தால்
மனமிடை எழுதிய சொற்களில் ஒன்றையேனும்
உன்னை நோக்கி வீசவே விரும்புவேன்:
மௌனம் சிதறியுடையும் அக்கணத்தில்
எனது சொற்களோ
தேவதைகள் வாழ்ந்துபோன வனம் போல
பூத்திருக்கும் உன்னுள்.

*போஸ்நிஹாலே*

☛ ☛ ☛

## தெருவிற் தொலைந்த நிரபராதிகளின் மீட்கவியலாப்பாடல்

மீந்திருந்த எல்லாச் சொற்களையும்
அவர்களை நோக்கி வீசியாயிற்று.
அவர்கள்
சிலுவையில் எழுதிய உனது முகம் பற்றிய கதைகளை
அவற்றில் தேடுகிறார்கள்.
எக்காலத்திலும் திரும்பிவராத அச்சொற்கள்
நீ ஒரு பறவையைப் போலிருந்தாய் என்பதைத் தவிர
வேறெதையும் கொண்டிருக்கவில்லை.

உன்னால் நேசிக்கப்பட்ட
நூற்றுக்கணக்கான கவிதைகளின் காதல் ததும்பும் வார்த்தைகளை
நான் வைத்திருந்தேன்:
குடிமயக்கத்திலும்
சிகரெட் புகை நாற்றத்திலும்
நீ எங்களோடிருந்ததற்கான அடையாளங்களை
நான் வைத்திருந்தேன் நான் வைத்திருந்தேன்.
அவர்களோ அவற்றில் மின்கம்பிகளைச் செருகினார்கள்
எல்லாம் முடிந்த பாழ் மௌனத்தில் விசமுட்களை ஏற்றினார்கள்:
அவ்வாறு நடக்காதென நானிருந்த கணத்தில்
பார்வையைப் பிடுங்கி
இந்தப் பிரபஞ்சவெளியில் ஒலியெழ வீசியதை நான் உணர்ந்தேன்.


குயில் தனது பாடலை பாலைவனங்களுக்கப்பால்
எடுத்துச்சென்று விட்டது.
அவர்களோ
எமது வாழ்வு பற்றிய அடையாளங்களனைத்தையும் கடலுக்கப்பால்:
யாருக்கும் தெரியாத உவர்க்காடுகளில் புதைத்துவிட்டார்கள்.
நான் உணர்கின்றேன்
நீயோ நானோ
எமது தாய்களின் கலைந்தகேஷத்தையும்
கலங்கித் ததும்பும் விழிகளையும்
அவர்களின் உள் விசும்பும் மன ஒலிகளையும்
இனி எப்போதுமே கேட்கவோ பார்க்கவோ போவதில்லை
சிறைக்கதவின் துவாரங்களுக்கு வெளியே.

**போஸ் நிஹாலே 03-1999**

*(இதழ் 180இல் வெளியான இக்கவிதையில் ஏற்பட்டிருந்த தவறுகள் காரணமாகத் திரும்பப் பிரசுரிக்கப்படுகிறது)*

நன்றி - நூலகத்திட்டம்

## வாசகர் சொ(ற்)வ்வடி



சரிநிகர் 181ல் 'அக்கரைப்பற்று துப்பாக்கிச்சூடு' என்ற கட்டுரையினை வாசித்த போது எழுந்த மனஓட்டங்களைத் தரலாம் என நினைக்கின்றேன். எம்.ஐ. உதுமாலெப்பை (பா.உ) பேசியது கடந்த காலங்களின் வேதனைகளைச் சுமந்த வார்த்தைகள். வார்த்தைகளை வெறும் தட்டையாகப் பார்க்கக் கூடிய ஒரு கட்டுரைக்கு எதிர்வினையாக எழுதுவது வேதனையானது.

சந்தோச முன்றலில் நானும் என் நண்பனும் நின்றிருந்தோம். என் நண்பர் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த நபரின் பெயரைச் சொல்லி இன்னாரா பேசுவதென்று "ஆம்" என்றேன். "நல்லாத் தான் பேசுறார்" என்றார். சற்று நேரத்தில் அருகே இருந்த தெருவில் இருந்த வந்த எத்திவைப்புடன் சில முதல்கூவல்கள் விழுந்தன. "நல்லாத்தான் பேசுறார்" என்று கூறிய என் நண்பனும் கூவத் தொடங்கினார். உடல்பருமன் கூடிய ஒருவன் தனது பின் பிருஸ்டங்களை பிடித்தபடி குதூகலித்து மத்தியவிதம் உண்மையில் சித்தசுயாதீனமான செயலாக இருக்க முடியுமா? அவ்வாறாக ஆரம்பித்த அவை எவ்வளவு சீராக திட்டமிட்டபடி பின் பகுதியில் பரவியது தெரியுமா? அடுத்ததாகக் கூட்டத்தில் பேசியவர் எவ்வளவு இலகுவாக விடயத்தை புரிந்துகொண்டு கூட்டத்திற்கு வந்தவர்களை இயன்றவரை முன்னகரச் சொன்னார். நான் அதன்பிறகு தான் கூட்டத்திற்காக போட்டிருந்த கதிரைகளின் கடைசிவரிக்குப் போய் நின்றேன்.

அக்கரைப்பற்று மக்கள் தான் வாக்களித்த தலைவருக்கு எதிராக முஸ்லிம் கட்சியின் 28 கூட்டங்களில் கிளறப்பட்ட கேள்விகளுக்கு பதில்வேண்டி காத்திருந்தனர். ஆனால், கூட்டத்தின் பின்பகுதியில் கூச்சல் அதிகரிக்கத் தொடங்கியது. பட்டாசுகள் கொளுத்தினர். பொலிசாரை கற்களால் அடித்தனர். உண்மையில் பொலிசாருக்கு அவ்வளவு சகிப்புணர்வு இருப்பது ஆச்சரியப்படக் கூடியதாய் இருந்தது. கூச்சலிட்டுக் கொண்டிருந்தவர்கள் அதில் ஒருவித பரவசமடைந்தவர்கள் போலிருந்தனர். பெரும்பாலானோர் கூட்டத்தின் முன்பகுதியை நோக்கி நகர்ந்தனர்.

மேலும் சொல்ல வேண்டிய ஒன்று. தனிநபர்களையும், எதிர்கட்சியையும் சாடிக்கொண்டிருந்தபோது எதிர்ப்பையும் கண்டனத்தையும் கூச்சிலிட்டுத் தெரிவித்ததாக கடாசும் வெட்கமற்ற வரியிலும் பொய் இருக்கின்றது. - தாம் செய்த அபிவிருத்திகளை வரிசைப்படுத்திவிட்டு "எங்களுக்கு இன்னும் செய்துவிட்டு சேட்டுக குளரை உயர்த்திக்கொள்ள ஆசை தான்." என்று கூறும்போதே நிலை குலையும் அளவிற்கு கூச்சலிட்டார்கள்.

இன்னும் சொல்வதான்றால் முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் தவிசாளரும் அக்கரைப்பற்றின் தேர்தல் காலப் பறவையுமான சேகு இஸ்ஸதீன் முஸ்லிம் கட்சியின் ஒவ்வொரு கூட்டத்திலும் கூறிக் கொண்டிருந்த விடயம் "நான் சிறு பறவை போல் என் சின்னச் சொண்டினால் எவ்வளவு சிரமப்பட்டு உங்களைச் சேர்த்து வைக்கிறேன். ஆனால், நீங்கள் ஒரே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் கூட்டம் நடந்ததும் எல்லாத்தையும் தலைகீழாய் புரட்டி விடுவீர்கள்". சேகு இஸ்ஸதீனுக்கு அந்த ஒரு கூட்டத்தையும் நடத்த முடியாமல் குழப்பி விட வேண்டும். அந்த ஒரு மனநிலையை அறிந்தே அவசர அவசரமாகக் கூட்டம் நடத்தப்பட்டிருக்க வேண்டும். முஸ்லிம் காங்கிரசின் கூட்டம் என்று கொழும்பில் வைத்து கேள்விபட்டதும் சேகு இஸ்ஸதீனுக்கு கைகால் புரியாமல் அக்கரைப்பற்றுக்கு புறப்பட்டது பறி இப்போது நினைத்தால் அவருக்கே வெட்கம் வரக் கூடும் இல்லையா?

கூச்சலிட்டவர்கள் கலைக்கப்பட்ட பின் மக்கள் கூட்டம் எவ்வாறான மனநிலையோடு இருந்தனர் என்பதற்கு அமைச்சர் அஷ்ரஃப்பின் உரைக்கான மக்களின் பிரதிபலிப்ப கரகோஷங்கள் தக்க சான்று. அந்த உரையில் துப்பாக்கி வேட்டுச் சப்தங்களில் கர்ப்பங்களில் அதிர்ந்துகொண்டிருக்கும் குழந்தைகளின் மனநிம்மதி இழப்புப் பற்றி பேசப்பட்டது. அந்த வார்த்தைகளில் நடந்த சம்பவங்களின் வருத்தம் தோய்ந்திருந்தது. "காலத்தின் கண்களில் இன்னும் ஒளி இருக்கிறது. நாம் போட்ட கோடுகள் வளைந்திருந்தால் அருகே நேரான கோட்டை இடுங்கள்" அதன்படி நடங்கள். அதன் வழி நடந்துபோவோம்'' என்று பேசப்பட்டது. முஸ்லிம் காங்கிரசின் கேள்விகளுக்கு இஸ்ஸதீன் மேடையில் விடையளிக்கத் தயார் என்றால் இஸ்ஸதீன் கேள்விகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் பதிலளிக்க தயார் என்று பேசப்பட்டது.

பிரச்சினைகளுக்கு போலிக் காரணங்களை காட்டுவது பிரச்சினைகளுக்கான தீர்வாக மாட்டாது. பிரச்சினைகளின் எல்லாப் பக்கங்களையும் அறிந்து அதற்கு விடை தேட முயலவேண்டும். பிரச்சினைகளை விளங்கப்படுத்தக் கூடிய அறிவாளிகளே அரசியல் வழி பதவிகளுக்கு அடிபோடும்போது இந்த நாட்களில் கற்றுத்தரும் பொருட்டு பலவீனப்பட்டுவிட்டது.

**அபூசைனப்**
**அக்கரைப்பற்று**

## தவறும் திருத்தமும்

சரிநிகர் இதழ் 181ல் வெளியான "தமிழும் தன்னியக்க கணனி மொழிபெயர்ப்பும்" என்ற கட்டுரையை எழுதியவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மோகன்ராஜ் அவர்கள். தவறுதலாக அவரது பெயர் விடுபட்டு விட்டது. தவறுக்கு வருந்துகின்றோம்.

ஆ-ர்

## சமாதானம் – எமது உரிமை
## அகில இலங்கை சுவரொட்டிப் போட்டி

இலங்கைத் திருநாட்டின் சிறுவர் பரம்பரையினருக்கு யுத்தத்தின் பேரழிவையும், சமாதானத்தின் தேவையையும் புலப்படுத்துவதனூடாக அம்மாணவர்களின் ஆக்கத்தினை விருத்தி செய்யவும், சமாதானத்தின் பங்காளிகள் என்ற வகையில் ஆசிரியர்களை சமாதானத்துறையில் ஊக்குவிக்கவும் "தேசிய ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிப் பிரிவின்" அனுசரணையில் சுவரொட்டிப்போட்டியொன்றினை ஆனமடுவ சிறுவர் மற்றும் இளைஞர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

**போட்டியின் தலைப்பு:**

1. சமாதானம் சிறுவர் எமது உடமை.
2. யுத்தத்தினால் பாதிக்கப்படும் சிறுவர் எமது எதிர்காலம்

போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

**வகுப்பு மட்டம்**

போட்டி நான்கு பிரிவுகளாக நடாத்தப்படும் 6,7,8ம் ஆண்டுகள் ஒரு பிரிவாகவும், 9,10,11ம் ஆண்டு இன்னொரு பிரிவாகவும், 12,13ம் ஆண்டு மூன்றாவது பிரிவாகவும் ஆசிரியர்களுக்காக தனித்து ஒரு பிரிவாகவும் நடாத்தப்படும்.

போட்டி நிபந்தனைகள்

* 40x60 செ.மீ. அளவிலான பிரிஸ்டல் போட் அல்லது அதற்கு சமமான கடதாசி மாத்திரம் பயன்படுத்தலாம்.
* பெஸ்டல், எண்ணை, வர்ணம், திரவ வர்ணம், என்பன பாவிக்கப்பட வேண்டும்.
* முழுப்பெயர், முகவரி, பாடசாலை, கல்வி கற்கும் ஆண்டு, பாடசாலை முகவரி, வயது என்பன அட்டையின் மறுபக்கத்தில் எழுதப்பட வேண்டும்.
* மேலே குறிப்பிடப்பட்ட தலைப்பின் கீழ் போட்டியாளர் விரும்பும் தலையங்கம் ஒன்றை இட்டுக் கொள்ளலாம்.
* ஆக்கங்கள் அனைத்தும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* சகல ஆக்கங்களும் 1999 - 10 - 31 திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

*** அனுப்ப வேண்டிய முகவரி:**

ஏற்பாட்டளர்,
அகில இலங்கை சுவரொட்டிப் போட்டி:
சிறுவர் மற்றும் இளைஞர் அபிவிருத்தி நிலையம்,
உஸ்வெவ வீதி, ஆனமடுவ 61500
தொலைபேசி 032-63446

* தெரிவு செய்யப்படும் சகல சுலரொட்டிகளும் எமது நிறுவனத்தில் பர்துகாத்து வைக்கப்பட்டு எமது நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்படும் சகல கண்காட்சிகளிலும் காட்சிக்கு வைக்கப்படும்.

# கிடைத்தது
# பிரதேச செயலகம் தானா?

கடந்த 26.06.99 அன்று அமைச்சர் அஷ்ரஃப்பும் அவரின் போராளிகளும் இறக்காமத்திற்குத் தனியான பிரதேச செயலகம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளார்கள் என்பதை அரச தொடர்பு சாதனங்கள் மூலம் மக்கள் அறிந்திருப்பார்கள்.

கடந்த பல வருடங்களாக ஐ.தே.க. ஆட்சிக் காலம் தொட்டு இறக்காகமம் மக்களின் முக்கிய தேவையாக பிரதேச செயலகமே இருந்து வருகின்றது. இறக்காமத்துக்குத் தனியான பிரதேச செயலகம் கொடுப்பதற்குரிய நில , சனத்தொகை, வளங்கள் தொடர்பான எல்லாத் தகைமைகளும் இருந்தும் இன்றுவரை அது அரசியல்வாதிகளால் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது.

என்றாலும் இறக்காமம் பிரதேச மக்கள் தொடர்ந்தும் சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்டே இருக்க வேண்டும் என்றும், அதுவே இறக்காம மக்களின் வாக்குகளைக் கொள்ளையடிக்கச் சிறந்த வழி என்றும் சம்மாந்துறை எம்.பியான முன்னாள் மஜீத் அவர்கள் கருதி வந்தார்கள். அவ்வாறே இறக்காமம் மக்களின் விருப்பு வாக்குகள் மரபுரீதியாக சம்மாந்துறை எம்.பிக்களுக்கே அளிக்கப்பட்டும் வருகின்றன.

இறக்காமக் கிராமத்தில் 80களின் பிற்பகுதியிலேயே உயர் கல்வி நிலையில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் எமக்குக் கிடைக்க வேண்டிய பிரதேச செயலகம் இன்னும் கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் விதை கொள்ளத் தொடங்கியது. அரசியல்வாதிகளிடமும் தொடர்ந்தும் பிரதேச செயலகம், பிரதேச செயலகம் என்றே இறக்காம மக்கள் கேட்டு வந்தார்கள்.

1977ல் புனர்வாழ்வு நிதியிலிருந்து பணம் பெற்று இறக்காமம் பிரதேசச் செயலகக் கட்டிடம் கட்டுவதற்கு அமைச்சர் அஷ்ரஃப் ஏற்பாடு செய்தார். அதன்படி கட்டப்பட்ட கட்டிடத்தை எந்தப் பொது நிர்வாக அமைச்சின் அதிகாரிகளுமின்றி (ஏன் அம்பாறை ஜீ ஏ. கூட வரவில்லை) வெறும் "கட்டடப் பிரதேச செய்லகம்" ஒன்றைத் திறந்து வைத்தார்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இறக்காமத்தின் கிழக்கு எல்லையான ஆலங்குளம், இலுக்குச்சேனை, வாங்காமம் போன்ற ஊர்கள் இறக்காம பிரதேசச் செயலகக் கட்டிடம் கட்டும்போதே அக்கரைப்பற்று பிரதேச மக்களால் திடீரென ஆக்கிரமிக்கப்பட்டதுடன், எந்தவித நிரந்தரவாசிகளுமற்ற இலுக்குச்சேனைக் கிராமத்துக்கு பொதுச்சந்தை, தபால் செயலகம் (இது முன்னர் அரசடிச் சந்தியில் இயங்கியது) வைத்தியசாலை (கட்டிடம் மட்டும்) என்பவற்றையும் அதாஉல்லா அவர்கள் கட்டி முடித்துவிட்டு இறக்காமம் மக்களுக்கு பிரதேச செயலகம் என்றால் "அது என் சவத்துக்கு மேல்தான் கொடுக்கப்பட வேண்டும்" என்றும் பகிரங்க மேடைகளில் பேசியும் வருகிறார். அத்துடன் நெற்காணி, கரும்புக்காணி போன்றவற்றைக் கொண்ட இலுக்குச்சேனை, ஆலங்குளத்துக்கு அவரின் நேரடிக்கண்காணிப்பில் ஏறாவூர் இடம்பெயர்ந்த மக்களை நிரந்தரமாகக் குடியேற்றியும் வருகின்றார். வாரத்தில் ஓரிரு முறை இக்கிராமங்களுக்கு அதாஉல்லா அவர்களே தனது பெஜிரோவில் உலா வந்து கண்காணித்துச் செல்கின்றார்.

இவ்வாறெல்லாம் மட்டுமல்ல. இறக்காமம் பிரதேச செயலகம் தொடர்பாக அரச வர்த்தமானியிலும் எந்தத் தகவலும் வரவில்லை. மேலும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணயிப்புக் குழுவும் காரைதீவுக்கு மட்டுமே சென்று பார்வையிட்டுத் திரும்பியுள்ளது. இறக்காமத்துக்கு வரவில்லை. இதையெல்லாம் வைத்துப்பார்க்கும்போது அமைச்சர் திறந்தது பிரதேச செயலகமா அல்லது பிரதேச கட்டிடமா என மக்கள் சிந்திப்பதில் நியாயம் உண்டு.

ஆனால், அமைச்சரின் "வாலுகள்" பிறப்புச் சான்றிதழ்கள், மாட்டுத்துண்டுகள் சமூர்த்திக் காட்டுகளை நமது ஊரிலேயே இனிப் பெற முடிவதாலும் டி.எஸ். ஐந்து நாட்களும் நமது ஊருக்கு வருவதாலும், இதுதான் நமக்குப் பிரதேச செயலகம் என்று கும்மாளமடிக்கின்றார்கள்.

எனக்குப் பெரிய ஆச்சரியம் மீள்பார்வைப் பத்திரிகைக் கூட (99 ஜூலை இதழ் 37இல்) இறக்காமத்துக்குப் பிரதேச செயலகம் கிடைத்து விட்டதாக செய்தி வெளியிட்டிருந்தது. எது எவ்வாறென்றாலும் இறக்காமத்துக்கு இன்னும் பிரதேச செயலகம் கிடைக்கவில்லையென்பது மட்டும் உண்மை.

இறக்காமம் அத்தாஹ்

## 9 வருட நினைவு: வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்காக அமைப்பு ஏற்பாடு செய்திருக்கும் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஒக் | 22ம் திகதி கொடி விற்பனை வாரம் ஆரம்பமாகும். |
| ஒக் | 23ம் திகதி பள்ளிவாசல் துறையிலுள்ள முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் புகைப்படக்கண்காட்சி இடம்பெறும். |
| ஒக் | 24ம் திகதி காலை 7மணிக்கு இலங்கை வானொலியில் வாரம் ஒரு வலம் நிகழ்ச்சி புத்தளத்திலிருந்து நேரடி அஞ்சல் செய்யப்படும். |
| ஒக். | 28ம் திகதி கொழும்பு பொது நூலகத்தில் புகைப்படக்கண்காட்சி இடம்பெறும். |
| ஒக் | 29ம் திகதி காலை மருதானை ஸாஹிரா கல்லூரி முன்றலிலிருந்து ஆரம்பித்து லிப்டன் சந்திவரை கவன ஈர்ப்பு பேரணியும் ஆர்ப்பாட்டமும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மாலை 4 மணி முதல் 7மணி வரை மருதானையிலுள்ள வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் பொதுக்கூட்டமும் நினைவு மலர் வெளியீடும் இடம்பெறும். |
| ஒக் | 30 ம் திகதி காலை 09.30 ரூபவாஹினியில் உதயதரிசனம் நிகழ்ச்சியிலும் |
| ஒக் | 30 ம் திகதி காலை 09.30 காலை 09.30 ரூபவாஹினியில் ஆயுபோவன் நிகழ்ச்சியிலும் |
| ஒக் | 31 ம் திகதி காலை 11.00 ரூபவாஹினியில் கேள்வியில் ஒரு வேள்வி நிகழ்ச்சியிலும் வடக்கு முஸ்லிம் வெளியேற்றப்பட்டது சம்பந்தமான நிகழ்ச்சிகள் நடைபெறும். |

நன்றி - நூலகத்திட்டம்

Registred as a News Paper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே'
-பாரதி

இல. 19,04, 01,01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

## யாரைத்தான் நம்புவதோ?

"நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வரவேண்டுமானால் - நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடிய சமாதானத்தைக் கொண்டுவரவேண்டுமானால் - அது ஒரு அரசியல் தீர்வு மூலமே சாத்தியம்" என்றும், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

"யுத்தத்தால் எமது நாட்டின் பொருளாதாரம் வெகுவாகச் சீர்குலைந்து விட்டது. அதை நான் முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தைக் காண்பேன்"

இது ஜனாதிபதி அவர்களால் அண்மையில் சீதுவையில் உரையாற்றியபோது தெரிவிக்கப்பட்ட கருத்து.

இவர்கள் இருவரும் இரு பெரும் அரசியல் கட்சிகளின் இன்றைய தலைவர்கள்.

இந்த நாட்டில் ஒருவர் அல்லது மற்றவர் என்ற ரீதியில் ஆட்சியமைக்கக் கூடியவர்கள்.

இருவரும் யுத்தத்தை நிறுத்துவது பற்றியும், சமாதானம் பற்றியும் பேசுகிறாகள்.

ஆனால், சமாதானத்திற்கான முயற்சிகள், வடக்குக் கிழக்கில் இன்று இராணுவம் செய்து கொண்டுவரும் நடவடிக்கைகளை குழப்புவதாகவே அமையும் என்கிறார் பேராசிரியர் கல்பகே அவர்கள். "இந்த நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக யுத்தத்தை நிறுத்திவிட்டோமானால் மறுநாளே பிரபாகரனுக்கு நாட்டின் ஒரு பகுதியைப் பிரித்துக் கொடுக்க வேண்டி வரும்" என்று கருத்து தெரிவித்துள்ளார்.

முதல் இருவரும் இந்த நாட்டின் முக்கிய தலைவர்கள் என்றால் மூன்றாமவர் இன்று எழுந்துவரும் சிங்கள இனவாத முகாமின் பிரதிநிதிகளில் ஒருவர். இவர்கள் 'சிங்களக் கமிசன்' அறிக்கையை இந்த நாட்டின் அரசியல் யாப்புக்கு மாற்றாக முன்மொழிபவர்கள். ஜாதிக்க சங்க சபாவின் மாதுலுவாவே சோபித தேரர், முன்னாள் ஜானாதிபதியின் செயலாளர் விஜேதாச, குணதாச அமரசேகர போன்றோர் இந்தக் குழாமைச் சேர்ந்தவர்கள். தத்துவார்த்த ரீதியில் இதே கருத்தைக் கொண்டுள்ள சிங்கள வீரவிதான அமைப்பினரும் கூட இதைத் தான் கூறிவருகின்றார்கள்.

இந்த நாட்டில் வாழ்கின்ற சிங்களவர்கள் பெரும்பான்மையினர். ஏனையோர் சிறுபான்மையினர். சிறுபான்மையினர் தங்களை சிறுபான்மையினராக ஒப்புக் கொள்வதில்லை. அவர்கள் தங்களையும் பெரும்பான்மையினருக்கு சமமானவர்களாகக் கருதுகிறார்கள். எப்படி ஒரு பெரும்பான்மையினமும் சிறுபான்மை இனமும் சமமாக முடியும்? இங்குள்ள பிரதான அரசியல் கட்சிகள் எல்லாம் சிங்களவர்களைப் பற்றிப் பேசுவதில்லை. அவை பேசுவதெல்லாம் சிறுபான்மையினரைப் பற்றித் தான். இந்த நாட்டினைத் துண்டாட விரும்புகிற சிறுபான்மையினருக்கு என்று இங்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. தம்மை சிறுபான்மையினர் என்று ஒப்புக் கொள்ளாததே அவர்களது தவறு. உண்மையில் இங்கு நிலவுவது ஒரு பயங்கரவாதப் பிரச்சினையே. பயங்கரவாதப் பிரச்சினையை எப்படி ஒரு பேச்சுவார்த்தையால் தீர்க்க முடியும். பயங்கரவாதிகளுடன் பேசுவதை எப்படி அங்கீகரிக்க முடியும்?

- இவைதான் இந்தக் குழுவினரின் கருத்துக்கள்.

இந்தக் குழு வெறும் சாதாரண குழு என்று ஒதுக்கப்படக் கூடிய ஒரு குழு அல்ல. இதில் பிரதான கட்சிகளைச் சேர்ந்த பலர் அங்கம் வகிக்கிறார்கள். ஆளுங்கட்சிகள், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்கள் இதில் அங்கம் வகிக்கிறார்கள். அல்லது ஆதரவாளர்களாக இருக்கிறார்கள். பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே ஐ.தே.க வின் செயற்கமிட்டியின் ஒரு உறுப்பினரும் கூட. 'பேராசிரியர் பீரிசும் மற்றும் சமாதானப் பிச்சைக்காரர்களும் சுலோகங்களுடன் நிற்கிறார்கள்' என்று ஏளனமாகப் பேசியிருக்கிறார். 'சமாதானத்தின் பெயரால் இந்த நாட்டைத் துண்டாடும் கனவை பிரபாகரன் ஒரு போதும் விடப்போவதில்லை என்பதை இந்தப் பிச்சைக்காரர்கள் அறிய மாட்டார்கள்' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கமோ, எதிர்க்கட்சியோ இத்தகைய கருத்துக்களைக் கூறுவோர் மீது எந்த விமர்சனத்தையும் முன்வைப்பதில்லை. இப்படிக் கூறும் தமது கட்சி உறுப்பினர்களை கேள்வி கூடக் கேட்பதில்லை. ஆனால், சமாதானம் பற்றியும், பேச்சுவார்த்தை பற்றியும் திரும்பத் திரும்பக் கூறி வருகிறார்கள்.

ஒரு நாட்டில் இவ்வாறான கருத்துக்களைக் கொண்டவர்களும் இருப்பது ஒன்றும் ஆச்சரியப்படுகிற விடயம் இல்லை. அதுவும் இனவாதம் ஒரு அரைநூற்றாண்டு கால நோயாகப் பீடித்துள்ள ஒரு நாட்டில் இப்படிப் பேசுபவர்கள் இருப்பது குறித்து வியப்படையத் தேவையில்லைத் தான். ஆனால், சமாதானம் பற்றிப் பேசும் ஒரு கட்சியின் உறுப்பினர்களே, அதுவும் உயர்மட்ட உறுப்பினர்களே இப்படிப் பேசுவதை அக்கட்சி அனுமதிக்க முடியுமா?

ஆனால், அவர்கள் அனுமதிக்கப்பட்டுத்தான் வருகிறார்கள்.

ஆக, யாரை நம்புவது?

சமாதானம் பற்றிப் பேசுபவர்களையா? சமாதானம் பேசுவோரை சமாதானப் பிச்சைக்காரர் என்போரையா?

யாரை ? ? ?

அல்லது யாரையுமே நம்ப முடியாதா?

களுவன்கேணி

## இன்னும் தொடரும் ராசிக் குழு அட்டகாசம் !

"எங்களை என்ன தான் அடித்தாலும் சுட்டாலும் நாங்கள் நேரடியாக ஒன்றும் செய்யமாட்டோம் என்ற நினைப்பில் தானே இந்த ராசிக்குழு எங்களை இந்தப்பாடு படுத்துகின்றது. எத்தனை நாளைக்கு இவர்களின் கூத்து என்று பார்ப்போம் என்று குமுறினார் ஒரு பெண்மணி.

அண்மையில் களுவன்கேணியில் நடந்த சம்பவத்தைப் பற்றி சரிநிகருக்காகத் தகவல் திரட்டச் சென்றிருந்த போதே இந்தக் குமுறலைக் கேட்கக் கூடியதாக இருந்தது. தேசிய துணைப் படையினாரின் (ராசிக்குழு) கோரக் கொலை வெறியையும், பழி வாங்கும் தன்மையையும் இப்படுகொலைச் சம்பவத்தில் தெளிவாகக் காணக் கூடியதாக இருந்தது. கடந்த மாதம் 28ம் திகதி துணைப்படையினரால் புலி உறுப்பினர் எனச் சுட்டுக் கொல்லப்பட்ட தேவன் என அழைக்கப்படும் மாணிக்கம் புவனேந்திரன் (26) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். பழிவாங்கும் நோக்குடனே இப்படுகொலைச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை தகவல்கள் ஊர்ஜிதப்படுத்துகின்றன.



நாகேஸ்வரி (வயது 14)

தேவன் என்கிற மாணிக்கம் புவனேந்திரனுக்குத் திருமணமாகி ஆறு வருடமாகின்றது. இவருக்கு இரண்டு பிள்ளைகளும் இருக்கின்றனர். இவர் திருமணம் செய்வதற்கு முன்னர் புலிகளுடன் சேர்ந்து செயற்பட்டவர். பின்னர் அதிலிருந்து விலகி திருமணம் செய்து தனது சொந்த இடமான களுவன்கேணியில் வசித்து வந்திருக்கின்றார். கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் இந்தக் கிராமத்துக்கு விடுதலைப்புலிகளின் பொறுப்பாளராக அதே கிராமத்தைச் சேர்ந்த விசு என அழைக்கப்படுகின்ற பொன்னையா வேலன் என்பவர் வந்திருக்கின்றார். இவர் கோரளங்கேணி பாக்கியராசா என்பவரின் வீட்டிலேயே மக்களை சந்தித்தும் விசாரணை நடாத்தியும் வந்தார். இவர் இந்த வீட்டுக்கு வரும் வேளையில் எல்லாம் பொன்னையாவின் மகள் கௌரியே(15) இவருக்கு இருக்கப் பாய் எடுத்து போடுவதும் தேனீர் கொடுப்பதையும் செய்து வந்தார். இத்தனைக்கும் கௌரியின் தகப்பன் 90ம் ஆண்டு வன்செயலில் காணாமற் போய்விட்டார். தாய் நான்கு பெண் பிள்ளைகளையும் வளர்க்க மில் வேலைக்கு சென்று விட்டார். இந்த சாதகமான சூழ்நிலை விசுவுக்கும் கௌரிக்கும் இடையே காதலை ஏற்படுத்தியது. இது நாளுக்குநாள் வளர்ந்து வர விடயம் எப்படியோ தேவனின் காதுக்கு எட்டியது. தேவனும் புலிகளில் இருந்த விசுவாசம் காரணமாக உடனடியாக விடயத்தை புலிகளின் மேலிடத்துக்கு ஊதி விட்டார். குட்டு அம்பலப்பட்டு விட்டது என்றிருந்த வேளையில் விசுவை மேலிடம் விசாரணைக்கு அழைத்தது. தனக்கு ஏதும் சிக்கல் ஏற்படுமோ என்று பயந்த விசு தப்பிச் சென்று புத்தளத்தில் உள்ள உடப்பு எனுமிடத்தில் போய் நின்றார். இது நடந்து மூன்று மாதம். இதுவே தேவனுக்கும் விசுவுக்கும் தீராத பகையாக மாறியது. தேவனை சுடுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்பே விசு உடப்பில் இருந்து வந்து கொம்மாதுறை முகாமிற்கு சென்று ராசிக்குழுவுடன் இணைந்துள்ளார். இணைந்து மூன்றாவது நாளே துவக்கோடு நின்று கொண்டு தேவனுக்குத் தூது விட்டிருக்கின்றார். 'உன்னைச் சுடுவது தப்பாது. கவனமாக இரு' என்று. தேவனுக்குத் இந்த தூது கிடைத்திருக்கிறது. இதை தேவன் பெரிதாக எடுக்கவில்லை இருந்தும் அவதானமாக செயற்பட்டிருக்கிறார். இந்த விடயத்தை மனைவியிடமும் தாயிடமும் சொல்லியிருக்கின்றார். சம்பவ தினம் ராசிக்குறுாப் ஊருக்குள் வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டவுடன் வீட்டில் இருக்காமல் எங்கயாவது போவம் என்று வந்திருக்கிறார். ஆனால் இடையில் இவர்களின் கண்ணில் பட்டு விட்டார். இவர்களிடம் பிடிபடக்கூடாது என்று ஓடியிருக்கிறார். ஓடியவர் திடீரென யோகராணி என்பவரின் வீட்டிற்குள் புகுந்து கொண்டார். யோகராணியின் (30) வீட்டிற்கும் கதவு இல்லை. கதவு போடுவதற்கும் வசதி இல்லை. யோகராணியின் கணவன் வடிவேலை 89ம் ஆண்டு ரெலோ உறுப்பினர்கள் சுட்டுப் விட்டார்கள். அன்றிலிருந்து யோகராணி மூன்று பிள்ளைகளையும் வளர்ப்பதற்கே கஸ்டப்பட்டுக் கொண்டிருந்தார். இந்நிலையில் வீட்டிற்குக் கதவு எப்படிப் போடுவது? வீட்டின் முன் மண்டபத்திற்குள் மகள் நாகேஸ்வரி (14) படித்துக் கொண்டிருக்க யோகராணி அருகில் அமர்ந்து அயர்ந்து தூங்கி விட்டாள். நாகேஸ்வரியும் நித்திரைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள். வீட்டின் வலது பக்க அறையில் யோகராணியின் மற்றப்பிள்ளைகள் ராஜேஸ்வரியும்(10), லெட்சுமணனும் (12) தூக்கம் வராமல் கதைத்துக் கொண்டு



யோகராணி (வயது 30)

இருந்திருக்கிறார்கள். அப்போது தான் ஒரு தேவன் ஓடி வந்து வீட்டு மண்டபத்துக்குள் புகுந்தார். சிறிது நேரத்தில் இரண்டு பேர் துப்பாக்கிகளுடன் வந்து மண்டபத்தின் இடது பக்க வாசலிலும், வலது பக்க வாசலிலும் நின்று சுடத் தொடங்கினார்கள்.

'வலது பக்க வாசலில் நின்று சுட்ட விசு அண்ணன் ஒரு குண்டை கழற்றி தேவன் அண்ணனுக்கு கிட்ட போட்டாரு. இன்னொன்றை கழற்றி அக்காக்கு கிட்ட போட்டாரு. மற்ற பக்கத்து வாசல்ல சபா அண்ணன் நின்று சுட்டாரு.' இவ்வளவையும் வீட்டு மூலைக்குள் நின்று பார்த்துக் கொண்டிருந்த யோகராணியின் பிள்ளகள் ராஜேஸ்வரியும், லெட்சுமணனும் சொன்ன கதைகள் இவை. வெடிச்சத்தம் முடிந்த பிறகு வாசலை விட்டு விலகி நின்று கதைத்துக் கொண்டிருக்கும் போது லெட்சுமணன் அக்கா நாகேஸ்வரியை காலில் பிடித்து இழுத்து கூப்பிட்டிருக்கிறார். அக்கா அசையவில்லை. லெட்சுமணன் பயந்து பக்கத்து அறையில் இருந்த மேசைக்கு அடியில் போய் இருந்து விட்டார்.

மண்டபத்திற்குள் மட்டும் 60க்கும் மேற்பட்ட குண்டு துளைத்த தடங்கள் இருக்கின்றன. யோகராணியின் வீட்டு அதே வேலியோடு தான் யோகராணியின் தாயும் தம்பியும் இருப்பது. வெடிச்சத்தம் கேட்க எட்டிப் பார்க்கும் போது தமக்கையின் வீட்டை சுற்றி ஆயுதத்துடன் ஆட்கள் நிற்பது தெரிந்தது. ஆனால் தாய் போக விடவில்லை. அரை மணித்தியாலத்தின் பின் ஆயுதங்களுடன் நின்றவர்கள் போன பின் தான் எல்லோரும் வந்து பார்த்திருக்கிறார்கள். யோகராணிக்கு தலையிலும் இடுப்பிலும் துப்பாக்கிச்சூடு பட்டிருக்கிறது. ஆனால் உயிர் இருந்திருக்கிறது. நாகேஸ்வரியும், தேவனும் இரத்த வெள்ளத்தில் இருந்திருந்தனர். பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீட்டிற்குள் பயத்தால் ஒடுங்கிப் போயிருந்தனர். யோகராணியை வெளியில் எடுத்து வந்த போது 'என்ர மூன்று பிள்ளைகளுக்காகவும் நான் வாழணும் என்ன காப்பாத்துங்க" என்று கூறியிருக்கிறார். தெருவெல்லாம் துணைப்படையினர் நின்றதால் இவர்களால் வெளியில் போக முடியவில்லை. அதிகாலை 2 மணியளவில் லெட்சுமணன் அக்காவும் செத்துப்போயிட்டா என்று கூறவும் யோகராணியின் மூச்சு அடங்கவும் சரியாக இருந்திருக்கிறது. மறுநாட்காலை துணைப்படை திரும்பும் போது தெருவில் நின்ற பெண்களுக்கெல்லாம் காதால் கேட்க முடியாத வார்த்தைகளால் திட்டிச் சென்றதாக அங்குள்ளவர்கள் கூறினார்கள்.

29ம் திகதி துணைப்படையினர் வந்து கொல்லப்பட்ட தேவன் புலி என்று சொல்லி தேவனின் உடலை எடுத்து செல்லும் போது விசு கோரளங்கேணிக்கு வந்து தனது காதலி கௌரியையும் கூட்டிச் சென்றிருக்கின்றார்.

யோகராணி புலிகளின் சினைப்பர் தாக்குதலாளியான தயா என்பவரின் சிறிய தாயாவார். ஏற்கனவே தயாவையும் குடும்பத்தையும் அழிப்பேன் என துணைப்படையைச் சேர்ந்த சபா எனப்படும் சௌந்தரம் கூறியிருக்கின்றார். இந்தச் சந்தர்ப்பம் இவர்களையும் குடும்பத்தோடு அழிப்பதற்கு சாதகமாகிப் போய் விட்டது.

இதே போன்று 19.07.99 அன்று பாக்கியராசா புண்ணியமூர்த்தி (17) என்ற மாணவன் தேசிய துணைப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். 23.02.99 நிமலரசு சிவகுமார் (15) என்ற மாணவன் இவர்களால் சுடப்பட்டு ஊனமுற்ற நிலையில் கல்வி பயில்கின்றார். இவ்வாறாக ராசிக்குழு எனப்படும் இந்தத்துணைப்படையின் அடாவடித்தனங்களும் அட்டகாசங்களும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இந்த அப்பட்டமான உண்மைகளை வெளியில் கொண்டு வருவதற்கும் யாரும் முன்வரவில்லை. வந்தால் தங்களுக்கும் ஏதும் ஆபத்து ஏற்படுமே என்ற ஒரு அச்ச உணர்வே இருக்கின்றது. இதனால் இங்கு இன்று வரை நடந்த உண்மைகள் உறங்கிக் கொண்டு இருக்கின்றன. இதற்கு சட்டமும் ஒரு வகையில் துணையாக இருந்து வருகின்றது.

வெளியிடுபவர் : ச.பாலகிருஷ்ணன், இல.18/02, அலோசாலை, கொழும்பு-03, அச்சுப்பதிவு : பிறின்ற் இன், இல.07, கெகட்டிய இடம், சிறிமல்உயன, இரத்மலானை. 12.10.1999